Annual Subscription Rs. 6 Vol. 7. No 49 10th January 1937 Price 2 As.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

ஜப்பானில் தக்காஹி என்னுமிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஒரு ஜப்பானிய விக்ரஹம். விக்ரஹத்தின் கைமேல் நிற்கும் மனிதர்களைக்கொண்டு அதன் பரிமாணத்தைத் தெரிந்துகொள்ளலாம்.



அடைவதற்கு இயற்கையான
விருப்பம்

வுட்வர்ட்ஸ்
கிரைப் வாடர்

குழந்தைக்கு
ஆரோக்கியத்தை தரும்

WOODWARD'S
GRIPE WATER

W WOODWARD LTD., LONDON. ENGLAND

நியூ யார்க்கிலுள்ள அமெரிக்க வேலையற்றோர் சங்க வாயிலில் வேலையற்றோர் காலியாக
விருக்கும் வேலைகளைப்பற்றிய அறிக்கைகளைப் படித்துக்கொண்டிருக்கின்றனர்.

அடிமையை மீட்ட அடிமை

(ஸ்ரீமான் எஸ். ரங்கராஜ ஐயங்கார்)

அட்டாலஸ் என்பவனின் நிலைமை மிகவும் பரிதாபகரமானதே. உயர்ந்த குடும்பத்தில் பிறந்த அவன் காலத்தின் கொடுமையால் ஒரு அடிமையாய் உழலும்படி நேரிட்டது. அவனது மாமன் பிரான்ஸ் நாட்டிலுள்ள லாங்கர்ஸ் நகரின் பிஷப். நல்ல செல்வாக்குள்ளவன். எனினும் அட்டாலஸ் துரதிர்ஷ்டவசமாய் அந்நாட்டில் படையெடுத்து அதில் குடியேறிய பிராங்கு ஜாதியாரில் ஒருவனிடம் அகப்பட்டுக் கொண்டு அவனுக்கு அடிமையாய் உழைத்தான்.

பிஷப்புக்கு தனது மருமகனை அடிமைத்தனத்திலிருந்து மீட்க ஆவல்தான். ஆனால் அட்டாலஸின் யஜமானனான பிராங்கு கேட்ட தொகை அவனது சக்திக்கு இயன்றதாயில்லை. "ஐயோ என் அருமை அட்டாலஸை மீட்க வழியில்லையே? என்ன செய்வது?" என்று அவன் பரிதவித்தான்.

அட்டாலஸ் மிகவும் இனிமையான ஸ்வபாவத்தினன். பிஷப் வீட்டிலுள்ளவர்கள்— வேலைக்காரர்கள், அடிமைகள் உள்பட —எல்லாரும் அவன் மீது அன்புகொண்டிருந்தனர். அவனுக்கு நேர்ந்த கொடிய ஸ்திதியை நினைத்து வருந்தாதவர் யாருமில்லை. பிஷப்பின் அடிமைகள் அவன் அடிமையாய் துன்பத்துக்காளானதைக் கேட்டு கண்ணீர் விட்டனர்.

லியோ என்பவன் பிஷப்பின் அடிமை. அவன் சமையல் செய்வதில் மிகவும் நிபுணன். வினயமான நடத்தையையும் யோக்கியமான புத்தியையும் உடையவன். அட்டாலஸின் மீது அவனுக்கு தேவதா விசுவாசம். அவன் துஷ்டனான பிராங்கினிடம் அகப்பட்டுக் கொண்டு தவிப்பதை நினைக்க நினைக்க லியோவுக்கு சகிக்கக் கூடாத வேதனையும் பரபரப்பும் ஏற்பட்டதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது. உடனே அவன் எப்படியாவது அட்டாலஸை மீட்க வேண்டும் என்று தனக்குள் தீர்மானித்தான். பிஷப்பிடம் சென்று தன் விருப்பத்தைத் தெரிவிக்கவே பிஷப், "அப்பா நீ போய் வா, ஆண்டவன் உனக்குத் துணைபுரிவாராக. என் மருமகனை நீ பத்திரமாய்க் கொண்டு வந்து சேர்த்தாயானால் உன்னை நான் அடிமையாகவே பாவிக்க மாட்டேன். என் சொந்த மகனைப்போல் கொண்டாடுவேன்" என்றான். அவன் கண்களில் நீர் ததும்பியது பிஷப்பின் ஆசீர்வாதத்தைப் பெற்ற லியோ தனது புனிதமான கருமத்திலே கருத்துடையவனாய் ஊரை விட்டுச் சென்றான்.

அட்டாலஸ் அடிமையாய் தவித்த ஊர் வெகுதூரத்திலுள்ளது. பல நாட்கள் பிரயாணஞ் செய்யவேண்டும். வழியில் கானகங்களும் ஆறுகளும் உள்ளன. அவற்றைக் கடந்த லியோ தனது இள யஜமானன் இருந்த பிரதேசத்தை யடைந்தான்.

அவன் கைக்கொண்ட காரியம் மிகவும் பிரயாசைக்கு இடமானது. மிகவும் அபாயமானது. ஏதாவது தவறுதல் ஏற்பட்டால் அவன் தன்னுயிரை யிழப்பதுடன் அட்டாலஸின் உயிரும் பலியாக வாங்கப்படும் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை ஆதலால் லியோ மிகவும் தந்திரமாகவும் ஜாக்கிரதையாகவும் நடக்க ஆயத்தமானான்.

முதலில் அவன் அட்டாலஸின் யஜமானன் வீட்டில் எப்படியாவது புகுந்து அவன் அங்கேயே பழக வேண்டியது அவசியம். அப்படிப் பழகினால் தான் தனது இளம் யஜமானனை சந்திக்கவும் அவனை மீட்கவும் அவனுக்கு சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

அதற்கு என்ன செய்வது?

லியோவுக்கு ஒரு முதல் தரமான யோசனை தோன்றியது. உடனே அவன் அந்த ஊரிலுள்ள ஒருவனிடம் சென்று, "ஐயா, நான் ஏழை நாதியற்றவன். எனக்குப் பிழைக்க வழி தெரியாது. (அட்டாலஸின் யஜமானனின் பெயரைச் சொல்லி) அவரிடம் என்னை நீர் அடிமையாக விற்று விட்டால் நான் அவரை யண்டிப் பிழைக்கலாம் என்று இருக்கிறேன்" என்றான்.

சற்று நேரத்துக்கெல்லாம் லியோ அட்டாலஸின் யஜமானன் முன் அடிமையாய் விற்பனைக்கு நிருத்தப்பட்டான்.

"உன்க்கு என்ன வேலை தெரியும்?" என்று வினவினான். அவனை ஆட்கொள்ள நினைத்த பிராங்கு "சமையல் செய்வதில் நான் மிகவும் அனுபவம் வாய்ந்தவன். என்னைத் தங்கள் சமையல் அறையில் விட்டுப் பாருங்கள். நான் தயாரிக்கும் போஜன வகைகளை ருசிபார்த்தபின் நீங்கள் என்திறமையை மெச்சுவீர்கள்" என்றான் லியோ.

பிராங்கு போஜனப் பிரியன். விதம் விதமான பக்ஷணங்களையும் போஜன வகைகளையும் செய்து கொடுக்கக் கூடிய சமையல்காரனை அவன் விடுவானா? உடனே அவன் "சரி. உன்னை அடிமையாய் வாங்கிக் கொண்டேன். நீ உக்கிராணத்துக்குச் சென்று சாமான்களைப் பார்த்துக்கொண்டு சமையல் வேலையைக் கவனி. சீக்கிரத்தில் இந்த வீட்டில் கல்யாணம் விருந்துகள் எல்லாம் வருகின்றன. உன் திறமையை எல்லாரும் மெச்ச வேண்டும்" என்று கூறினான். லியோவுடன் வந்த மனிதனுக்கு அடிமையின் கிரயம் கொடுக்கப்பட்டது. லியோவும் அடிமையானான்.

அட்டாலஸுக்கு தனது யஜமானனின் ஆடுமாடுகள் மேய்க்கும் வேலை. அவன் அவற்றை தினம் புற்றடங்களுக்கு ஓட்டிப்போய் அவற்றை மேய்த்துவிட்டு வருவான். மாட்டுக் கொட்டிலில்தான் அவன் உண்பதும் உறங்குவதும் வழக்கம். அவன் தப்பித்துச் செல்லாதபடி அவன்மீது மோசூல் வைக்கப்பட்டிருந்தது. லியோவை சந்தித்த பொழுது அட்டாலஸுக்கு உண்டான வியப்புக்கெல்லையே யில்லை. ஆனால் லியோ அவனை நோக்கி, "நாம் இருவரும் அன்னியர்கள் போல் நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அபாயம்" என்று சமிஞ்ஞைகள் மூலம் தெரிவித்தான். இதுகாறும் தனக்கு யாதொரு கதிமோக்ஷமும் இல்லையென்று ஏங்கிய அட்டாலஸுக்கு லியோவைக் கண்டபின் நம்பிக்கையும் தைரியமும் உண்டாயின. தன்னை மீட்கவே லியோ அங்கே வந்துள்ளான் என்பதை எளிதில் உணர்ந்து கொண்ட அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

லியோ கைதேர்ந்த சமையல்காரனல்லவா? வெகு சீக்கிரத்தில் அவன் தனது புதிய யஜமானனது அன்பையும் ஆதரவையும் பெற்றது ஒரு அதிசயம் இல்லை. தனது வினயமான நடத்தையாலும் மதுரமான பேச்சினாலும் அவன்வீட்டிலுள்ள எல்லாருடைய பிரியத்தையும் கவர்ந்துவிட்டான். அவன் பெயருக்கு அடிமையேயன்றி உண்மையில் அவன் வார்த்தைக்கு யாரும் இரண்டு சொன்னது கிடையாது.

இப்படி ஒரு வருடம் சென்றது "அடிமைக் கூத்தாடியும் கருமத்திலேயே கண்ணாயிரு"



பம்பாய் க்வாட்ராங்குலர் கிரிக்கெட் போட்டியாட்டத்தில் வெற்றிபெற்ற ஹிந்து கோஷ்டியினர்.

ந்த லியோவிற்கு எதிர்பார்த்த ஸந்தர்ப்பமும் நெருங்கியது. அன்று ஒரு பெரியதிருவிழா. பின்ராகின உறவினர்களும் நண்பர்களும் கூடியிருந்தனர். தடபுடலான விருந்து. லியோவால் தயாரிக்கப்பட்ட பதார்த்தங்களையும் பானங்களையும் மிதமிஞ்சி உட்கொண்டு களிப்படைந்த விருந்தினர் அவற்றை சிலாகித்துக் கூறினர். இரவும் வந்தது. அவரவர் படுத்துக்கொள்ள இடந்தேடிச் சென்றனர். அப்பொழுது சாப்பாட்டு மயக்கத்தால் புரண்டு கொண்டிருந்த அந்த வீட்டு மாப்பிள்ளை அங்கே வந்த லியோவை நோக்கி, "லியோ, உன் சமையல் ஜோராயிருந்தது. பாவம், உனக்கு ரொம்ப அலுப்பு. இப்பொழுது எங்கே போகிறாய்" என்று வினவினன்.

லியோ சிரித்துக்கொண்டே, "எனக்குப் போக்கிடமேது? இந்த ஊரைவிட்டு ஓடிவிட்டால்தான் அந்த யோஜனையெல்லாம். அப்படிச் செய்யலாமென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

மாப்பிள்ளை சிரித்தான் லியோ தமாஷாய்ப் பேசுகிறானென்று அவன் நினைத்தான். தானும் அட்டாலஸும் அவ்விடத்தை விட்டு தப்பிச் செல்ல இரண்டு குதிரைகளை லியோ தயாராய் வைத்திருந்தானென்பது அவனுக்கு எப்படித் தெரியும்?

நடுநிசி. எல்லாரும் தூங்கிவிட்டனர். சந்தடி செய்யாமல் லியோ மாட்டுக்கொட்டிலுக்குச்சென்றான். அங்கே தயாராயிருந்த அட்டாலஸைக் கூப்பிட்டான். இருவரும் குதிரைகள் நின்ற இடத்துக்குச் சென்றனர். அவற்றின்மீது ஏறிக்கொண்டு அவர்கள் கனவேகமாய்க் கிளம்பினர்.

அவர்கள் பிஷப்பின் வீட்டை அடையும்வரையில் அவர்களுக்கு அபாயம்தான். நமது கதை நிகழும் காலத்தில் (அதாவது கி. பி. 6-வது நூற்றாண்டில்) சட்டம் மிகவும் கொடூரமானது அடிமை தன் எஜமானனைவிட்டு ஓடுவதும் அவனை வேறொருவர் தப்பிச் செல்லும்படி ஒத்தாசை செய்வதும் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கும் குற்றங்கள் ஆதலால் லியோவும் அட்டாலஸும் பகைவர்களிடம் அகப்பட்டுக்கொண்டால் அவர்கள் கதி அதோகதிதான். அவர்கள் வழியில் ஒரு ஆற்றைக் கடக்கவேண்டும்படி நேரிட்டது. ஆற்றுப்பாலத்தில் காவற்காரன் இருந்தான் அவனைத் தப்பிச்செல்ல முடியாது என்பதை உணர்ந்த அவர்கள் குதிரைகளைத் துறந்துவிட்டு இருட்டியபின் நதியில் நீந்தி அக்கரையை அடைந்தனர்.

மறு நாள் அவர்கள் காட்டு வழியே சென்றுகொண்டிருக்கையில் சற்று தூரத்தில் குதிரைகள் வரும் சப்தம் கேட்டது. திகிலுடன் அவர்கள் புதர்களில் ஒளிந்து கொண்டனர். குதிரைகளில் ஏறி வந்தவர்கள் அவர்களைத்தேடி வந்தனர் என்பது அவர்கள் பேச்சிலிருந்து புலப்பட்டது அவர்களில் ஒருவன், "ஓடின அந்த இரண்டு அடிமை நாய்களையும்பிடித்துச் சித்திரவதை பண்ணவேண்டும்" என்றான் இன்னொருவன், "ஆமாம் அந்த அடிமைப் பயல்களுக்கு என்ன திமிர்? அவர்களுக்குத்தகுந்த புத்தி கற்பிக்கவேண்டும்" என்றான்.

நல்லவேளை புதரில் ஒளிந்திருந்தவர்கள் அவர்கள் கண்களுக்குப் படவில்லை. அவர்கள் மறைந்த பின் லியோவும் அட்டாலஸும் மெள்ள மெள்ள பக்கத்து ஊரை யடைந்தனர். அந்த ஊரிலுள்ள கிறிஸ்தவ பாதிரி பிஷப்பின் நண்பன் அவனிடம் அவர்கள் அடைக்கலம் புகுந்தனர். அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்ற அவன், "நேற்றிரவு நான் ஒரு கனவு கண்டேன். அதில் இரண்டு புறாக்கள் கூண்டிலிருந்து விடுபட்டுப் பறந்து என்னிடம் வந்தன. கனவு பலித்தது என்பது இப்பொழுதுதான் தெரிகிறது" என்றான்.

எனினும் அவர்கள் நிலைமை அபாயகரமானதாதலாலும் அவர்களைத் தேடிக் கொண்டு பகைவர்கள் அந்த ஊரில் சுற்றியதாலும் அவர்களைத் தன் வீட்டிலேயே பத்திரமாய் பல நாட்கள் பாதிரி ஒளித்து வைத்திருந்தான்.

முடிவில் லியோவும் அவனது இளம் எஜமானனும் பிஷப்பின் வீட்டை அடைந்தனர். பிஷப்பின் மகிழ்ச்சியை எப்படி விவரிப்பது? நெடுநாட்களாய்ப் பிரிந்திருந்த தனது மருமகனை அவன் கட்டித்தழுவி ஆனந்தக் கண்ணீர் பெருக்கினன். தன் அருகே நின்ற லியோவையும் அவன் பொங்கிய நன்றியறிதலுடன் நோக்கி, "அப்பா, நீ இனி அடிமை அல்ல. என் புத்திரனிலும் சிறந்தவன் உனக்கு விடுதலை அளிதது விட்டேன். உன் ஜீவனத்துக்கு வேண்டிய நில புலன்களையும் தருகிறேன் நீ எங்களுடன் சமமான பதவியில் இருந்து இனிது வாழ்வாய்" என்றான்.

உடம்புக்கு எப்போதும் சுகம் வேண்டும்.

குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் சாதாரணமான தூள் அல்ல. அது உல்லாசமும், ஆரோக்கியமும் ஆசரிக்கச்செய்யும், ஏனென்றால் அது ஒரு விசேடமான முறையாக மருந்தூட்டிச் செய்யப்பட்டது. குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் அதிக சுத்தமும் நேர்த்தியுமானது; அதற்கு ஈடானதூள் ஒன்றும் கிடையாது. அது பக்கு வந்த இடங்களைத் தேற்றி உடனே சுகமுண்டாக்கிறது. வேர்வை விடுவதை இந்தத்தூள் தணிக்கிறது. தேக முழுதற்கும் அது உல்லாச சுகத்தைக் கொடுக்கிறது. வைத்தியர்கள் குழந்தைகளுக்கு உபயோகப் படுத்தும்படியாக சிபார்சு செய்திருக்கிறார்கள்; நோயாளிகளுக்கும், சமுசாரத்திலிருக்கும் ஒவ்வொருவருக்கும் உபயோகப்படுத்தும் படியாக சொல்லியிருக்கிறார்கள்; ஏனென்றால் இந்த தூள், அதிக சுத்தமானது மல்லாமல் மகா சவுக்கியத்தைக் கொடுக்கும்.

குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூளின் வாசனை ஒப்பில்லாதது. அது இனிப்பான பரிமள வாசனையோடிருப்பதுமல்லாமல், தோலை அதிக அழகாக்கி சந்தோஷத்தை உண்டுபண்ணும். அது உடம்புக்கு வாசனையும் கொடுக்கும்.

எல்லா மருந்து கடைகளிலும், பஜார்களிலும் வாங்க அகப்படும்.

குடிகூரா டால்கம்
CUTICURA TALCUM

இன்றைக்கு ஒரு டப்பி குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் வாங்கு.

ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனுபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.

வருங்கால பலன்



புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.



பண்டிட M R K மூர்த்தி. ஜோதிஷ கலா வல்லவர் — பண்டிட் E. S K. சுவாமி. ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன் கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2 ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10 ஜாதகமாவது, பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை

ஜோதிட கழகம்" 70, தேவராஜமுதலி தெரு, பிடி. மதராஸ

நஞ்சன்கூடுபெல்பொடி

டப்பி) I. D. L No 61. மெடிகேடட் (அணா 4

ஜிஞ்சிப்

ஜீர்ணம் உற்சாகம் அஜீர்ண பித்த சமனி

லிவடன்ஸால்

வீர்யவிருத்திக்கும் ககிதநிரைக்கும்

நமது தொடர் கதை.

ராதா

(திருமலை ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை)

முன் கதைச் சுருக்கம்

மகேந்திரத்தில் பாரெஸ்ட் ரேஞ்சராயிருந்த நந்தகோபமுதலியாரின் குமாரி ராதாவிற்கு அமரேசன் செட்டியார் தமிழ்ப்படிப்புச் சொல்லிக்கொடுத்து வருகிறார். நந்தகோபரும் அவரது மனைவி அநந்தகல்யாணி அம்மாளும் தாய் தகப்பனற்ற அமரேசனை மிகவும் பக்ஷமாக நடத்திவருகின்றனர். சிலகாலத்தில் அமரேசன் அவர்களது குடும்பத்திற்கே உற்ற தோழனாகிறான்.

நந்தகோபரின் பிறப்பிடம் பாற்கடல். அங்கு அவரது மைத்துனன் நச்சுமுதலியார் தனது ஏராளமான சொத்துக்களை அழித்து சிறைக்கும் போய்வந்தார். அவரது அந்தரங்க நண்பன் பிச்சு அய்யர். நச்சுமுதலியாரின் பிள்ளை தண்டபாணியும் தகப்பனைப்போல் குடி, விலைமாதர்கள் முதலிய விஷயங்களில் ஈடுபட்டான். நந்தகோபர் தாம் ஸ்வயமாகச் சம்பாதித்த பணத்தைக் கொண்டு பாற்கடலில் சொத்துக்கள் வாங்கியிருந்தார். அதை நச்சு முதலியே மேற்பார்வை பார்த்து வந்தார்.

மகேந்திரம் இளவரசனுக்கும் அமரேசனுக்கும் பகை ஏற்பட்டதன் காரணமாகவும் நச்சு முதலியின் துர்ப்போதனையால் நந்தகோபர் அமரேசனை நிறுத்திவிட்டபடியாலும் அமரேசன் மகேந்திரத்திலிருந்து வெளியேறினான்.

ராதாவை தண்டபாணிக்கு விவாகம் செய்துகொடுப்பது சம்பந்தமாக அநந்தகல்யாணிக்கும் நந்தகோபருக்கும் மனஸ்தாபமேற்படுகிறது. ஆயினும் நச்சுமுதலி ஒரு ஜோதிஷன் மூலம் கபடநாடகம் நடத்தி விவாகத்தை நடத்திவிட்டான். ராதா தன்னால் தன் பெற்றோர்களுக்குள் மனஸ்தாபம் ஏற்படக்கூடாதென்று வாய்திறவாதிருந்துவிட்டாள். ராதாவுக்கும் தண்டபாணிக்கும் விவாகம் நடைபெறுகிறது. பூர்ண கர்ப்பிணியாயிருந்த அநந்தகல்யாணி பூந்துறையில் தன் பிறந்தகத்துக்குச் செல்லுகிறாள். அங்கு அவள் ஒரு ஆண் மகவைப் பெற்று உயிர்துறந்தாள். ஆராத்துயரத்திலாழ்ந்த நந்தகோபரை நச்சுமுதலியார் தேற்றி பாற்கடலுக்கு அழைத்துவந்து தன் குமாரி காளந்தியை விவாகம் செய்து வைத்துத் தானும் தம்பதிகளுடன் மகேந்திரம் செல்லுகிறார்.

10. பஞ்சாமிர்தம்

பாற்கடற் பட்டணத்தின் பெரிய பஜார் வீதியின் வடக்கு வரிசையில் ஒரு பெரிய மூன்று அடுக்கு மெத்தை வீடு காணப்படும். மூன்றாவது மாடியின் முகப்பில் தொங்க விட்டிருக்கும், தங்கப் பூச்சினால் எழுதப்பட்ட ஒரு பெரிய போடுப் பலகையை உற்று நோக்கினால் அது தாஸி பஞ்சாமிர்தம் வீடு என்று துலங்கும். அவளுக்குத் தற்சமயம்—அதாவது தண்டபாணியின் விவாககாலத்தில் சுமார் நாற்பத்தைந்து வயதிருக்கும்; ஆடியோடி அடங்கும் பருவம் வந்துவிட்டது. ஆயினும், தன் பால்யதிசையில் தாசி பஞ்சாமிர்தம் அடைந்திருந்த பெருங்கீர்த்தியானது அவளுடைய வயோதிகத்தை மறைத்துப் பார்த்தோர் கண்களுக்கு அதிக யௌவனமான தோற்றத்தைக் கொடுத்து வந்தது. ஆதியில் அவள் நடனம், சங்கீதம், நாடகம், மதனவித்தை என்ற நான்கு தொழில்களிலும் இணையற்ற பெயர் பெற்று ஏராளமான பொருளைத் தேடினாள். அதன் விவரங்களைக் கேட்கக் கேட்க ஆநந்தமாயும் ஆச்சரியமாயுமிருக்கும். சாதாரணமாய் டிராமா என்று சொல்லப்படும் நவீன நாடகமுறைகளை இந்த தேசத்தில் ஸ்தாபித்து, இவ்வளவு உன்னதமான நிலைமைக்குக் கொண்டுவந்த பெருமையும் புகழும் அவளுக்கே யுரியனவாகும். சதிர் என்னப்படும் நடனவித்தைக்கும் குருஸ்தானம் அவளே யாகும். சென்னை, கொழும்பு, ரங்கூன், சிங்கப்பூர், முதலிய பிரஸித்த தமிழ்ப்பட்டணங்களுள், தாசி பஞ்சாமிர்தம் நடனம் செய்திராத நகரமுமில்லை; அவள் நாடகத்தைப் பாராத கண்களுமில்லை; அவள் சங்கீதத்தைக்கேளாத செவிகளுமில்லை; இன்னும் அவளிடம் பழக்கமில்லாத பிரபுக்களும் இல்லை! இந்த நான்கு தொழில்களிலும் ஏராளமான வருமானமிருந்தபடியால், தன் வித்தைகளை நான்கு டிபார்ட்டுமெண்டுகளாகப் பிரித்து, நான்கு கணக்கப் பிள்ளைகளும், நால்வர்க்கும் மேல் ஒரு மானேஜரும் நியமித்துத் தனது சதுர்வித வித்தைகளையும் நடத்தி வந்தாள். நாடகங்களில் இன்னின்ன வகுப்பிற்கு இன்ன சார்ஜ் என்று தாரணை ஏற்பட்டிருப்பதுபோல, பஞ்சாமிர்தம் தனது நான்கு டிபார்ட்டுமெண்டுகளுக்கும் தாரணை விதித்திருந்தாள். பாட்டுக் கச்சேரிக்கும் சதிர்க் கச்சேரிக்கும் ஒரு மணி நேரத்திற்கு இத்தனை ரூபாய் என்றும் நான்காவதாகிய மதன வித்தையில் ஒரு மனிதனுக்கு வருஷமொன்றுக்கு இத்தனை லக்ஷம், மாதமொன்றுக்கு இத்தனை ஆயிரம் நாளொன்றுக்கு இத்தனை நூறு என்றும் திட்டமான விகிதாசார மேற்படுத்தியிருந்தாள். ஜாதிமதபேதமென்பது அவளிடம் கிடையாது. அவளுக்குப் பலர் கொடுத்த பட்டங்களெல்லாம்சேர்ந்து "தாஸிகுரு ஸர்வ ஜனபாரி மன்மதாபரண மஹா தாஸி பஞ்சாமிர்தப் பிராட்டியார்" என்பது முழுப் பெயராயிற்று! இன்னும் இவள் தாஸி குலத்தாரின் அபிவிர்த்தியின் பொருட்டு "பெது மாதர் சங்கம்" என்றும் ஒரு ஸபை ஏற்படுத்தி அதற்குத் தானே நெடுநாள் அக்கிராஸனாதிபதியாய் இருந்து வந்தாள்.

இவ்வளவு சமர்த்தும் பெருமையும் புகழும் வாய்ந்த தாசி பஞ்சாமிர்தத்திற்கு ஆதியில் ருது சாந்தி முகூர்த்தம நடந்த பொழுது, முதன் முதல் அவளுக்கு மண நாயகனாய் வீற்றிருக்கக் கூடிய பாக்கியத்தைப் பெற்ற மனிதன் எவனோ அவன் உள்ளபடியே ஒரு பெரிய அதிர்ஷ்ட சாலியல்லவா! அந்தப் புண்ணியவான் யார்? அவள் சாமான்யப்பட்ட மனிதனையா பிடிப்பாள்! பாற்கடற் பண்ணையார் வீட்டுக் குலதிலகனாகிய நமது நச்சாடாவலிங்க முதலியார்தான் அவர்! ருதுசாந்திமுதல் இதுவரையும் தாசி பஞ்சாமிர்தத்தின் ஆசைநாயகன் என்ற உன்னதமான பட்டத்தையும் பதவியையும் நச்சுமுதலி தான் வகித்து வந்தார்! அவருடைய நண்பர் சத்திரம் விசாரணை பிச்சுவையன்தான் நெடுநாள் தாசி பஞ்சாமிர்தம் ஆபீஸ் மானேஜராயிருந்தார்! பஞ்சாமிர்தத்தை சதிர் பாட்டுக்கச்சேரி முதலியவைகளுக்குத் தருவிக்க விரும்புவோர் முதலியாரவர்களிடம்தான் அச்சாரம் கொடுப்பார்கள்! சில சமயங்களில், நச்சுமுதலி தனக்கு வேண்டாதவர்கள் வீட்டிற்குப் போகக்கூடாதென்று கட்டுப்பாடு செய்வார் ஆனால் பணமே நாயகன்; பணமே தெய்வமென்று கொள்கையுடையவளாகிய பஞ்சாமிர்தம் பண ஆசையால் நச்சுமுதலியின் கட்டுப்பாட்டை மீறுவாள். மீறவே, இடைக்கிடை, பஞ்சாமிர்தத்திற்கும் ஆசைநாயகர்க்குமிடையில் நீடித்த ஊடல்கள் வந்துவிடும்! ஊடல்கள் தோன்றவே, தாசியின் மேல்மாடியில் கல்லெறி விழும்! ஒரு வாயிற் கதவில் தீப்பிடிக்கும்! கள்ளர் உபத்திரவம அதிகப்படும்! இரவில் வந்து போயிருக்கிற நாயகர்க்கு அடியும் அவமானமும் கிடைக்கும்! இதனால் வருவோர் குறையவே தாசியின் வருமானமும் குறையும். தாசியின் வருமானம் குறையவே ஊடல்கள் தானே தீர்ந்துவிடும்! இவ்வாறு ஊடல்கள் மாறி மாறி அடிக்கடி வந்தபடியால், முடிவில் நச்சுமுதலியின் இம்சையைத் தாசியால் சகிக்கமுடியவில்லை. பாவம்! என்ன செய்வாள்! "கொண்ட புருஷனுக்கும்கூடப் பயப்படாத இந்தக் கலியுகத்தில் நான் ஸர்வ ஸ்வாதீனமுமுள்ளவளாகப் பிறந்திருந்தும், இந்தக் குடிகேடன் நச்சுமுதலிக்குப் பயந்து காலம் கழிக்கும்படி ஈசன் என் தலையில் எழுதினானே! தாலி கட்டிய பெண்சாதிமாரை இம்சிப்பதும் காணாமல் இவன் "ஸர்வஜனபாரி' என்னும் பட்டம் புனைந்திருக்கும் என்னையும் இப்படி இம்சிக்கின்றானே! இவன் ஒழிந்தாலன்றி நமக்கு க்ஷேமமில்லை! எப்போ தொலைவானோ!' என்று பஞ்சாமிர்தம் பெருங் கருணைத் தடங்கடலாகிய சர்வேசுரனை அந்தரங்கத்தில் பிரார்த்தனை

மனோரஞ்சனி

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை 1937 ஜனவரி முதல கும்பாரசன்னியாசி என்னும நாவல மதாடாசமாய் வெளிவரும். இதன வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்'

எம். எஸ் ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.



நச்சு முதலியார் பூஜை செய்துகொண்டிருக்கையில் அவரைக் கைதி செய்யப் போலீஸார் உள்ளே நுழைந்தனர்.

செய்துகொண்டு வந்தாள்! இத்துடன் அவளுக்கு வயது கூடக்கூட வருமானம் குறையத்தலைப்பட்டது. யௌவனத்தில் மாதமொன்றுக்கு ஆயிரக் கணக்காய் சம்பாதித்தவளுக்கு வயது முப்பதானவுடன் நூற்றுக்கணக்காயும் நாற்பதானவுடன் பத்துக் கணக்காயும் வரும்படி குறைந்துவிட்டது! இதற்கனுகூலமாய் அந்த ஜெகதீசன் அவளைப் பற்பல நோய்களுக்குமாளாக்கினுர்! ஆனுல் அவள் ஆடையாபரண முதலிய வெளிமுறுக்குகளை மட்டும் விடாமல், முன் இன்பக் களஞ்சியமாயிருந்தது போய், பின்னுல் நோய் முதலிய துன்பக் களஞ்சியம்போல் வெளி மினுக்குச் செய்துகொண்டு தன் தொழில்களை நடத்தி வந்தாள்.

தன் சிறிய தகப்பன் பஞ்சாமிர்தம் வீட்டிற்குப் போகும் பொழுதெல்லாம், தண்டபாணியும் விளையாட்டாய் அவருடன் போவான். பஞ்சாமிர்தத்தை "சின்னம்மா" என்றழைத்து அவளோடு கொஞ்சி விளையாடுவான். சிறு குழந்தை முதல் பழகி விட்டபடியால், தாசி பஞ்சாமிர்தமும் தண்டபாணியுடன் அன்பாய்ப் பேசி ஆதரிப்பாள். இருவருடைய அன்பும் நாளுக்கு நாள் முற்றவே, தண்டபாணிக்கு வயது பதினறு பதினேழானவுடன், அவ்வன்பு—என்ன மாயத்தாலோ!—காதலாய் மாறத்தொடங்கிவிட்டது! இதற்குத் தண்டபாணி தான் காரணமோ அல்லது தாசிதான்காரணமோ அதைத் தெய்வந்தானறியும்! எவ்விதமாயோ அன்பு காதலாகவே, காதல் காரியமாவதற்கு நெடுநாட் செல்லுமா! காரியமாய் நெடுநாள்வரை; இதையறியாதிருந்த நச்சுமுதலிக்கு, இடையிலுள்ள சில பொறாமை பிடித்த போக்கிரிப்பையன்கள் இதைப்பற்றி ஓதவே, அவர் தன் தாசிவீட்டிற்குத் தண்டபாணி வரப்படாதென்று கண்டித்தார். ஆனுல் அப்பனுக்கு மகன் மசிவானு? சிற்றப்பன் கண்ணுக்குத் தெரியாமல் பின்வாசல் வழியாயாவது பஞ்சாமிர்தம் வீட்டிற்குப் போவான். "சிற்றப்பன் எப்போ அயலூருக் கொழிவான்! நான் எப்போ என் ஆசைதீர என் சின்னம்மை வீட்டிற்குப் போவேன்!" என்று பிரார்த்தித்துக் கணபதி கோயிலுக்கு எண்ணற்ற தேங்காய்களை வாங்கி உடைத்தான்! நச்சுமுதலி முதல்முறை பெண்பேசுவதற்காக மகேந்திரத்திற்குப் போயிருந்த பொழுதும், பின்னுல் பூந்துறைக்குச் சென்றிருந்த போதும் தண்டபாணிக்கு மிகவும் சௌகரியமாய்விட்டது. தன் சிற்றப்பன் பெட்டியைக் கள்ளச் சாவியால் திறந்து அநேக சொத்துக்களைப் பஞ்சாமிர்தத்திற்குக் கொடுத்துவிட்டான்.

11. சிவபூஜை

இனி மகேந்திரம் சென்ற நச்சு முதலியார் ஒரு மாதகாலம் தன் மகள் வீட்டிலிருந்து பஞ்சபக்ஷிய பாயஸங்களுடன் வெகு மோக்களாவாய் விருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கும் சமயம் அவர்க்கு நினைத்திராமல் ஒரு பெரிய ஆபத்து வந்துவிட்டது! அவர் மூன்று கால சிவ தீக்ஷை பெற்றிருந்ததோடு ஒருவருஷமாய் உடையவர் பூஜையும் செய்து வந்தார். ஒரு நாள் காலையில் வழக்கப் பிரகாரம் அவர் மகேந்திரத்தில் தன் மகள் வீட்டுமுன் வராந்தாவிலிருந்து பூஜை முடித்து, மான்தோல் ஆஸனத்தில் வடக்கு முகமாயிருந்தபடியே, தன் இரண்டு கைகளையும் சிரமேற் குவித்து தேவார பாராயணம் செய்துகொண்டிருந்தார். இரண்டு பக்கங்களிலும் பூக்குடலைகளும் தண்ணீர்ச் செம்புகளுமிருந்தன. முன்னுல், அவர் அர்ச்சனை செய்த பலவகைப்பட்ட புஷ்பக் குவியல்களுக்குள், சிவலிங்கமும் கணபதி விக்கிரகமுமிருந்தன. இடையில், தீபத்தட்டு, தூபக்கால், மணி, கிண்ணம் முதலிய பூஜை சாமான்கள் பளபளவென்று மின்னிக்கொண்டிருந்தன.

இந்தசமயம் பாற்கடல் கஸ்பாப் போலீஸ் இன்ஸ்பெக்டர் பயங்கரசாமி நாயுடுவும் மகேந்திரம் உள்ளூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் அப்பாஜிராவ் என்பவரும் வேறிரண்டு கான்ஸ்டேபிள்களும் ஒரு வைதிகப் பிராமணரும் நந்தகோபர் வீட்டிற்குள் நுழைந்து, கண்களை மூடியப்படியே பக்தியாய்த் தேவார மோதிக்கொண்டிருந்த நச்சு முதலியைச் சூழ்ந்துகொண்டார்கள்; பயங்கரசாமி நாயுடு "ஏ நச்சுமுதலி! தேவாரத்தை நிறுத்து. உன் பூஜையைக்கட்டிவை. உன்னை அரஸ்டு செய்திருக்கிறது!" என்றார். சிவபூஜாதுரந்தராகிய பக்தர் நச்சு முதலியார் நிஷ்டை தெளிந்து கண்களை விழித்துப்பார்த்தார்! ஆஹா! யமபடர்கள் போல் போலீஸார் தன்னைச் சூழ நிற்பதைக் கண்டார்! காணவும் கால்கை நடுக்க மெடுத்துவிட்டது! முகம் கறேலென்று கறுத்துவிட்டது. உடனே பயங்கரசாமி நாயுடு தன்னுடன் வந்த வைதிகப் பிராமணரைப்பார்த்து "சாஸ்திரிகளே! இந்தச் சாமான்களைப் பாருங்கள். உங்கள் சாமான் தானு?" என்றார். சாஸ்திரிகள் நெருங்கி வந்து புஷ்பக்குவியலுக்குள்ளிருந்த ஸ்படிகலிங்கத்தையும் கணபதி ஸ்வர்ண விக்கிரகத்தையும் தூபக்கால், மணி முதலிய மற்ற சாமான்களையும் கையிலெடுத்து உற்றுப்பார்த்து "ஐயா, இவைகள் என்னுடைய சாமான்கள் தான்" என்றார். உடனே பயங்கரசாமி நாயுடு "ஏ நச்சு முதலி, புறப்படு; ஸ்டேஷனுக்குவா" என்றார். அவர் யமனுக்கு மஞ்சாத பெயர் பெற்ற போலீஸ் புலியென்பதை நச்சு முதலி நன்றாயறிந்தவராகையால்; பதிற சொல்ல வகையின்றிப் பரக்க பரக்க விழித்தார். இதற்குள் போலீஸ் சேவகர் இருவரும் பூஜை சாமான்கள் சகிதம்

நரைமயிரை

அகற்றுங்கள்

உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினுல் தபால் செலவு இனம்
சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பெனி)
(மெடிகல் டிபார்ட்மெண்டு, 8. 15 பவானிப்பூர், — கல்கத்தா
மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனபஜார் ரோடு,
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.
செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ். ஜும்மா மஸ்ஜித்

போலிகளைக் கண்டு உஷார்!!!

அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும்
இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம்
லிமிடெட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா

நச்சு முதலியை வெளியே விழுந்து ஊள்ளூர் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி நடந்தார்கள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் போய் அரைமணி நேரத்துக்கெல்லாம் வெளியூரிலிருந்து வந்த நந்தகோபர் தன் வீட்டுத் தலைவாயிலுக்குள் நுழையவும், தன் மனைவி காளத்தி தலைவிரி கோலமாய்க் கண்ணீர் வடித்துக் கொண்டும் கையை நெளித்துக் கொண்டும் தலைவாயிலுக்கும் வீட்டுக்குமாய்த் திரிவதைக்கண்டு, "என்ன சங்கதி! என்ன சங்கதி!" என்று ஆச்சரியத்துடன் கேட்டார். காளத்தி, "ஐயோ! என் அப்பாவைப் போலீஸார் பிடித்துக் கொண்டு போய்விட்டார்களே!" என்று கூவிக்கொண்டு நடந்த சம்பவத்தைச் சொன்னாள்.

இதைக்கேட்ட நந்தகோபர் உடனே போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடவும், அங்கே, நச்சுமுதலியைக் களவு சொத்துடன் பிடித்த விவரத்திற்கு அத்தாட்சி தயாராய்க் கொண்டிருந்தது. பிடிபட்ட நச்சுமுதலி குறவன் போல் விழித்துக் கொண்டு ஒரு மூலையில் குந்திக் கொண்டிருந்தார். நந்த கோபரைக்கண்ட உள்ளூர் இன்ஸ்பெக்டர்

அப்பாஜிராவ்:—குட் மார்னிங், மிஸ்டர் முதலியார், உட்காருங்கள். மிஸ்டர் பயங்கரசாமி, இவர்கள் தான் ஜில்லாப் பார்ஸ்டு ஆபீஸர். இவர்கள் வீட்டில்தான் நாம் நபரைப் பிடித்தது.

பயங்கரசாமி:—தாங்கள் தானே பாற்கடல் நந்தகோப முதலியார்? ஒரு சின்ன மனிதன் செய்கையால், தங்களைப் போன்ற பெரிய மனுஷாளுக்கெல்லாம் அவமான சீமற்படுகிறது.

நந்த:—ஸார், என்ன சங்கதி? என்ன கேஸ்?

பயங்க:—கேஸாவது, போனவருஷம் தை அமாவாஸ்யையன்று இரவு ஈரோட்டு ரஸ்தாவில் ஒரு கொள்ளை நடந்தது. அதில் பறி கொடுத்தவர்கள் தான் இதோ இருக்கிற கருணாநிதி சாஸ்திரிகள். கொள்ளை நடந்து பதினைந்து மாதமாய் போலீஸார் வேண்டிய முயற்சிகள் செய்தும் ஒன்றும் துலங்கவில்லை. ஆனால் அந்த ரஸ்தாவிலும் சுற்றுப் பக்கங்களிலும் சென்ற மூப்பது வருஷகாலமாய் ஓயாது நடந்துகொண்டிருக்கும் கொள்ளைகளுக்கு இந்த நச்சு முதலிதான் காரணமென்று போலீஸார் ரிகார்டு செய்துகொண்டே வந்திருக்கிறார்கள். இவர் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த துஷ்டனையால், இவரை விரோதித்து சாக்ஷி சொல்ல ஆட்கிடைக்கவில்லை. ஏகதேசமாய் அகப்பட்டுக்கொண்டாலும்–போலீஸார் சங்கதி தங்களுக்குத் தெரியாதா!—பணத்தைச் செலவிட்டு வெளியே வந்துவிடுவார். இதுவரை சென்று வந்தது.

நந்த:—அது சரி, இப்பொழுதுள்ள கேஸ் என்ன ஸார்?

பயங்:—அதுதான் சொல்லுகிறேன். இப்படியிருக்க, நான் சென்ற செவ்வாய்க்கிழமை அரக்கோணத்திலிருந்து ரெயிலேறிப் பாற்கடலுக்கு வந்து கொண்டிருக்கும்பொழுது சேலம் ஸ்டேஷனில், உலகப் பிரஸித்தி பெற்ற கைக்காரியாகிய பாற்கடல் தாசி பஞ்சாமிர்தம் நானிருந்த இரண்டாவது வகுப்பு வண்டியில் வந்தேறினாள். அவள் கொண்டு வந்திருந்த பெரிய டிரங்குப் பெட்டியில் "பஞ்சாமிர்தம்" என்றெழுதியிருந்தது. வண்டியில் ஏறியவள் போலீஸ் உடுப்போடிருக்கும் என்னை ஒரு இன்ஸ்பெக்டரென்று தெரிந்து கொண்டும், கொஞ்சமும் லக்ஷியம் செய்யாமல் எனக்கெதிரே உட்கார்ந்தாள். இது மட்டுமா! கொஞ்சமும் பயமின்றி என் முகத்துக்கு நேரே கால்களை நீட்டிக் கொண்டும், கால்மேலே கால் போட்டுக்கொண்டும் வெகு கம்பீரமாய் ராஜ குமாரத்தி போலிருந்தாள். எனக்கு அது கொஞ்சமும் பிடிக்கவில்லை. "இவளை என்ன செய்கிறது?" என்று தோன்றிற்று. அப்பொழுது என் பக்கத்தில் சென்னை சமஸ்கிருத பண்டிதர் வித்யாஸாகரஸர்மா என்பவரும் உட்கார்ந்திருந்தார். நாங்களிருவரும் அவளைப்பற்றி வேடிக்கையாய் இங்கிலீஷில் பேசிக் கொண்டு வரும்போது; தாசி தன் இடையில் மாட்டியிருந்த தங்க வொட்டியாணத்தைக் கழற்றிக் கம்பீரமாய்ப் பெட்டிமேல் வைத்து விட்டுக் கால்களை நீட்டிப்படுத்தாள். அந்த ஒட்டியாணத்தின் முகப்பில் ஏதோ சமஸ்கிருதத்தில் எழுதியிருந்தது. எனக்கு அர்த்தமாகவில்லை. பக்கத்திலிருந்த ஸர்மா அதைக் கவனித்து "கருணா நிதி" என்றெழுதியிருப்பதாய் என்னிடம் தற்செயலாய்ச் சொன்னார். உடனே எனக்கு சென்ற வருஷம் கொள்ளைக் கேஸும் இந்த சாஸ்திரிகள் பெயரும் ஞாபகத்துக்கு வந்தது மறுபடியும் நன்றாய்ப் பார்த்துச் சொல்லும்படி ஸர்மாவிடம் சொல்லி நிச்சயப்படுத்திக்கொண்டு, "சிறுக்கி அகப்பட்டுக்கொண்டாள்" என்ற சந்தோஷத்துடனும், கோபத்துடனும் எங்களுக்கியல்பாயுள்ள போலீஸ்முறுக்கோடு!

நான்:—ஏ பெண் பிள்ளாய்! உனக்கு எந்தவூர்? (எனவும்)

அவள்:—தாங்கள் ஏன் கேட்கிறீர்கள்?

நான்:—எந்தவூரென்றால் ஜவாப் சொல்லுகிறாயா இல்லையா?

அவள்:—தங்களைப் போல் ஆயிரம் இன்ஸ்பெக்டர்களை

(39-ம் பக்கம் பார்க்க)

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Sastriar in Govt. Medical dress)

மஹா பில்வாதி லேகியம்

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத்துவேஷம், அஜீர்ணம், மலச்சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்

ஆனந்த பற்பசை

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1க்கு 0-8-0 வி. பி. வேறு எங்கும் கிடைக்கும்.

திவான் ஸர் C. P. ராமஸ்வாமி அய்யர், K. C. I. E. திருவாங்கூர் சமஸ்தானம், அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரி, D. V. S. அவர்கள் ஆயுர்வேத சாஸ்திர ரீதியாய் அநேக வருஷங்களாக ஜயத்துடன் வைத்தியம் செய்து கொண்டு வருகிறார். எனது குடும்பத்திலுள்ள அனேவர்களாலும் இவரால் தயார் செய்யப்பட்ட அநேக மருந்துகள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆதலால் மேற்படி வைத்தியரத்ன அவர்களுடைய விடாமுயற்சிக்கும் அவருடைய மருந்துகளின் யோக வீரியங்களுக்கும் அத்தாக்ஷி செய்வதற்கு நான் அத்யந்தம் ஸந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன்."

திவான் ஸர் R. K. ஷண்முகம் செட்டியார், K. C. I. E. கோச்சி சமஸ்தானம், அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரிகளுடைய ஆனந்த பற்பொடியை நான் உபயோகித்து இருக்கிறேன். அப்பற்பொடி உபயோகிப்பதற்கு அத்யந்தம் ஆனந்தகரமாயும் நேர்த்தியாகவும் இருப்பதை நான் அறிந்தேன். ஸ்ரீமான சாஸ்திரிகளுடைய முயற்சிக்கு நான் அபிவிருத்தியைக் கோருகிறேன்."

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்

மகரத்வஜம்

ஆரோக்ய சஞ்சீவி

(ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்டாக்கிஸ்டு தேவை.)

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி !!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்

தென்னிந்தியப் பிரமுகர்கள்

மஹாமஹோபாத்யாய பண்டித ரத்னம்

பி. வி. பஞ்சாபகேச சாஸ்திரிகள்

(1855—1925)

(கே. எஸ். ஆர்.)

படிப்பின் பலமாகிய நன்னடத்தையைத் தன்னடத்தையால் போதிப்பது

“ப்ரும்ஹஸ்ரீ மஹாமஹோபாத்யாய ஆசார்ய பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்களைப் பற்றிச் சிலவார்த்தைகள் சொல்லவேண்டுமென்று யோசித்தால், முதலில் அவர் அடிகள் பணிந்து சாஸ்திரங்களைக் கற்றவர்களுள் ஒருவனான எனக்கு எப்போதும் சிஷ்யர்களைக் கவர்ந்து அவர்களுடைய மனதில் ஊன்றியிருக்கும் இப்பெரியாருடைய உருவமே புலப்படுகிறது. ஒரு முறை அவர்களைக் கண்டு ஸல்லாபம் செய்தவர்களுக்கு ஸத்குணம் நிரம்பி சாந்தமே உருவாக விளங்கும். அம்முகத்தின் களங்கமற்ற தோற்றத்தை மனதிலிருந்து அகற்றுவது கடினமான காரியமாகும். சகஜமாகவே ஸத்வகுணம் நிறைந்த இப்பெரியவர் சதா வேதாந்த பாடங்களை உள்ளனுபவத்துடன் கற்பித்து வந்ததனால் நாங்கள் படிக்கும் தருணமாகிய வயது முதிர்ந்த காலத்தில் புதியதோர் தெய்வத்தன்மை வாய்ந்தவர் போல் விளங்கினார் என்றே சொல்ல வேண்டும். கடினமான தார்க்கீயத்தைப்படிக்க வாரம்பித்த போது சில விஷயங்கள் நன்கு எனக்குப் புலப்படாமலிருந்தன. அதற்குக்காரணம் என்னவென்று கண்டு பிடிக்க வாரம்பித்தேன். கடைசியாகப்பாடம் கற்பிக்கும்போது அவர்கள் தோற்றத்திலும் வசனதோரணையிலும் மனது அப்போதைக்கப்போது பதிந்து கிரந்தத்தில் செல்லாமல் போனதே காரணம் என்று சந்தேகித்து புத்திக் குறைவு என்கிற தோஷத்தைப் பரிகாரம் செய்துகொண்டேன்.

“தன்னிடத்தில் ஒருவன் சிஷ்யனாக வந்துவிட்டால் உடனே அவனைத் தன் குடும்பத்தில் சேர்ந்தவனாக எண்ணி அதிக வாஞ்சை கொள்வார். எந்நோக்கிலும் எத்தகைய கிரந்தங்களையும் சிஷ்யர்களுக்குக் கற்பிப்பதே அவருடைய முக்கியநோக்கமாகவிருந்ததும் தவிர, தான் கஷ்டப்பட்டு அறிந்த பல விஷயங்களை சிஷ்யர்களுக்கு உபதேசிக்காது மறைத்து வைக்கும் உபாத்தியாயருக்கு வரும் ஜன்மத்தில் கழுதைப் பிறப்பு (கர்தப ஜன்மன்) ஏற்படும் என்கிற தர்ம சாஸ்திரத்தை அடிக்கடி சொல்லிக் கொண்டேயிருப்பார். அரிய பெரிய விஷயங்களை ஆராய்ச்சியுடன் போதிப்பது போலவே, படிப்பிற்குப் பலமாகிய நன்னடத்தையை தன்னடத்தையால் புகட்டுவதும் உபாத்தியாயர்களுக்கு முக்கிய கடமை என்பதற்கு இவர் ஓர் உதாஹரணம்.

“பிறர் மனதிற்குத் துன்பம் விளைவிக்காமல் , எப்போதும் மிருதுவான சொற்களையே உபயோகிப்பது இவர் ஸ்வபாவம். இவர் முகத்திலிருந்து கடின வார்த்தைகளை எவராவது கேட்டிருப்பாரா என்று ஒரு சந்தேகம் பிறந்தது. இத்தகைய சந்தேகத்திற்கு நியாயமே கிடையாது என்பது எனது அபிப்பிராயம். இவர் இயற்றிய நியாய பாஸ்கர கண்டனத்திலிருக்கும் கடின தர்க்க பதங்களையும், கதாதரீயம் முதலிய கிரந்தங்களைப் பாடம் சொல்லும்போது கொல்லப்பட்ட கடின பதங்களையும் எவரும் மறுக்க முடியாததல்லவா? இந்த ஆசிரியரின் பாடதோரணையை எத்துடன் ஒப்பிடலாம் என்றால் பிரயாக க்ஷேத்திரத்தில் த்ரிவேணி ஸங்கமம் ஒன்றே இதற்கு எல்லா அம்சங்களிலும் ஒப்பானது என்று சொல்ல வேண்டும். இவர் சாஸ்திர பாடங்கள் வாக்கியார்த்தங்கள் சொல்வதை நன்கு கவனித்தவர்களுக்கு, அதில் யமுனாப்ரவாஹம்போல் ஆழமும் வேகமும் உள்ள தர்க்க தோரணையும் அந்தர் வாஹினி ஸரஸ்வதியைப்போல் மறைந்து தோன்றும் மீமாம்ஸையும் தெளிவும் புனிதமும் அடங்கிய கங்காப்ரவாஹம்போன்ற வேதாந்த பரிபாஷையும் இன்றியமையாது கலந்திருப்பது விளங்கும். தர்க்க வேதாந்த சாஸ்திரங்களில் இவருக்கிருந்த பாண்டித்தியம் எல்லாத் தேசங்களிலும் பிரக்யாதி பெற்றதுவாயினும், உண்மையில் மீமாம்ஸா சாஸ்திரத்திலும் ஸரஸ்வதி நதியைப்போல் மறைந்து நிற்கும் இவரது பாண்டித்தியத்தை சிஷ்யர்கள் அறிவார்கள். உயர்ந்த ஸ்திதியை மேன்மேலும் அடைந்து வரும் சிஷ்யர்களைக் கொண்டு சிஷ்யர்களிடம் அனுக்ரஹ புத்தியும் அபிமானத்தையும் கணக்கிடக்கூடும்” என்பது தற்காலத்திய வித்வன்மணிகளின் அக்ரேஸராக ஜ்வலிக்கும் வேதாந்த விபூஷணம் வேதாந்த விஸாரத ப்ரும்மஸ்ரீ திருக்கழுக்குன்றம் ராமச்சந்திர தீக்ஷிதர் அவர்கள் எனக்காக எழுதி உதவிய மனமார்ந்த அபிப்பிராயமாகும்.

ஸ்ரீ தீக்ஷிதரவர்கள் மைலாப்பூர் சம்ஸ்கிருத கலாசாலையில் வேதாந்த சாஸ்திர அத்யாபகர் ஆவார். மேற்குறிப்பிக்கப்பட்ட வார்த்தைகள் மூலம் அவர் தமக்கு வேதாந்த பகுதிகளைப் போதித்த மஹாமஹோபாத்யாய பழமார்னேரி பஞ்சாபகேச சாஸ்திரிகளின் குணாதிசயங்களையும் கலா ஞானத்தையும் வெகு அழகாக வர்ணித்திருக்கிறார். இவ்வார்த்தைகள் நம் மஹாமஹோபாத்யாயரிடம் காணப்பட்ட அதி சிலாகனீயமான குண வைபவங்களையும் அஸாதாரண வியக்திகளையும் ஸ்பஷ்டமாகக் கோஷிக்கின்றன. சதா விகசித்திருக்கும் முகோல்லாஸத்தையுடைய சாஸ்திரிகள், சம்ஸ்கிருத கவிகளின் சிலேஷைகளுக்கு அனுகுணமானபடி கடினமான பதங்களையெல்லாம் தமது கிரந்தத்திலேயே நிறுத்திவைத்து விட்டவர் என்பது இவரிடம் படிக்கும் பாக்கியத்தைப்பெற்ற சிஷ்யர்களின் ஏகோபித்த அபிப்பிராயமாகும். இத்தகைய சிரேஷ்ட லக்ஷியங்களுடன் வாழ்ந்து குருத்தமராக மேன்மையுற்ற இவரை சதா சிஷ்யர்கள் நாடி வந்தனர் என்றால் என்ன ஆச்சரியம்?

வித்தியாப்யாஸமும் குடும்ப மேன்மையும்

மஹாமஹோபாத்யாய பண்டித ரத்தினம் பி. வி பஞ்சாபகேச சாஸ்திரிகள் 1855-ம் வருஷம் நவம்பர்

மின்சாரரசம்

சகல வியாதிகட்கும் தேவாமிருதம் போன்றது.
புட்டி 1-க்கு ரூபா 2.
மின்சார ரசம் கம்பெனி, (லிட்)
சேலம்,

மாதம் 6-ம் தேதியன்று தஞ்சை ஜில்லாவில் பழமார்னேரி கிராமத்தில் வேம்பு அய்யர் என்பாரின் புத்திரராகப் பிறந்தார். பழமார்னேரி கிராமம் பிரசித்த கலாவல்லவர்களுக்குப் பிறப்பிடமாக விருந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடவேண்டிய விஷயமாகும். சென்னை எக்ஸிகியூடிவ் கவுன்ஸில் மெம்பராகவிருந்து பிரசித்திபெற்ற ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர், சாஸ்திரியார் அவர்களுக்கு நெருங்கிய பந்துக்களுள் ஒருவராவார். சாஸ்திரியாருக்கு விதிப்படி வைதிக காரியங்கள் செய்விக்கப்பட்டன. ஆரம்பத்திலிருந்தே இவருக்கு சம்ஸ்கிருத பாஷையில் விசேஷ அபிருசி ஏற்பட்டுவிட்டது.

தமது பன்னிரண்டாவது பிராயத்திற்குப் பிறகு இவர் ப்ராசீன பத்ததிப் பிரகாரம் சம்ஸ்கிருதம் படிக்க வாரம்பித்தார். இவருக்குக் குருக்களாக விருந்தவர்கள் இவரது மாதுலர்களான பழமார்னேரி சுந்தர சாஸ்திரிகளும் ராமா சாஸ்திரிகளும்தான். இவ்விருவரும் சம்ஸ்கிருத பாஷையில் மேதாவிகளாகப் பிரகாசித்தவர்கள். இவர்கள் மன்னார்குடி ராஜு சாஸ்திரிகள் என்று பிரக்யாதி மிகுந்த மஹாமஹோபாத்யாய ப்ரும்மஸ்ரீ தியாகராஜ அத்வரிகளிடம் கிரமமாகப் பாடம் படித்தவர்கள். பழமார்னேரி சுந்தர சாஸ்திரிகளுக்கு இந்தியா கவர்ன்மெண்டாரால் "மஹாமஹோபாத்யாயர்". பட்டம் வழங்கப்பட்டது. ஆனால் இப்பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டதாகப் பிரசுரிக்கப்பட்ட சந்தர்ப்பமானது மிகுந்த விசனகரமானது. ஏனெனில் இப்பட்டம் மன்னர் பிறந்த தின விழாவன்று பிரசுரிக்கப்படுவதற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பாகவே அவர் சிவபதமடைந்துவிட்டார். அவர் வெகு காலம் மைசூர் சம்ஸ்கிருத காலேஜில் வேதாந்த சாஸ்திர அத்யாபகராக விருந்தார்; தவிரவும் மைசூர் ராஜ சபையிலும் பண்டித சதஸ்ஸுகளிலும் அவருக்கு விசேஷ ஸ்தானம் கொடுக்கப்பட்டு வந்தது. அவர் அநேக வருஷங்கள் மைசூரில் இருந்து தஞ்சைக்குத் திரும்பினார். "நியாய வேதாந்த சித்தாந்த ஸிந்து மந்தான மந்தர: மஹிஸூர புராதீசஸத: பண்டித சேகர:" என்று இவருடைய பெருமையை ப்ரும்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் தமது பிதாமஹரான மஹா மஹோபாத்யாய ராஜு சாஸ்திரிகளின் சரித்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். ராமா சாஸ்திரிகளும் திறமை மிகுந்தவர். இவரைப் பற்றியும் மஹா மஹோபாத்யாய யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அதே புத்தகத்தில் எழுதியிருப்பதாவது: "அநேக ராஜஸ்தான ப்ராதித பூர்வமீமாம்ஸாகதா கௌஸல:, சிஷ்ட: பாரமேஸ்ஸ." சுந்தர சாஸ்திரிகளிடம் இருந்து இவர் வேதாந்த பாடத்தைக் கிரஹித்துக்கொண்டார். வேதாந்தத்தை அப்யஸிப்பதற்காக இவர் அவரிடம் 12 வருஷகாலம் இருந்து சிரத்தையுடன் படித்தார். பின்பு ஆறு வருஷகாலம் அவரிடமே இருந்து தர்க்கத்தையும் அதிகரித்துக்கொண்டார். இவ்வாறு இவ்விரண்டு பகுதிகளுக்கு மட்டுமே இவர் சுமார் 18 வருஷங்களைக் கழித்தார். மீமாம்ஸத்தை இவர் ராமா சாஸ்திரிகளிடம் சில வருஷங்கள் இருந்து அறிந்துகொண்டார். சுந்தர சாஸ்திரிகள் மைசூரில் இருந்த காலத்தில் இவரும் அவருடன் இருந்து படித்து வந்தார். அக்காலம் முதற்கொண்டே இவருக்கு மைசூர் வித்வத் கோஷ்டியில் ஒரு ஸ்தானம் ஏற்பட்டுவிட்டது. அவர் இவரைப்பற்றி மைசூர் சமஸ்தான அதிபரிடம் பிரஸ்தாபிக்கவும் சில சந்தர்ப்பங்கள் நேரிட்டன. ஆதிகாலம் முதற்கொண்டே தமது பாடத்தில் இவருக்கிருந்த சிரத்தையும் உத்ஸாஹமும் ஊக்கமும் அளவிட வியலாதவையாக விருந்தன; ஆகையினால் இவர் தமது பாடத்தை லகுவாகக் கற்று வந்ததுடன் தமக்குப் பெருமையையும் சம்பாதித்துக்கொண்டு வந்தார்.

புத்தகமில்லாமல் பாடஞ்சொல்வது

வேதாந்த பாகத்தையே பிரதானமாக அதிககாலம் இவர் கற்றுக் கொண்டாராயினும், ப்ரும்மஸ்ரீ ராமச்சந்திர தீக்ஷிதர் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி இவர் மீமாம்ஸையும் நன்கு அறிந்தவர். ஆனால் பலர் இவருக்கு இப்பகுதி தெரியாதென்று எண்ணி வந்ததுண்டு. இதற்குக் காரணம் இவர் அப்பகுதியிலும் தமக்கிருந்த விசேஷ ஞானத்தை சந்தர்ப்பம் கிட்டாதபோது வெளிக்காட்டுவது கிடையாது. ஆனால் சமயம் வாய்த்தாலோவெனில் அதிலும் தமக்கிருக்கும் நைபுண்ணியத்தை இவர் தெளிவாக்கி விடுவாராம். "நீமி", "பாட்டதீபிக" போன்ற கிரந்தங்களை இவர் மனப்பாடம் செய்து வைத்திருந்தார். புத்தகப் பிரதி கையில் இல்லாமலே இவர் அநேகம் முக்கியக் கிரந்தங்களைத் தமது மாணவர்களுக்குப் பாடம் சொல்லுவது வழக்கமாம்.

தமது சம்ஸ்கிருத பாடங்களை முடித்துக்கொண்ட பின்பு இவர் ஒருசமயம் தமது மாதுலரான ராமசாஸ்திரிகளுடன் ராமநாதபுரம் சமஸ்தானத்திற்குச் சென்று வித்வத் சம்பாவனை பெற்றுக்கொண்டார். இவருக்கு ஜமீன்தாரால்

(33-ம் பக்கம் பார்க்க.)

சிறந்த கூந்தல் ஆகாரம்

உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப்புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
" 3 புட்டிகள் ரூ. 2-10.
வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனையூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ½ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணா.

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

The Anglo Indian Drug & Chemical Co
BOMBAY 2.

உலகப் பிரசித்தி பெற்ற
ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க் பட்டணம்
மூக்குத்தூளை
உபயோகியுங்கள்.

TRADE MARK

1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—
விலாசம்: ஆர். முகம் அண்டு கம்பெனி, நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்.

குழந்தைகளின் வயிற்று ஜுரக் கட்டிகளை

சந்தேகமின்றி சமனப்படுத்துவது

பால சஞ்சீவினி

இதுவேதான்

உண்மையான அசல் விஜயநகரம் மருந்து

விஜயநகர சமஸ்தான வைத்திய பரம்பரை பின்னா குடும்பத்தாரால் தயார் செய்யப்பட்டது.

Dr. பின்னா பாபய்யா பாத்ருடு பிரதர் விஜயநகரம்.
மதராஸ் பிராஞ்சு: 98-99, பிராடீஸ் ரோட், மைலாப்பூர்.
(ராமகிருஷ்ண மடம் எதிர்.)

குத்துச் சண்டை நடந்து கொண்டிருந்தது. சண்டை செய்யும் இருவரும் பிணைத்துக் கொண்டனர். அவர்களை மத்தியஸ்தக்காரர் பிரித்து விட்டார். இதுமாதிரி அடிக்கடி நடந்தது.

ஒரு குரல்:—விளக்கையெல்லாம் அணைத்து விடுங்கள்.

மற்றொரு குரல்:—விளக்கை எல்லாம் ஏற்றுங்கள். பேபர் படிக்கலாம்.

* * * *

தாய்:—பக்கத்து வீட்டுப் பையனுடன் நீ சண்டையிட்டாயாமே?

சிறுவன்:—அவன் என்னை அடித்தான். நான் அவனை அடித்தேன்.

தாய்:—போனால் போகிறது. நாளைக்கு அவனுடன் சிநேகம் செய்துகொள்.

சிறுவன்:—உடம்புக்கு ஒன்றுமில்லாம லிருந்து அவன் நாளை பள்ளிக்கூடம் வந்தால் சிநேகம் செய்துகொள்ளுகிறேன்.

* * * *

ஒருவர் தமது சிநேகிதருடன் வெகு நேரம் குடித்துக் கொண்டிருந்தார். சிநேகிதருக்குக் குடிப்பழக்கம் இல்லாததால் குடிப்பதுபோல் பாவனை செய்துகொண்டிருந்தார். வெகுநேரமான பிறகு இருவரும் படுக்கச் சென்றனர். கொசு அதிகமாக விருந்ததால் சிநேகிதர் வேலைக்காரனை அழைத்து ஒரு கொசுவலை கேட்டார்.

வேலைக்காரன்:—இங்கு கொசுவலை கிடையாது.

"பிறகு உங்கள் எஜமானர் எப்படித்தூங்குகிறார்."

"முதலில் குடிக்கும் மும்முரத்தில் கொசுக்கடிப்பது தெரியாது. குடித்த பிறகும் கொசுக் கடித்தால் தெரியாது."

* * * *

சிறிது படித்த ஒரு ஸ்திரீ பாங்கிக்குச் சென்று ஒரு 'செக்'கை மாற்றுவதற்காகக் கொடுத்தாள். அங்குள்ளவர் பின்னால் கையெழுத்துப்போட வேண்டுமென்றார். ஸ்திரீக்கு இது புரியவில்லை.

"உங்கள் கடிதத்தில் கையெழுத்துப்போடுகிறபடி 'செக்' பின்னால் கையெழுத்துப் போடவேண்டும்"

ஸ்திரீ, 'உன் அன்புள்ள லக்ஷ்மி' என்று கையெழுத்துப் போட்டாள்,

* * * *

விருந்துச் சாப்பாடு முடிந்தது. முக்கிய விருந்தாளி எழுந்து பேச ஆரம்பித்தார். அரை மணி நேரம் சென்றது. ஆனால் அவர் நிறுத்துவதாகவில்லை. மேலும் அரை மணிநேரமாவது பேசுவார்போல் தோன்றியது.

ஒருவர் பக்கத்திலிருந்த ஸ்திரீயிடம்:—இவன் எப்பொழுது ஓய்வானோ தெரியவில்லையே இச்சப் பிரசங்கத்தை நிறுத்த வழியொன்றும் இல்லையா?

ஸ்திரீ:—சென்ற 15 வருஷங்களாக எவ்வளவோ முயற்சி செய்துவிட்டேன். ஒன்றும் பிரயோஜனமில்லை.

* * * *

கிரிக்கெட் பந்தயம் நடந்து கொண்டிருந்தது. முருகன் ஒரு கோஷ்டியைப் பலமாக ஆதரித்துக் கத்திக்கொண்டிருநதான். சுமார் அரை மணி நேரம் இப்படிக் கத்தியிருப்பான். கடைசியில் அவனுக்குத் தொண்டை கம்மிப்போய்விட்டது. பக்கத்திலிருந்த தன் நண்பனைப் பார்த்து, "எனக்குத் தொண்டை கம்மிவிட்டது. வார்த்தைகளுமபோய்விட்டது" என்றான்.

நண்பன்:—உன் வார்த்தைகள் எங்கும் போகவில்லை எனது வலது காதிலிருக்கின்றன.

* * * *

"இன்று காலை கொடுத்த தபாலைப் போஸ்டு செய்துவிட்டாயா?"

"இல்லை."

"நான்தான் அவசரமானதென்றும் மறவாமல் போஸ்ட் செய்யவேண்டுமென்றும் சொன்னேனே"!

"ஆமாம். கடிதத்திற்கு விலாஸம் எழுதாமல் கொடுத்தால் எந்த விலாஸத்திற்குப் போஸ்ட் செய்கிறது."

* * * *

லண்டனிலுள்ள நகர ஆஸ்பத்திரியில் குருடர்கள் டெலிபோன் ஆபரேடர்களாக வேலை செய்கின்றனர்.

6 அணா அனுப்பினால் 24 அங்குல தசாவதார கலர் மாலை அனுப்பப்படும்.

யூனிவர்ஸல் ஏஜன்ஸி

P B. No 28, சென்னை

மல்லிகாவின் பாக்யமே பாக்யம்!

போன வருடம் ஐயோ! அப்பா! என்று கஷ்டப்பட்டவள் இவ்வருடம் ஒரு குழந்தையை அன்புடன் அணைகிறாள்

"வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரி"

ஸ்திரீகளுக்கு மாதக்குளி காலத்தில் உண்டாகும் சூதக வாய்வு, சூதக பந்தம், சூதகக்கட்டினால் உண்டாகும் வயிற்று வலி, பேதி, பசியின்மை, வாந்தி, மயக்கம், தலைவலி, ஜ்வரம், உடல் ஸ்தூலித்தல் முதலிய எல்லா கர்ப்பாசய வியாதிகளையும் கண்டித்து மலட்டுப் பூச்சிகளைக்கொன்று, கருப்பைக்கு பலந்தந்து ரக்ஷித்து சந்தான பாக்யத்தையளிக்கும் உன்னத ஔஷதம். பத்தியமில்லை, செட் விலை ரூபா 5.

வேலன்ஸ்மெடிகல் ஹால் 61, காரணீஸ்வரர் கோயில் தெரு மைலாப்பூர், சென்னை

த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீநிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

ஏநோமு நோசிதிமோ செலுலமேதான மொஸகிதி மோ (ஏ)

அநுபல்லவி

ஸ்ரீநாது கொலுவமரெ செலுல செக்கிள்ள நொத்துசுநு
மாநக மோவாநுசு சந்த்ராననு ஹ்ருதயானனும்ச (ஏ)

சரணங்கள்

1. ஸ்த்ரீ ரத்னமுலு மனமு செலுலு-காமிஞ்சு யௌவனுடை
வாரிஜ லோசனுடு செலுல-பாலாயெ கதவம்ம
கோரிக லீடேரனு, யது-வீருனி கனுலாரஜூட (ஏ)

2. பங்காரு ஸொம்முலனு செலுலு-பாகுக் பெட்டுகொனி
ச்ருங்காராம்பராமுலனு செலுலு-செலுவொந்த கட்டுகொனி
ஸங்கதிகானங்கமுலுசு—பாங்குனிகி யொஸங்கக மந (மே)

3. பொங்காருனீ நதிலோ செலுலு—பொந்துகா குமிகூடி
மங்களா காருனிதோ செலுலு—மனஸார கூடிதிமி
ரங்கபதியுப் பொங்குசு மன—செங்கடனு ஜெலங்கக மன (மே)

4. வாகீசாத்யமருலகு செலுல—வர்ணிம்ப தரமௌனு
த்யாகராஜாப்துனிதோ செலுலு—போகமு லந்துசுனு
பாகுக தமிரேகனு நய ராகமு லீலாகு பாட (ஏ)

II

ஸ்ரீ நாது கொலுவமரெ	—லக்ஷ்மீ நாயகனான பகவானுடைய
செலுல	—பெண்களுடைய
செக்கிள்ள நொத்து சுநு	—கன்னங்களைப் பிடித்துக்கொண்டு
மாநக மோவாநுசு	—விடாமல் முகம்வைக்கும்
சந்த்ராननு ஹ்ருதயானனும் ச	—மதிபோன்ற முகத்தை நம் மனத்தில் பொருத்திக் கொள்வதற்கு
(ஏநோமு நோசிதிமோ	—என்ன நோன்பு நோற்றோமோ?)
செலுலமேதான மொஸகிதிமோ	—பெண்களாகிய நாம் என்ன தானதர்மங்களைச் செய்தோமோ?
1. ஸ்த்ரீரத்னமுலு மனமு செலுலு	—ஸ்த்ரீரத்னங்களாகிய பெண்களாகிய நாம்
காமிஞ்சு யௌவனுடை	—காதல் கொள்ளும்படியான யௌவனப் பிராயத்தனாய்
வாரிஜ லோசனுடு	—செந்தாமரைக் கண்ணன்
செலுல் பாலாயெகதவம்ம	—பெண்களாகிய நம் வசத்தவனானானல்லா?
கோரிகலீடேரனு	—நம் கோரிக்கைகள் ஈடேறின.
யது வீருனி கனுலாரஜூட	—யதுகுல ச்ரேஷ்டனான அந்தப் பரமாத்மாவை கண்ணார நாம் காணும்படி
(ஏநோமு நோசிதிமோ	—என்ன நோன்பு நோற்றோமோ?)
2. செலுலு (மநமு)	—பெண்களாகிய நாம்
பங்காரு ஸொம்முலனு	—பொன்னாபரணங்களை
பாகுக பெட்டு கொனி	—நன்றாக அணிந்துகொண்டு
ச்ருங்கார அம்பாமுலநு	—அழகான ஆடைகளை
செலு வொந்தகட்டுகொனி	—சிறக்கக் கட்டிக்கொண்டு
ஸங்கதிகானங்க முல சுபாங்குனிகி ஒஸங்கக	—கூடியிருத்தற்பொருட்டு அந்த ஸௌந்தராங்கனுக்கு நம் அங்கங்களை ஒப்புவிக்க,
(ஏநோமு நோசிதிமோ	—என்ன நோன்பு நோற்றோமோ?)
3 கொங்காருனீ நதிலோ	—வெள்ளம் நிரம்பிய இந்த யமுனா நதியிலே
செலுலு மனமு	—பெண்களாகிய நாம்
பொந்துகாகுமி கூடி	—அழகாகக் கும்பல் கூடி
மங்களாகாருனிதோ	—திவ்ய மங்களரூபனான ஸ்ரீக்ருஷ்ணனோடு
மனஸார கூடிதிமி	—த்ருப்தியாகக் கூடி விளையாடினோம்.
ரங்கபதி	—ப்ரபஞ்ச நாடகத்தை நடத்தும் அந்தப் பரமாத்மா
உப்பொங்குசு	—மிக்க ஸந்தோஷத்தையுடையவனாய்
மன செங்கடனு ஜெலங்கக	—நம்முடைய......நன்றாக விளங்கும்படி செய்ய
(ஏநோமு நோசிதிமோ	—என்ன நோன்பு நோற்றோமோ?)
4. வாகீசாத்யமருலகு	—ப்ரம்ஹா முதலான தேவர்களுக்கு
செலுல வர்ணிம்ப தரமௌனு	—பெண்களாகிய நம்மை வர்ணிக்கச் சாத்தியமாகுமா?
த்யாகராஜாப் துணிதோ	—த்யாகராஜனுக்கு ஆப்தனான அந்தப் பரமாத்மாவுடன்
போகமுலந்துசுனு	—போகங்களையடைந்து
பாகுக	—நன்றாக
தமிரேககனு	—உத்ஸாகம் மிகும்படி
நயராக முலீலாகு பாட	—நயமான ராகங்களை இவ்வாறுபாட
(ஏநோமு நோசிதிமோ	—என்ன நோன்பு நோற்றோமோ?)

(12-ம்பக்கம் பார்க்க)

Broadcast பிராட்காஸ்ட்டு

ரிகார்டு

பொது ஜனங்களால் கொண்டாடப்பட்டும் நவீன மெட்டுகளில் வெகு உன்னதமாய் ரிகார்டு செய்யப்பட்டுமிருக்கும் டிராமா செட்.

"மனோரஞ்சனி"

ஐந்து ரிகார்டுகளில் அடங்கியவை

உடனே கேளுங்கள்! கேட்டால் வாங்குவது நிச்சயம்!

கும்பகோணம் - ராஜமாணிக்கம் பிள்ளை

பிடில்

G. R. 2408 { ஸங்கீத ஞானமு
பாகம் 1 & 2 —தன்யாசி

தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்,

313, எஸ்பிளனேட் - மதராஸ்.

உயர்தர வைரங்களும்

எல்லா வகை ஆபரணங்களும்

கிடைக்குமிடம்:

ஸூராஜ்மல்ஸ்,

313, எஸ்பிளனேட் : : மதராஸ்.

III

இந்தக் கிர்த்தனமும் நௌகா சரித்திரத்தில் வருகிறது. ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவோடு கூடியாடிச் சுகித்த கோப ஸ்திரீகள் தங்களுடைய பாக்கியத்தைக் குறித்துப் பெருமிதங்கொண்டு பாடுவதாக இது அமைந்துள்ளது.

ஏநோமு நோசிதிமோ:—ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவைப்பற்றி ஆழ்வார் பாடியபோது, 'என்ன நோன்பு நோற்றாள்கொல்லோ இவனைப்பெற்ற வயிறுடையாள்' என்று அருளிச் செய்தது இங்கு கவனிக்கத்தக்கது.

''ஸ்த்ரீ ரத்னமுலு மனமு சேலுவ காமிஞ்சி'':—'ஸ்ரீரத்னமுலு மனமு ஸ்ரீமிஞ்சி' என்றும் பாடம்.

ரங்கபதி:—ரங்கம் என்றால் நாடக மேடை. நாடக மேடைக்கு அதிபதி 'ரங்கபதி' ஸூத்ரதாரி. எனவே, ப்ரபஞ்ச நாடகத்தை நடத்துவிக்கும் பரமாத்மா. ஸ்ரீரங்கநாதன் என்ற பதத்திற்கும் இதே பொருள். ரங்கநாதனைப்பற்றிய கீர்த்தனைகளின் உரையிற் பார்க்க.

வாகீசன்:—ப்ரம்ஹா, ப்ருஹஸ்பதி என்னும் பொருள் உண்டு.

IV

புன்னாகவராளி. சதுர்ச்ர ரூபகம்

இந்த ராகத்தின் லக்ஷணத்திற்குச் சென்ற வார 'மித்திரன்' இதழைப் பார்க்கவும்.

[குறிப்பு:—இந்தக் கீர்த்தனத்தைச் சிறிது சவுக்கமாகப் பாடுவது ரஞ்சகமாக இருக்கும்.]

பல்லவி

; * ஸரி	கா ; ரீ ஸா	ஸாரீ	நீ ; ஸா ஸா	ஸா பா	பா ; ; பா	பமகா	கா ரீ ஸா ;
; * ஏ	நோ ; மு நோ	சி தி	மோ ; செலு	ல மே	தா ; ; ந	மொஸ	கி தி மோ ;
நீ * ஸரி	கா ; ரீ ஸா	ஸாரீ	ரிஸநீ ஸா ஸா	ஸா பா	பா ; ; பா	பமகா	கா ரீ ஸா ;
; * ஏ	நோ ; மு நோ	சி தி	மோ செலு	ல மே	தா ; ந	மொஸு	கி தி மோ ;
நீ * ஸரி	கா ; ரீ ஸா	ஸாரீ	ரிஸநீ ஸா ஸா	ஸா பத	நீ ; தா பா	பமகா.	கா ரீ ஸா ;
; * ஏ	நோ ; மு நோ	சி தி	மோ சிலு	ல மே	தா ; ந	மொஸு	கி தி மோ ;

நீ *
; * }(ஏநோமு)

அநுபல்லவி

; * பா	பா ; பா பா	பமகா	ரீ ஸா ஸா நீ	ஸா பா	மா ; பா பா	பாமகா.	கா ரீ ஸா ;
; * ஸ்ரீ	நா ; து கொ	லு வ	மரோ செ லு	ல செக்	கின் ; லு	நொ...த்	து சு நு;
; * பா	பா பா பா ;	தா நீ	தா பா பா ;	பா மா	தா பா பா நா	பா ;	மாகா ரீஸா ;
; * மா	ந த மோ ;	வா	நு சு சந் ;	த்ரா	ந நு ஓம்ருத	யா ;	ந நும். ச

நீ *
; * }(ஏநோமு)

சரணம்

; * ஸரி	கா ரீ ; ஸா	ஸாரீ	ரீ ரீ ஸா நீ	ஸா ஸரி	ஸ்ரீ ஸா நீ	ஸாநீ	ஸா ; ஸா ;
; * வா	கீ சா ; த்ய	ம ரு	லகு செலு	ல வர்	ணிம் ப	த ர	மௌ ; நா;
; * பா	பா பா ; பா	பா மா	காரீ ஸாநீ	ஸா ஸரி	கா மா பா ;	பா மா	கா மா பா ;
; * த்யா	க ரா ; ஜாப்	து டி	தோ செலு.	ல போ	க முலந் ;	து	சு து ;
பா ;	பா பா பா பா	நீ ;	தா பா பா பா	பா பம	தா பா பா பா	பா ;	மா காரீ ஸா
பா ;	கு க த மி	ரே ;	க க நுந	ய ரா	க மு லீ	லா ;	கு யா ட

நீ *
; * }(ஏநோமு)

(மற்ற சரணங்களையும் இதைப்போலவே பாடவேண்டும்.)

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அர்மீனியன் தெரு, மதராஸ். B 7

"இதென்ன சகோதரர்களும் சகோதரிகளும் வேண்டியிருக்கிறது. அவர்கள் என்ன நமக்கு அண்ணன் தம்பிகளா, அக்கா தங்கைகளா? வேறு ஏதாவது ஆரம்பியுங்கள்" என்று உத்திரவிட்டுச் சென்றாள்.

செய்யாத பிரசங்கம்

———:[o]:———

"ராம்"

கௌரி ஒரு பாங்க் மானேஜரின் பெண். அவள் தந்தை அவளுக்கு ரொக்கமாகப் பதினாயிரம் ரூபாய் கொடுத்து பாங்கில் போடச்சொல்லியிருந்தார். அதற்கு வருஷத்துக்கு நூற்றுக்கு ஆறு வீதம்தான் வட்டி கிடைத்து வந்தது.

இன்னும் அதிகலாபம் வரும்படியாகப் பணத்தை உபயோகிக்கலாமென்று அவள் ஆசைப்பட்டாள். அவள் கணவன் பரமேசுவரன் கருப்பூர் மின்சார ஸப்ளை கார்ப்பொரேஷன் பங்குகள் வாங்கினால் நூற்றுக்கு முப்பதுவிதம்லாபம்கிடைக்குமென்று தெரிவித்தான்.

"சரி, பணத்துக்கு ஆபத்து வராதே" என்று கேட்டாள் கௌரி.

"எனக்குத் தெரிந்தவரையில் இரண்டே இரண்டு சந்தர்ப்பங்களில்தான் நஷ்டம் உண்டாகலாம்" என்றான் பரமேசுவரன்.

"எப்படி நஷ்டம் உண்டாகும்?"

"கருப்பூர் மகாஜனங்கள் எலெக்டிரிக் விளக்குகளை உபயோகப்படுத்தமாட்டேனென்று சொன்னாலும் சரி, கருப்பூரில் பூகம்பம் ஏற்பட்டு ஊர் நாசமானாலும் சரி, உன் பணம் நஷ்டந்தான்" என்று பரமேசுவரன் தெரிவித்தான்.

"பரியாசம் பண்ணுகிறீர்கள். ஐயாயிரம் ரூபாய்க்கு அந்தப் பங்குகளை வாங்கி விடுங்கள். பணத்துக்கு நீங்கள் தான் ஜாவர்தாரி" என்றுசிரித்துக் கொண்டே சொன்னாள்.

* * * *

மேற்படி சம்பாஷணை நடந்து ஒரு வருஷமாயிற்று. ஒரு நாள் பரமேசுவரன் தனக்கு வந்த கடிதமொன்றைப் படித்து விட்டு அதற்குப் பதில் எழுதிக்கொண்டிருந்தான். "என்ன கடிதம்?" என்று கௌரி விசாரித்தாள்.

"ஒன்றுமில்லை. கருப்பூரில் ஒரு பிரசங்கம் செய்யும்படி கேட்டிருக்கிறார்கள்."

"எதைப்பற்றிப் பிரசங்கமோ?"

"எனக்கு இஷ்டமான எந்த விஷயத்தைப்பற்றியும் பேசலாமாம்."

"எப்பொழுது போகப் போகிறீர்கள்?"

"நான் கருப்பூருக்குப் போகப் போவதுமில்லை, பிரசங்கம் செய்யப் போவதுமில்லை. வர முடியாதென்று கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன்" என்றான் பரமேசுவரன்.

"நன்றாயிருக்கிறது. மெனக்கெட்டு வரும்படி கடிதம் எழுதியிருக்கிறார்கள், போய் பிரசங்கம் செய்து விட்டு வாருங்கள். உங்கள் பிரசங்கத்தை நான் பத்திரிகையில் படிக்கவேண்டும். போட்டோ கூடப் போடுவார்களா?" என்று கௌரி கேட்டாள்.

"அதென்ன பண்ணுவார்களோ?" என்று பரமேசுவரன் வெறுப்புடன்பதில்சொன்னான்.

"போவதில் உங்களுக்கொன்றும் பணச் செலவில்லையே" என்று எப்பொழுதும் பணத்தில் கருத்துள்ள கௌரி வினவினாள்.

"இல்லை. ரயில் சார்ஜு எல்லாம் அவர்களே கொடுத்து விடுவார்கள்."

"பின் என்ன? போய்விட்டு வாருங்கள்" என்றாள் கௌரி.

* * * *

அன்று பகல்முழுதும் பரமேசுவரன் தான் செய்யப்போகும் பிரசங்கத்தை எழுதுவதில் ஈடுபட்டிருந்தான். காகிதத்தில்

ஆடுகளின் பழக்க வழக்கங்கள்

கருப்பூர் நகர கலாசங்கத்தில் ஜனவரிமாதம் 10-ந்தேதி செய்த பிரசங்கம்:—

சகோதரர்களே, சகோதரிகளே! என்று ஆரம்பித்திருந்தான்.

இதற்குமேல் என்ன எழுதலாமென்றுசிந்தித்துக்கொண்டிருந்தபொழுது கௌரி வந்து எழுதியிருந்ததைப் படித்தாள்

"இதென்ன சகோதரர்களும் சகோதரிகளும் வேண்டியிருக்கிறது. அவர்கள் என்ன நமக்கு அண்ணன் தம்பிகளா, அக்கா தங்கைகளா? வேறு ஏதாவதுஆரம்பியுங்கள்" என்று உத்திரவிட்டுச் சென்றாள். பிறகு அவன் தன் காரியங்களைக் கவனித்துவிட்டு அரை மணி கழித்துத் திரும்பிய போது "எழுதியாய் விட்டதா?" என்று கேட்டாள். பரமேசுவரன்தான் எழுதியதை எடுத்து நீட்டினான்.

பனிக்குப் பரிகாரம்

கருப்பூர் நகர கலா சங்கத்தின் ஜனவரி மாதம் 10-ந் தேதி செய்த பிரசங்கம்:—

ஸ்ரீமான்களே, ஸ்ரீமாட்டிகளே!

காகிதத்தில் எழுதியிருந்தது இவ்வளவுதான். பாக்கி எங்கே? என்னமோ முதலில் ஆடு என்று எழுதியிருந்தீர்கள். இப்பொழுது பனியைப்பற்றி எழுதி யிருக்கிறீர்களே" என்றாள் கௌரி.

"எனக்குப் போவதற்கே இஷ்டமில்லை. உன் தொந்தரவுக்காகத்தான் போக ஒப்புக்கொண்டேன் ஆனால் என்ன பிரசங்கம் செய்வதென்று எனக்கே நிச்சயமாகவில்லை. "விமானத்தில் கொசு கடிக்குமா?" என்பதைப் பற்றிப் பேசலாமா என்று யோசனை செய்துகொண்டிருக்கிறேன்" என்று பரமேசுவரன் கூறினான்.

"ஏதாவது சீக்கிரம் எழுதி முடியுங்கள்."

"நீ சொல்லுகிறபடியே செய்கிறேன். ஆனால் நீ இப்படித் தியாகஞ் செய்வாய் என்று நான் எண்ணியதே இல்லை" என்றான் பரமேசுவரன். அவன் முகத்தில் விஷமப் புன்னகை தாண்டவமாடிற்று.

"நானா என்ன தியாகஞ் செய்துவிட்டேன்?"

"அதுவும் உன் சொந்த லாபத்தைக்கூடக் கவனிக்காமல் இருப்பாயென்று நான் எதிர்பார்க்கவே இல்லை."

"தியாகமாவது, லாபமாவது, நீங்கள் சொல்வது ஒன்றும் எனக்குப் புரியவில்லையே" என்றாள் கௌரி.

"புரியும்படியாகச் சொல்கிறேன், கேள். நான் கருப்பூரில் பிரசங்கம் செய்தால் அந்தக் கூட்டத்திற்கு சுமார் நானூறு ஐந்நூறு பேராவது வருவார்கள்."

"வந்தால் நல்லதுதானே? உங்கள் பெயர் பிரசித்தியடையும், அதனால் நான் பெருமையடைவேன்"

"சொல்வதை முழுவதும் கேள். பிரசங்கம் ஆறு மணிக்கு ஆரம்பித்து ஒன்பது மணிக்கு முடிவடையும்"

'பத்துமணிதான் ஆகட்டுமே'

"பன்னிரண்டானாலும் எனக்கு ஆக்ஷேபனை இல்லை. ஆனால் பிரசங்கத்துக்கு வருபவர்கள் வீட்டில் அன்று எலெக்டிரிக் விளக்குகள் அதிகமாக எரியாது. புருஷர்கள் வீட்டில் இல்லாவிட்டால் ஒருவிளக்கோ இரண்டு விளக்குகளோதான் எரியும் என்று உனக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. விளக்குகள் எரியாவிட்டால் எலெக்ட்ரிக் ஸப்ளை கார்ப்பொரேஷனுக்குத்தான் நஷ்டம். உன்பங்குகளுக்குப் பிறகு எங்கிருந்து நிறைய லாபம் வரும்?" என்று பரமேசுவரன் கூறிவிட்டுப் பிரசங்கம் எழுத ஆரம்பிப்பவன் போல் பேனாவை எடுத்தான்.

புருஷன் சொன்னதைக் கேட்டதும் கௌரியின் முகத்தில் ஈயாட்டவில்லை. அவள் "நீங்கள் போகாவிட்டாலும் வேறு யாராவது பிரசங்கம் செய்யத்தானே போகிறார்கள்?" என்று கவலையுடன் கேட்டாள்.

"இல்லை. நான் போகவில்லையென்று சொன்னால் சங்கத்தின் கூட்டமே நடக்காது. ஏனென்றால் அவர்கள் வேறு ஆசாமி தேடுவதற்கு அவகாசமே இல்லை. ஆனால் நான் ஏன் அவர்களை ஏமாற்றமடையச் செய்ய வேண்டும்" கௌரி! நீ கருப்பூர் பொது ஜனங்களுக்காகத் தியாகஞ் செய்வதை நினைக்கும் போது..." என்று பரமேசுவரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கௌரி குறுக்கிட்டு "நீங்கள் தான் போகப் பிடிக்கவில்லை என்று முதலில் சொன்னீர்களே. வர சௌகரியப்படவில்லையென்று கடிதம் எழுதி விடுங்கள்" என்றாள்.

வெண் குஷ்டம்

பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக,

KAMALA WORKS (S. M.)

Panchpota—Bengal, India

கண்ணோட்டம்

பிரமுகர்கள்

மங்களூர் ஜில்லா ஜட்ஜின் மனைவி பேகம் மீர் அமீருடன் ஆக்ஸ்போர்டில் நடைபெற விருக்கும் சர்வதேச மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்

இம்மாதம் லக்ஷ்மணபுரியில் நடைபெறவிருக்கும் கவிகள் சம்மேளனத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தர்ம திவாகர மஹாராஜ ராணா ஸ்ரீ ராஜேந்திர ஸிங் ஜெயதேவ்.

கூடலூர் ஸெயின்ட் ஜோஸப் ஸெகண்டரி ஸ்கூல் அதிபராகவிருந்த ரெவரண்ட் பி. வெர்டர், சமீபத்தில் காலமானார்.

(இடது பக்கம்) கீழத்தஞ்சை ஜில்லா போர்டு புதிய தலைவர் ஸ்ரீமான் எம். டி. குழந்தைவேலு செட்டியார். (வலது பக்கம்) மேலத் தஞ்சை ஜில்லா போர்டு புதிய தலைவர் ஸ்ரீமான் வி. நாடிமுத்து பிள்ளை



சென்னையில் நடைபெறும் அகில இந்திய காங்கிரஸ் சுதேசி பொருட்காட்சியில் தேனீ வளர்ப்பதைக் காட்டிவரும் ஸ்ரீமான் எஸ். கோபாலகிருஷ்ணன்.



வாய்ப்பாட்டுப் போட்டியில் வெற்றி பெற்று சென்னை சங்கீத வித்வத் சபையால் தங்கப் பதக்கம் பரிசளிக்கப்பட்ட ஸ்ரீமான் முத்துஸாமியின் குமாரி ஸ்ரீமதி மீனாக்ஷி.

உயர்தர வைத்தியப் படிப்பிற்காக இங்கிலாந்து செல்லும் ஸ்ரீமான் ரத்னவேலு.

சென்னை மாகாண சிறைகள் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர். டி. ஜி. ரூதர்போர்ட், ஐ. ஸி. எஸ்.

நவ நாகரீகம்

பிச்சிப்பு மாலை

(காசினி எழுதியது.)

பிச்சிப்பூ மாலை என்றதும் பிச்சிப் பூக்களினால் தொடுக்கப்பட்ட மாலை என்று எண்ணிவிடாதே; இந்த மாலை தங்கத்தினால் செய்யப்பட்டதாகும். என் சிநேகிதி ஒருத்தி இந்த மாதிரிச் சங்கிலி ஒன்று சமீபத்தில் செய்து கொண்டாள். சங்கிலியும், பிச்சி மொக்குகளுமாகச் சேர்ந்து ஐந்து பவுன்கள் ஆச்சுது என்று சொன்னாள். சங்கிலி சாதாரண கடிகாரச் சங்கிலி மாதிரியில் செய்யப்பட்டிருந்தது; ஆனால் மிகவும் மெல்லியதாக இருந்தது. இதில் ஒவ்வொரு அங்குல இடை வெளி விட்டு, பிச்சி மொக்கு மாதிரியில் செய்யப்பட்ட தங்க மொக்கு கோக்கப்பட்டிருந்தது. மொக்கின் காம்பு நல்ல நீளமாகச் செய்யப்பட்டிருந்தது. இதைப் பூ மாலையில் தொடுப்பது போல் இரட்டையாக வைக்காமல், வெளிப் பக்கத்தைப் பார்த்து மொக்கு நீட்டிக் கொண்டிருக்கும்படி ஒத்தை, ஒத்தை மொக்காகவே கோத்திருந்தது. மேலும், ஒரு மொக்குக்கும், மற்றொரு மொக்குக்கும் நடுவில் ஒரு அங்குல நீளம் சங்கிலி தெரியும்படி விட்டு, விட்டுக் கோத்திருந்தது. தன் சிநேகிதி ஒருத்தி மொக்குகளை நெருக்கிக் கோத்து மாலை செய்துகொண்டதாகவும், மாலை அகலமாக இருந்தது அவ்வளவு அழகாக இல்லை என்றும் என் சிநேகிதி சொன்னாள். இந்த மாலை அழகாகவும், நாசூக்காகவும் இருந்தது.

கதர் பட்டுப் புடவை

'கதர் பட்டுப் புடவைகளில் புதிய தினுசுகள் வந்திருக்கிறதாமே? என்ன தினுசுகள்? நீ பார்த்தாயா?' என்று நீ கேட்டிருக்கிறாய். ஆமாம்! பொருட்காக்ஷிச்சாலையில் பார்த்தேன். கதர் பட்டுப் புடவைகளுக்குச் சாதா உடலும், பூக்கொடிகள் மாதிரியில் அச்சிடப்பட்ட கரையும், தலைப்பும், அல்லது உடலிலும் பூக்கள் அச்சடித்து

இருந்ததில்லையா? இப்பொழுது புடவை என்றதும் நினைவு நெய்வதில் ஏதோ தடங்கல் கொர்னாடு புடவை மாதிரிபல வருகிறது. தீபாவளிக்கு ஆனை ஏற்பட்டு விட்டது என்றும்

தமது குமாரன் ஏ. எம். லோபோவின் விவாகத்தையொட்டி மாஜி ஜில்லா ஜட்ஜ் திவான்பகதூர் பி. வி லோபோ சென்னையில் ஒரு விருந்து நடத்தினர் விவாக தம்பதிகளைப் படத்தில் காணலாம்.

உடலில் கட்டான்கள் போட் பின் சிவன் மனைவி ஒரு புட சமயத்திற்குப் புடவை வராது டுக் கரை, தலைப்பு எல்லாம் வைக்குச் சொல்லி இருந்தாள். என்றும்கடைக்காரன் சொல்லி போட்டு நெய்து விற்கிறார்கள். லேடி சின்னய்யாபோனவாரம் இந்தப் புடவைகளில் இரண்டு வாங்கினாள். ஒன்று ஒருவித இலேசான கனகாம்பர நிறமாக இருந்தது ஆழ்ந்த சிகப்பில் நெருக்கமான கட்டங்கள் போட்டிருந்தது. சாண் அகலத்துக்கு அரக்குக் கரை போட்டிருந்தது. இதில் அழகிய மாதிரியில் சரிகைப் பேட்டுப் போட்டிருந்தது. மற்றொரு புடவை நல்ல நீல நிறமாக இருந்தது. இதற்கும் கரைக்குச் சரிகை நெளி போட்டிருந்தது ஒரு புடவையின் விலை இருபத்து ஒன்பது ரூபாய்களும், மற்றொன்றின் விலை முப்பது ரூபாய்களும் ஆச்சுது என்று சொன்னாள். இரண்டு புடவைகளும் மிகவும் நேர்த்தியாக இருந்தன.

கூந்தல் மட்டுமேல்லாமல், அழகிய சுருண்ட முன் நெற்றி மயிரையும், காதோரங்களிலும், புறங்கழுத்திலுமுள்ள ஸூக்ஷ்மமான கேசராசிகளையும் வளரச் செய்வதால் கேசவர்த்தினி, மனம் கவரும் ஸௌந்தர்யத்தை மாதர் முகத்துக்குத் தருகிறது. கூந்தல் அழகுக்கும் முக அழகுக்கும் ஒருங்கே காரணமாவது

கேசவர்த்தினி

ஒன்றே.

மாத உபயோகத்துக்கும் போதமான புட்டி விலை அணா 12·

மேற்செலவு வேறு.

தயாரிப்பவர் :— தென் இந்திய ரஸாயனசாலை,
மயிலாப்பூர், சென்னை.

விட்டான். இதில் வந்த கோபத்தில் 'உன் கடையில் இனிமேல் புடவையே வாங்கப் போவதில்லை; இத்தனை வருஷமாக வாங்குகிறேன். இப்படிச் சமயத்தில் மோசம் செய்வது நாணயம்; ரொம்ப நன்றாக இருக்கிறது?' என்று ஆனரபில் சிவன் மனைவி கோபித்துக் கொண்டு வந்து விட்டாள். பிறகு வேறொரு கடையில் ஒரு புடவையும் வாங்கிவிட்டாள். பத்து தினங்களுக்கு முன், கடைக்காரன் அவள் கேட்டிருந்த புடவையை எடுத்துக் கொண்டு, ஆனரபிள் சிவன் வீட்டிற்கு வந்திருந்தான். அந்தச் சமயம் ஏதோ அலுவலின் பேரில் நானும் அவர்கள் வீட்டிற்குப் போயிருந்தேன். தாமதம் ஆனதற்கு மன்னிக்கும்படிக்கும், இனிமேல் இவ்விதம் ஒரு நாளும் நேராதென்றும் வாங்கிக் கொள்ளாவிட்டாலும், புடவையைப் பார்க்கும்படிக்கும் வேண்டிக் கொண்டான். ஆனரபிள் சிவன் மனைவிக்கும் இதற்குள் கோபம் தணிந்து வெகு காலமாகி விட்டதினால், முதலில் சற்று பிகு பண்ணிக்கொண்டு, பிறகு புடவையைக் காட்டச் சொன்னாள். ஆழ்ந்த நாகப்பழ வர்ணம். இதில் சற்றே அகலமான கட்டான்கள் பச்சைக் கோட்டில் போட்டிருந்தது. ஒரு தலைப்பு பூனைத் தலைப்பு மற்றொரு தலைப்பு முக்கால் முழம் நீளமுள்ள தாழம்பூத் தலைப்பு. இதில் சரிகைக் கோடுகள் போட்டிருந்தன. சாண் அகலத்திற்குச் சற்று குறைவான மஞ்சள் கரை. இதில் பெரிய உத்ராக்ஷ சரிகைப் பேட்டுப் போட்டிருந்தது. புடவையின் விலை ஐம்பத்தி ஐந்து ரூபாய்கள் என்று கடைக்காரன் சொன்னான். புடவை ஒன்பது கஜம் புடவை. 'ஏதாவது விசேஷ தினங்களில் மடிசார் புடவை கட்டிக்கொள்ள வேண்டி வந்தால் நல்ல புடவையாக ஒன்றும் இல்லையே என்றுதான் இதை ஒன்பது கஜமாக நெய்யச் சொன்னேன். இவன் மோசம் செய்துவிட்டான். அப்புறம் ஆறு கஜம் புடவைதான் மனதுக்குப் பிடித்ததாகக் கிடைத்தது. சரி போனால் போகிறது; இந்தப் புடவையையும் வாங்கிக்கொண்டு விடுகிறேன்' என்று சொல்லிப் புடவையை எடுத்துக் கொண்டு விட்டாள். புடவை நெசவும், வர்ணமும், மிகவும் பார்வையாகவும், நேர்த்தியாகவும் இருந்தது.

பார்க்காய் ஊறுகாய்

இந்த ஊறுகாய்க்குப் பார்க்காய் கொம்புப் பார்க்காயாக இருக்க வேண்டும். அதிலும் வெள்ளை ஜாதிப் பாக்காயாக இருக்க வேண்டும். அதிக முத்தலாகவோ, அல்லது அரும் பிஞ்சாகவோ இருக்கக் கூடாது. நடுத்தர விளைச்சலாக இருக்க வேண்டும். இதை இரண்டாக நீள வாட்டத்தில் பிளந்து, சிறிய, சிறிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ள வேண்டும். நல்ல சாருள்ள எலுமிச்சம் பழங்களாகப் பொறுக்கி எடுத்து, ரசத்தைப் பிழிந்துகொள்ள வேண்டும். வேண்டிய அளவு உப்பை இடித்துப் போட்டு, நறுக்கி வைத்திருக்கும் பார்க்காய்த் துண்டுகள் முங்கும் அளவுக்கு எலுமிச்சம் பழ ரசத்தை விடவேண்டும். பழ ரசம் போதாதென்று தண்ணீரை விடக் கூடாது. மறு நாள் வேண்டிய அளவு கார்த்துக்குப் பச்சையாக இடிக்கப்பட்ட மிளகாய்த் தூளைப் போட்டு, பெருங்காயத்தைப் பொரித்துப் போட்டு, எண்ணெயையும் காய்ச்சி விட வேண்டியது. இந்த ஊறுகாய், சிறு கசப்பாக, நல்ல வாசனையாக, வெடுக்கென்று இருக்கும். கைபடாமல், ஒரு ஜாடியிலோ, அல்லது பாட்டிலிலோ போட்டு, அவ்வப்போது கிளறிக் கொடுத்து, உபயோகித்தால் மூன்று மாதம் வரையிலாவது கெட்டுப் போகாமல், ருசியுடன் இருக்கும். இதற்கு மெந்தயப் பொடி போடுவதில்லை. இரண்டு துண்டு கறி மஞ்சளை மட்டும் வறுத்துப், பொடித்துச் சலித்துப் போட வேண்டும். மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.

உபத்திரவிக்கும் மூலச்சூடு

அற்புத நிவாரணி

ஜாம்-பெக் அற்புத நிவாத்தி அளிக்கிறது

மூலச்சூடு-மிகக் கொடிய வியாதி; குடல்கோளாறுல் ஏற்படுகிறது. இதன வலியினின்றும் விடுபடுங்கள். தவறாமல் ஜாம்பெக் மெழுகு தடவுங்கள். ஆச்சரியமான நிவர்த்தி ஏற்படும். தமைச் சுல, சொறி, சிரங்கு, புண், கத்தி வெட்டுகள், ரணம் முதலியவற்றிற்கு ஜாம்-பெக் இணையற்றது. பெட்டி 1 க்கு ரூ. 1 அல்லது ரூ. 2—4 வீதம் எல்லா மருந்து விய பாரிகளிடமும் கிடைக்கும். ஏஜண்டுகள்: மெஸர்ஸ். தாதா கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

மிருகக் கொழுப்பற்றது.

ஜாம்பெக்
Zam-Buk

செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக் கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 7-அணா

MAHAMBS TRADING COMPANY OF ASIA, Indian Depot, P O Box 2186 Bombay

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி. 286, சைனா பஜார் ரோட், மதராஸ்.:

இதோ!

நீங்கள் ஜலதோஷத்தை விரைவில் ஒழிக்கலாம்.



ஜலதோஷத்தை அப்படியே விட்டு வைப்பது ஆபத்தானது. இரவிலும் காலையிலும் மிஸ்டலை உபயோகியுங்கள். இலவச டிராப்பருடன் கூடிய ஒரு புட்டி மிஸ்டல் வாங்கிக்கொள்க.

பிரயாணத்தின்போதும், உங்கள் மூக்கும், தொண்டையும் தூசி நிறைந்து எரிச்சலெடுக்கையிலும் மிஸ்டல் மேலான நிவர்த்தியளிக்கும்.

ஜலதோஷத்தை மிஸ்டல் அடியோடு அகற்றும்

சென்றமாதம் 15-ந் தேதி இந்தியா கவர்ன்மெண்டின் தூதினரான ஸ்ரீமான் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் பினங்கு நாட்டுக் கோட்டை வர்த்தக சங்கத்திற்கு விஜயம் செய்தபோது எடுத்த படம்.

இந்திய வர்த்தமானம்

ஸ்திரீகள் கோரிக்கைகள்

ஆமதாபாத்தில் நடைபெற்ற ஸ்திரீகள் மகாநாட்டில் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. முக்கிய கல்வி ஸ்தாபனங்கள் எல்லாவற்றிலும் ஸ்திரீகளுக்கு நல்ல ஹாஸ்டல் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துவதாயும், பள்ளிக் கூடங்களில் கட்டாய வைத்தியப் பரிசோதனைக்கும் சிகித்சைக்கும் சட்ட மேற்படுத்த வேண்டுமென்று கோருவதாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மற்றும் சில வருமாறு:— வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் ஒரு பெண்கள் கலாசாலை ஏற்படுத்த வேண்டுமென்று ஸ்திரீகள் கோரியிருப்பதை ஆதரித்து, கூடிய சீக்கிரம் அதை ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அதிகாரிகளை வற்புறுத்துகிறது. வேலையில்லாக் கஷ்ட நிவாரணத்தில் கவர்ன்மெண்டார் கவனஞ் செலுத்த வேண்டும், தொழிலாளர்களின் நன்மைக்காக சமூக இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களைப் புகுத்த வேண்டும். தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

* * * *

இந்தியாவைப் பற்றி அமெரிக்கர் அபிப்பிராயம்

தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டதன் காரணமாக அமெரிக்காவில் சென்ற 20 வருஷங்களாக வசித்துவந்த சைலேந்திரநாத்கோஷ் தமது மனைவி மக்களுடன் கல்கத்தாவுக்கு வந்திருக்கிறார். மிஸஸ் கோஷ் பிறப்பால் யூதர். அவர் இந்தியரையும் இந்தியாவையும்பற்றி அமெரிக்கர்கள் பின் கண்ட அபிப்பிராயம் கொண்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்:— அமெரிக்கரில் பெரும்பாலோர் இந்தியர்கள் சாதுக்களாகவோ அல்லது பக்கிரிகளாகவோ அன்றி ஆத்மார்த்திகத்துறையில் ஈடுபட்டவர்களாகவோ இருப்பதாக அபிப்பிராயப்படுகின்றனர். இந்தியா புலிகளும், நாகப்பாம்புகளும் நிறைந்த காடாக இருப்பதாக அவர்கள் கருதுகின்றனர். ஏனெனில் அமெரிக்காவில் இந்திய சாதுக்களையும் பக்கிரிகளையுமே தான் ஜனங்கள் அடிக்கடி பார்த்திருக்கின்றனர்; அவர்கள் வாழும் முறைகளும் அவர்களது வருமான முறைகளும் சிற்சில சமயங்களில் ஆட்சேபகரமாக இருக்கின்றன. இதனால் அமெரிக்கர்கள் இந்தியரைப்பற்றித் தவறான எண்ணங் கொள்ள இடமேற்படுகிறது. படித்த இந்தியர்கள் அமெரிக்காவுக்கு திட்டமான நோக்கத்துடன் வந்தால் அடிக்கடி அமெரிக்கருக்கு இந்தியரிடம் அதிக மதிப்பு ஏற்படும்.

* * * *

திருவாங்கூர் குடிசைத் தொழில்கள்

நாகர் கோயிலில் ஜனங்கள் படித்துக் கொடுத்த ஒரு உபசாரப்பத்திரத்திற்கு திவான் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் பதிலளிக்கையில், திருவாங்கூரில் கருப்பு அபிவிருத்தி செய்வது சம்பந்தமான திட்டத்தைத் திருவாங்கூர் கவர்ன்மெண்டார் யோசித்து வருவதாயும், திருவாங்கூர் காடுகளைப் பரிபாலனம் செய்யவேண்டிய அவசியமென்றும், அவற்றில் விளையும் மரங்கள் பணவருமானத்திற்கான வழிகளில் ஒரு முக்கிய வழியாக இருக்குமென்றும், எதிர்கால அபிவிருத்திக்கும் காடுகள் பரிபாலனம் வெகு சாதகமாயிருக்குமென்றும், மலிவான ஹைட்ரோ மின்சார சக்தியைக் கொண்டு டென்மார்க், ஸ்விட்ஜலாந்து, ஹாலந்து, ஸ்வீடன் முதலிய தேசங்களைப்போல் குடிசைத் தொழில் அபிவிருத்தியைத் திருவாங்கூரில் செய்யவேண்டுமென்று தாம் எதிர்பார்ப்பதாயும் கூறினார்.

* * * *

முஸ்லீம்—சீக்கியர்கள் சண்டை

லாகூர் ஜில்லாவில் வாண்டர் என்னும் கிராமத்தில் முஸ்லீம்களுக்கும் சீக்கியர்களுக்கும் சண்டை யேற்பட்டதால் ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார். பலர் காயமடைந்திருக்கின்றனர். வாண்டர் கிராமத்தைச் சேர்ந்த சீக்கியர் ஒருவர் பக்கத்து கிராமத்திலுள்ள ஒரு முஸ்லீம் பெண்ணைக் கடத்திச் சென்றதே சண்டைக்குக் காரணமென்று சொல்லப்படுகிறது. கடத்திச் செல்லப்பட்ட பெண்ணை மீட்டுக்கொண்டுவர பெண்ணின் தகப்பனும் பந்துக்களும் சென்றபோது சீக்கியர் அவர்களைத் தாக்கியதாகச் சொல்லப்படுகிறது.

* * * *

புது வருஷக் கொண்டாட்ட நர்த்தனத்தின்போது கல்லெறி

ரங்கூன் டெல்ஹவுஸி தெரு 'மாக்ஸிம்' தியேட்டரில் புது வருஷப் பிறப்பை முன்னிட்டு நர்த்தனக் கச்சேரி நடந்து கொண்டிருக்கையில் கட்டடத்தின் மீது சில கற்கள் எறியப்பட்டதாம். இதுபற்றி இரவு 11-மணிக்குப் போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் செய்யப்பட்டது. சப் இன்ஸ்பெக்டர் அருகிலிருந்த ஹைக்கோர்ட் காம்பவுண்டுக்குள் கல்லெறிகிறவர்கள் இருக்கிறார்களா என்று பார்க்க அங்கு போனாராம். ஹைக்கோர்ட்டிலிருந்த தர்வான்கள் (வாயிற் காக்கும் சேவகர்கள்) சப் இன்ஸ்பெக்டரைத் தாக்கியதாகச் சொல்லப்படுகிறது. இதன்மேல் சப் இன்ஸ்பெக்டர் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தாராம். இதனால் 3 சேவகர்கள் காயமடைந்தனர். ஒரு சேவகன் ரணச்சிகித்சைக்குப் பின்பு இறந்து போனான். மற்றுமிருவர்களுக்கான காயம் அதிகமாக இல்லை. குண்டுக் காயமடைந்தவர் 3-பேரும் ஹைக்கோர்ட் ஜட்ஜுகளிடம் வேலைபார்க்கும் இந்தியச் சேவகர்கள். ஒரு சேவகனுக்கு புஜத்திலும், மற்றொருவனுக்கு முழங்காலிலும் காயமேற்பட்டிருக்கிறது. சப் இன்ஸ்பெக்டருக்கு 24 இடங்களில் காயமேற்பட்டிருக்கிறது. சப் இன்ஸ்பெக்டர் தம்மைத் தாக்கியவர்களைத் தற்காப்பிற்காகச் சுட்டாராம்.

* * * *

மிருக சிகித்சையின் முக்கியம்

பம்பாய் மிருக வைத்திய கலாசாலையின் பொன்விழா சமீபத்தில் நடைபெற்றது. அதில் பம்பாய் கவர்னர் பேசுகையில் பின் வருமாறு குறிப்பிட்டார்:—சென்ற சில வருஷங்களிலேற்பட்ட செல்வக் கஷ்டம் காரணமாக வருமானம் குறைந்ததில் இந்த மிருக வைத்திய இலாகா ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறது. இதனால் மிருக வைத்தியத்தின் முக்கியம் உணரப்படவில்லை என்று சொல்ல முடியாது. மிருக வைத்தியவிஷயம் எவ்வளவு முக்கியமென்பதை கால் நடைகள் அபிவிருத்தி பற்றி தமது வேண்டுகோள்களில் ராஜப்பிரதிநிதி நன்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்; இதன் பயனாக இவ்விலாகாவுக்கு எதிர்காலத்தில் அதிகப் பணம் செலவழிக்கப்படுமென நம்புகிறேன்.

* * * *

காஷ்மீரில் ஆலயப் பிரவேச உரிமை

டிரைப்யூன் பத்திரிகைக்கு அதன் ஸ்ரீநகர் நிருபர் டிசம்பர் 27-ந் தேதியிட்டு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:—

சென்ற வாரத்தில் தாசில் ரகுவீரசிங் புரத்தில் ஹரிஜனங்களது மகாநாடொன்று நடைபெற்றது. அதில் முஸ்லிம் பள்ளிக்கூடங்களுக்கு இருப்பதுபோலவே ஹரிஜனப் பிள்ளைகளின் கல்வியைக் கவனிப்பதற்காகத் தனியாக ஹரிஜனப் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் ஒருவரை நியமிக்க வேண்டுமெனவும் ஹரிஜனங்கள் எளியவர்களாக இருப்பதால் 500 ரூபாய் சொத்துடையவர்களுக்குத்தான் வாக்குரிமை உண்டு என்ற நிபந்தனை காரணமாக அவர்களில் 100-க்கு 5 பேருக்குக் கூட வாக்குரிமை கிடைக்கவில்லை என்றும் இதனால் சொத்துரிமை யோக்யதையைக் குறைத்தமைக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஹரிஜனங்களுக்கு சமஸ்தானக் கோயில்களில் பிரவேசிக்க அனுமதி கொடுத்ததற்காகத் திருவாங்கூர் மகாராஜா, காஷ்மீர மகாராஜா, சுகேத் ராஜா சாகிப் இவர்களுக்கு நன்றி செலுத்துவதாக மகாநாடு தீர்மானித்தது. இதர சமஸ்தானாதிபதிகளையும் இம்மாதிரி செய்யும்படி இம் மகாநாடு கேட்டுக்கொண்டது.



எல். வி. ஸ்மித் கொரோனு கம்பனியின் உபதலைவரான மிஸ்டர் ஹோக்லண்ட் அமெரிக்காவிலிருந்து சென்னைக்கு விஜயம் செய்திருக்கிறார். அவருக்கு ஒரு உபசரிப்பு நடத்தப்பட்டது.

மற்ற பக்கங்களில்

அடிமையை மீட்ட அடிமை 2
சாதா (தொடர்கதை) 4
தென்னிந்தியப் பிரமுகர்கள் 7
விநோதக்கொத்து 9
ஸங்கீதப்பகுதி 10
செய்யாத பிரசங்கம் 13
கண்ணோட்டம்-பிரமுகர்கள் 14
நவநாகரீகம் 15
இந்தியவர்த்தமானம் 17
தென்னிந்தியாவில் வழங்கிய தங்க நாணயங்கள் 24
நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணுடி 25
காணுமற் போன வைர அட்டிகை 26
மஹாபாரதம் 31
ரேகை சாஸ்திரம் 35
ஒட்டுக் கேட்டவன் பட்ட பாடு (சிறுவர் பகுதி) 37

பிரபஞ்ச வர்த்தமானம்

—[o]—

ஸ்பெயின் கலகநிலைமை

கலகக்காரர்களுக்கும் சர்க்காருக்கும் இப்பொழுது அந்நியர் உதவி அதிகமாகவிருந்து வருகிறது ஜர்மானியர் கலகக்காரர்களுக்குத் துருப்புகள் அனுப்பிக்கொண்டே வருகின்றனர். ஜெனரல் ப்ராங்கோ தமக்கு 70,000 துருப்புகள் தேவையென ஹெர் ஹிட்லரிடம் கோரியிருக்கிறார். ஜெர்மனியிலிருந்து துருப்புகள் அனுப்பப்படுமாயின் ரஷ்யா அதைப் பார்த்துக்கொண்டு மௌனமாயிராதென்று கூறப்படுகிறது. பிரான்ஸும் சர்க்காருக்கு உதவிபுரியும் என்று நம்பப்படுகிறது. ஸ்பானிய சர்க்காருக்கு விமானங்கள் அனுப்ப இப்பொழுது முதன் முதலாக ஒரு அமெரிக்கக் கம்பெனிக்கு லைசென்ஸ் கிடைத்திருக்கிறது. அக் கம்பெனி ஐந்து லக்ஷம் பவுன் பெறுமானமுள்ள விமானங்களை ஸ்பானிய சர்க்காருக்கு அனுப்புமெனத் தெரிகிறது.

ஸ்பானியக் கடற்கரையிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் ஒரு பிரஞ்சுக் கப்பல் சென்றுகொண்டிருக்கையில் கலகக் கோஷ்டியைச் சேர்ந்த கப்பல்கள் அதைத் தாக்கி வெடி குண்டுகளைப் பிரயோகித்ததாகக் கூறப்படுகிறது. இதே மாதிரி 'பிளாக்ஹில்' என்ற பிரிட்டிஷ் கப்பலைத் தாக்கிச் சென்றதாயும் ஆனால் அக்கப்பல் தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டதாயும் கூறப்படுகிறது. இது சம்பந்தமாக பிரிட்டிஷார் ஆத்திரமடைந்திருக்கின்றனர். ஸ்பானிய சர்க்கார் விமானங்கள் கலகக்காரர் கப்பல்களிருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க முயன்று வருகின்றன.

ஸ்பெயினுக்கு அந்நிய தேசங்களிலிருந்து துருப்புகள் செல்வதைத் தடுப்பதுபற்றி ஆங்கிலோ-பிரெஞ்சு சர்க்கார் விடுத்த யோசனையை ரஷ்ய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது.

* * * *

பிரிட்டன் இத்தாலி ஒப்பந்தம்

மத்தியதரைக் கடல் சம்பந்தமாக பிரிட்டனும் இத்தாலியும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றன. இந்த ஒப்பந்தத்தின் முழு விவரம் வெளியாகவில்லை ஆயினும் இது முக்கியமாக மனமாறுதலையே குறிப்பதாகுமென்றும் எதியோபிய யுத்தத்திற்குப்பின் பிரிட்டன் இத்தாலி இவைகளிடை இப்பொழுது மீண்டும் நல்லுறவு ஏற்பட்டு விட்டதாக அது நிரூபிக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. ஆனால், இத்தாலி எதியோபியாவைத் தனது ஆதிக்கத்துக்குட்படுத்தியதை பிரிட்டன் அங்கீகரிப்பதாகக் குறிப்பிடவில்லை. மத்தியதரைக் கடலிலுள்ள பிரிட்டிஷ், இத்தாலியப் படைகளைப்பற்றியோ, ஸ்பெயினைப்பற்றியோ அதில் பிரஸ்தாபிக்கப்படவில்லையெனத் தெரிகிறது. ஆனால் அங்கு தற்போதுள்ள நிலைமையில் மாறுதல் ஏற்படத்தக்க முறையில் இரு தரப்பினரும் நடந்து கொள்வதில்லையென அதில் உறுதி கூறப்பட்டிருக்கிறது

இவ்விதம் உறுதி கூறப்பட்டிருந்தும் ஒப்பந்தம் வந்த செய்தியுடன் ஸ்பெயினுக்கு இத்தாலியத் துருப்புகள் அனுப்பப்பட்டிருப்பதாக மற்றொரு செய்தியும் வந்திருக்கிறது. 5000 பேர்கள் காடிஸுக்கு அனுப்பப்பட்டதாயும், அத்துருப்புகள் உடனே ஸயிலேறி ஸெவிலுக்குச் சென்றதாயும் அச்செய்தி கூறுகிறது.

* * * *

மற்றொரு மன்னர் விவாகத் தகராறு

பெல்ஜிய மன்னரான லியபால்டு மீண்டும் விவாகம் செய்து கொள்வதுபற்றி அவருக்கும் அவரது சர்க்காருக்கும் தகராறு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவருக்கும் 22 வயதான அடிலெய்ட் சீமாட்டிக்கும் விவாகம் நடைபெறுமென சீக்கிரத்தில் ஒரு அறிக்கை வெளியாகுமென நம்பப்படுகிறது ஆனால் மன்னரின் தூண்டுதலின் பேரில் அரண்மனையைச் சேர்ந்தவர்கள் இவ்வதந்தியை மறுக்கிறார்கள். ஹாப்ஸ்பர்க் வம்சத்தைச்சேர்ந்த ஒரு மங்கையை மன்னர் மணந்தால் பெல்ஜியம் அதிக சக்திபெற்று விளங்குமென சர்க்கார் கருதுகின்றனர். ஆனால் மன்னரோ சமீபத்தில் ஒரு கோர விபத்தில் மாண்ட தமது முதல் மனைவியைப்பற்றி இன்னும் துக்கித்துக்கொண்டு மறு மணம் புரிய இஷ்டமில்லாதவராயிருக்கிறார். அவர் தமது சிம்மாசனத்தைத் துறந்து ஆறு வயதான தமது குமாரனுக்கு முடி சூட்டக்கூடுமெனவும் சொல்லப்படுகிறது

* * * *

நடிகர் தற்கொலைச் சங்கம்

நியூயார்க்கிலிருந்து பின்கண்ட செய்திகிடைத்திருக்கிறது:—

"சிக்கன அமுல் காரணமாகத் தங்கள் வேலையை இழக்கக்கூடுமென அஞ்சும் சில (நியூயார்க்) நடிகர்கள் ஒரு 'தற்கொலைச் சங்கம்'' ஸ்தாபித்திருக்கின்றனர். தங்களில முதலில் யார் வேலையை இழக்கிறாரோ, அவர் நியூயார்க்கிலுள்ள தலைவர் ரூஸ்வெல்டின் வாசஸ்தலத்திற்கு முன்னிருக்கும் மைதானத்தில் தற்கொலை செய்து கொள்வதென அதன் அங்கத்தினர்களனைவரும் பிரமாண மெடுத்துக் கொண்டிருக்கின்றனர். சிக்கன அமுலைக் கண்டிப்பதே இதன் நோக்கம்.

சமீபத்தில் எட்வர்டு அப்பட் (28 வயது) என்ற நடிகர் தூக்கிட்டுக்கொண்டு மாண்டார். இதுபற்றி விசாரித்த பொழுது அச்சங்கத்தைப் பற்றிய விவரங்கள் வெளியாயின. அந்த நடிகரும் "தற்கொலைச் சங்க"த்தில் ஒரு அங்கத்தினராயிருந்தவராம்.

* * * *

(23-ம் பக்கம் பார்க்க)



கடன் தொல்லையால் அவஸ்தைப்படும விவசாயிகளின் கஷ்டங்களைக் காட்டும் "சாங்காரி பாஷ்" என்ற ஷாலினி ஸினிடோன் கம்பெனியாரின் ஹிந்தி பேசும் படத்திலிருந்து ஒரு காட்சி.

கோல்டன் ஈகிள் மூவிடோன் கம்பெனியாரின் "வாங்கப்பட்ட மணப்பெண்!" அல்லது "பியா-கி-ஜோகன்" என்ற ஹிந்தி பேசும் படத்திலிருந்து ஒரு காட்சி.

படத்தில் காணப்படும் "மெஜஸ்டிக்" என்ற கப்பல் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் போய் வரும் பிரயாணிகள் கப்பல்களுள் மிகப் பெரிது. பிரிட்டிஷ் கப்பற்படையில் சேருபவர்களுக்குப் பயிற்சி யளிப்பதற்காக இப்பொழுது இந்தக் கப்பலில் சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

லண்டன்போலீஸாருக்குத் திருடர்களிடமிருந்து கத்தி, துப்பாக்கி முதலிய ஆயுதங்களைக் கவரும் விதம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. போலீஸில் சேர்ந்துள்ள ஒரு ஸ்திரீ இதைக் கற்றுக்கொள்ளும்போது எடுத்தபடம்.

வியன்னாவில் மாஜி அரசர் எட்வர்ட் வரவேற்கப்பட்



இத்தாலியின் படைப்பெருக்க இயக்கத்தை வீனர் முஸோலினி நன்கு கவனித்து வருகிறார். சமீபத்தில் தயாரிக்கப்பட்ட புதியதொரு வெடி குண்டுகள் வீசும் விமானத்தை அவர் உபயோகித்துப் பார்த்தபோது எடுத்த படம்.

...ட் வரவேற்கப்பட்ட காட்சி.



ஜப்பானில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஒரு விக்ரஹத்தின் பாதம். இந்த விக்ரஹமும் இது சம்பந்தமான விவரங்களையும் இவ்வாரம் அட்டையில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கும் படத்தின் அடியில் காணலாம்.

லண்டன் ஒலிம்பியாவில் சர்வதேச அழகிகள் ஊர்வலமொன்று நடைபெற்றது.

(இடது பக்கம்) ஒலிம்பியா பொருட் காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஒரு புதிய நாகரீகத் தலை அணி.

ஒலிம்பியா பொருட் காட்சியில் தலை மயிர் சுருட்டையை எடுக்க ஒரு புதிய மின்சார மெஷின் வைக்கப்பட்டிருந்தது. அது வேலை செய்வதை ஒரு சிவப்பு இந்திய ஸ்திரீயும் ஒரு அமெரிக்க ஸ்திரீயும் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

ஹைதாராபாத் சமஸ்தான உபாத்தியாயர்கள் மகாநாட்டை பீரார் அரசி (இடதுபக்க மிருந்து மூன்று [illegible] வது) திறந்து வைத்தார். மிஸ். வெப் உபசாரப்பத்திரமொன்றைப் படித்துக் கொண்டிருக்கிறார்.

பிரபஞ்சவர்த்தமானம்

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

எமனுலகு சென்று மீண்டான்

ஷாங்கையில் ஆத்மாசிங் என்ற ஒரு இந்தியப் போலீஸ் சேவகனுக்கு மாணதண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அவனை முனிஸிபல் சிறையில் தூக்கிலேற்றுகையில் திடீரெனத் தூக்குக்கயிறு அறுந்துவிடவே ஆத்மாசிங்பத்தடி உயரத்திலிருந்து கீழே விழுந்தான். அவனுக்குக் கழுத்தில்பலத்த காயமேற்பட்டது பெய்பிங்கிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர் ஆத்மாசிங்கின் தண்டனையை வஜா செய்வதெனத் தீர்மானித்துவிட்டார். ஆத்மாசிங், தனது மனைவியை இன்னொரு போலீஸ் சேவகன் அவமதித்ததற்காக அவனை ஒரு கோடரியால் கொன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தான்

ஒருவனைத் தூக்கிலேற்றுகையில் தூக்குக்கயிறு அறுந்துவிடுவதுபோன்ற தடைகள் ஏற்படுமாயின் அவன் மறுபடி தூக்கிலேற்றப்படுவதில்லையென பொதுவாக நம்பப்படுகிறது. இங்கிலாந்தின் சிறைச் சரித்திரத்திலிருந்து இதுபோன்ற சம்பவம் ஒரே ஒரு முறைதான் அந்நாட்டில் நிகழ்ந்திருப்பதாகத் தெரிகிறது. அப்பொழுது ஒருவன் தூக்கிலேற்றப்படுகையில் கயிறு அறுந்ததனாலோ தூக்கு இயந்திரத்திலிருந்த வேறு கோளாறு காரணமாகவோ. மரண தண்டனையை நிறைவேற்றக் கூடவில்லை. இதன்பேரில் பிரிட்டிஷ் சர்க்கார் அவனது மரணதண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தனர்.

* * * *

ஐரோப்பிய சமாதானத்திற்கு ரூஸ்வெல்ட் முயற்சி

உலக சமாதானத்தை முன்னிட்டு தலைவர் ரூஸ்வெல்ட் முன்னறிவிப்பின்றி திடீரென ஐரோப்பிய விவகாரங்களில் தலையிடுவாரென வாஷிங்டனில் ஜோஸ்யங் கூறப்படுகிறது.

ஆயுத உற்பத்தியை எல்லாத் தேசங்களும் நிறுத்தி வைக்க வேண்டுமென்பதே அவரது யோசனையாயிருக்குமெனச் சொல்லப்படுகிறது. சமீபத்தில் அவர் எல்லா தேச அரசாங்கங்களின் தலைவர்களுமடங்கிய ஒரு மகாநாட்டைக் கூட்டமுற்பட்டார். ஆனால் இம்முயற்சி முதலிலேயே முறிவுற்றது. இப்பொழுது அவர் வேறென்ன வழிகளைக் கையாளலாமென ஆலோசித்து வருகிறார்.

* * * *

ஆயுதப் பெருக்கு வேலை.

மிஸ்டர் பால்டுவின், கன்சர்வெடிவ் கட்சித் தலைவர் என்ற முறையில் பிரிம்ரோஸ் சங்கத்துக்கு புது வருஷச் செய்தியொன்று அனுப்பியிருக்கிறார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:—

“பிரிட்டன் பிறரால் தாக்கப்படாமல் பந்தோபஸ்தான நிலையிலிருக்கவும், சமாதானத்தை நிலை நிறுத்தும் விஷயத்தில் இந்நாட்டின் செல்வாக்குக்குப் பழுதேற்படாதிருக்கவும் பிரிட்டிஷ் சர்க்கார் அந்நிய விவகாரங்கள் சம்பந்தமாக தற்போதைய கொள்கையைத் தவிர வேறு கொள்கையெதையும் அனுஷ்டிப்பதற்கில்லை.

உலகில் தற்போதிருந்து வரும் நிலைமையில், ஐரோப்பாவில் யுத்த தளவாடங்கள் மேன்மேலும் பெருகி வரும் இச்சமயத்தில், பிரிட்டிஷ் சர்க்கார் ஆயுத அதிகரிப்பு வேலையை அலட்சியமசெய்வதற்கில்லை. சர்வதேச சங்க உடன் படிக்கைக்கு முரணுயுள்ள எந்த நோக்கத்திற்காகவும் பிரிட்டனின் ராணுவ பலம் உபயோகிக்கப்பட மாட்டாது. வலுச்சண்டை தொடங்கும் கருத்துபிரிட்டனுக் கிருப்பதாக எந்த அந்நிய நாடும் அஞ்ச வேண்டியதில்லை.”

* * * *

மூக்கை அறுக்கப் பேரழகியின் வேண்டுகோள்

பெல்கிரேடில் ஷாண்டர்விர்க் என்பவன் தனது மனைவியின் மூக்கை அறுத்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு ஆறு மாதச் சிறை வாஸ தண்டனை விதிக்கப்பட்டான். அம்மங்கை ஒரு பேரழகி. அவளது தோற்றம் மற்ற ஆடவர்களை வசீகரிப்பது கண்டு அவளது கணவன் பொறுமைகொண்டு மிக்க வேதனையுற்றான். கணவனின் வேதனையைக் காண மனைவிக்குச் சகிக்கவில்லை. தனது மூக்கை அறுத்து தன்னழகைக் குலைத்துவிடுமாறு அவள் தனது கணவனைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள் அவன் அப்படியே செய்தான். கோர்ட்டில் அப்பங்கை தனது வேண்டுகோளின் பேரிலேயே தனது மூக்கை அவன் அறுத்ததாகச் சொல்லியும் மேற்கண்டவாறு தண்டனை விதிக்கப்பட்டது.

* * * *

சீனவுக்கு ஜப்பானின் நஷ்ட ஈடு

சமீபத்தில் சீனவில் இரு முறை ஜப்பானியர் சீனரால் தாக்கப்பட்டனர். இதுபற்றி ஜப்பானிய அதிகாரிகள நாங்கிங் சர்க்காருடன் கலந்து பேசியதன் பேரில் அவர்களிடை ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வொப்பந்தத்தின்படி சீன சர்க்கார் ஜப்பானுக்கு நஷ்டஈடு கொடுக்கவும் குற்றவாளிகளைத் தண்டிக்கவும் பகிரங்கமாக ஜப்பானை மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

* * * *

“சவுக்காலடிக்கவேண்டும்”

கான்டர்பரி, யார்க் ஆர்ச் பிஷப்புகள் மாஜி மன்னரைக் கண்டித்துப் பேசியதைக் கண்டித்து மிஸ்டர் எச். ஜி. வெல்ஸ் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

நான் மிஸஸ் ஸிம்ஸனுக்காகப் பரிந்து பேச விரும்பவில்லை. ஆனால் ஒரு ஸ்திரீயைப் பற்றி திட்டமாக ஒன்றும் சொல்ல முடியாமல், மறைமுகமான முறையில், வெட்ககரமான புகார்கள் வெளியிடுவோரை குதிரைச் சவுக்கால் வீறுவதுதான் அவர்களுக்கு விதிக்கக்கூடிய சரியான தண்டனையாகும்.

இருமடங்கு அழகு...

—தலைமயிரை வாரி விட்டிருப்பதால்

வாசனைத் தேங்காய் எண்ணெய்

உங்கள் தலைமயிர் அழகுடனில்லையா? அப்படியாயின் வாசனைத் தேங்காய் எண்ணெயைக்கொண்டு நன்கு தேயுங்கள்; மயிர்க்கால்களில் இரத்த ஓட்டம் பெருகும். தலைமயிர் புதிய அழகுடன் விளங்கும்— ஆரோக்கியமாகவும் வளரும்.

கெட்டியான பிரிலியண்டைன்.

உங்கள் தலையும், மயிரும் மகவும் வறண்டு கிடந்தால் ‘டாம்கோ’ கெட்டி பிரிலியண்டைனை உபயோகியுங்கள்; மினுமினுப்பு ஏற்படும், தலை “பிசுக்”காகாது



டாம்கோ விற்பனை இலாகா
19, A வாணியர் தெரு
மதராஸ்.

இதர டாம்கோ கூந்தல் தயாரிப்புகள்: ஜெய் கூந்தல் தைலம், லோஷன் & பிரிலியண்டைன்; வாசனை மிகுந்த மருந்து பூர்வமான கூந்தல் டானிக், லேம்ஸ் & கிளிஸரின் முதலியன.

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்., பம்பாய்

(T H 409)

தென்னிந்தியாவில் வழங்கிய தங்க நாணயங்கள்

—:[0]:—

(ஒரத்தி ஒ. ப. தேசிகன்)

சரித்திர ஆராய்ச்சிக்கு எட்டிய பண்டைக்காலந்தொட்டே இந் நாட்டில் பொன், ஈயம், வெள்ளி, தாமிரம் ஆகிய உலோகங்களினலாய நாணய வகைகள் வழங்கிவந்திருக்கின்றன. பண்ட மாறுதல்களைச் செய்வதற்குச் சுலப சாதனமாக அமைந்த இந் நாணய வகைகளைக் கூர்ந்து நோக்குங்கால், தென்னிந்திய நாணயச் செலாவணித் திட்டத்தில் பிற இடங்களைக் காட்டிலும் குறிப்பிடத்தக்க அம்சங்கள் பல காணக்கிடக்கின்றன. ஆங்காங்கு பூமியிலிருந்து தோண்டியெடுக்கப்படும் புதையல்களிலிருந்து தென்னிந்திய நாணய வகைகள் வட இந்தியாவில் வழக்கிலிருந்த நாணயங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தனவென்று நாம் சந்தேகமின்றிக் கூறலாகும். ஏனெனில் உருவத்திலும், கனத்திலும், அளவிலும் மிக மிகச் சிறிய தங்க நாணயவாரிகள் தென்னிந்தியா முழுதும் வழங்கி வந்தன. பூர்வீக ஹிந்து அரசர்கள் முறையே $\frac{3}{4}$, $1\frac{1}{4}$, $2\frac{1}{2}$, முதல் 5 அல்லது 6 கிரெயின் எடையுள்ளதும், சிற்சில சமயங்களில் நாணயங்களின் இருபுறங்களிலும் மற்றும் சிலவற்றில் ஓர் புறத்தில் மாத்திரமும் ஏதேனுமோர் சித்திர உருவம் பொறிக்கப்பட்டதுமான தங்க நாணயங்களை ஏராளமாக வெளியிட்டுவந்ததாகத் தெரியவருகிறது. அவைகளில் பல மிகவும் சிறியதாக இருப்பதன் காரணமாக அவற்றைக் கையாடுவதுகூட சிரமமாகயிருக்கிறது.

இத் தேசத்தில் நாணயங்கள் வாழ்க்கையின் தினசரித் தேவைகளுக்கான பண்டங்களை வாங்குவதற்கும், அரசர்களால் விதிக்கப்படும் அபராதங்களைச் செலுத்தவும், வைதீகச் சடங்குகளில் தக்ஷிணையாக வழங்குவதற்குமே பெரும்பாலும் பயன்பட்டுவந்தன. ஆனால் 'மிளகாய்விரைக் காசு' என்ற பெயரால் இப்பொழுதும்கூட பாமர ஜனங்களால் அழைக்கப்படும் மேற்கூறிய மிக மிகச் சிறிய தங்க நாணயங்களையே தமக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்கு உபயோகிக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தமிருந்திருக்கும் பக்ஷத்தில் அவைகளைச் சேமித்து வைக்கவும், அல்லது தமக்குள்ளாகவே வழங்கவும் மக்கள் பெரிதும் அசௌகரியமடைந்திருப்பார்கள் என்பது திண்ணம். இத்தகைய சாமானியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக — அதாவது சகலவிதமான பண்ட மாறுதல்களுக்குப் பிரதியாக— அவைகள் நாணயங்களாக வழங்கியிருக்க முடியாது. அதற்கு மாறாக வெள்ளியினாலும் தாமிரத்தினாலுமாகிய உருவத்தின் பெரியதான நாணயங்களையே மக்கள் மிகவும் விருப்பத்துடன் உபயோகிக்க முற்பட்டிருப்பார்கள். அல்லது அரசர்கள் குடிகளுக்கு அபராதம் விதிக்குங்கால அவற்றைக் "கார்ஷபணம்" என்னும் தாமிர நாணயங்களாகவே செலுத்த வேண்டுமென்று மனு, யாக்ஞவல்கியாதி ஸ்மிருதிகளில் திட்டமாகக் கூறப்பட்டிருப்பதால் அதன் பொருட்டும் இந் நாணயங்கள் உபயோகிக்கப்பட்டு வந்ததாகவும் கூற முடியாது. ஆதலின் உருவத்திற் சிறியதான இப்பொற்காசுகளை முற்காலத்திய அரசாங்கங்கள் வெளியிட்டுவந்ததற்கு வேறு முக்கியமான காரணம் ஏதேனும் இருக்கவேண்டும்.

பண்டை ஆரியர்களின் குடும்ப வாழ்க்கையில் வைதீகக் கிரியைகளும் அதையொட்டிய சடங்குகளுமே முக்கியமான ஸ்தானத்தை வகித்து வந்தன. சிராத்தாதி நித்திய காமங்கள் முதல் யச்ஞ யாகாதி கிருத்தியங்கள் வரை எந்த வைதீக கர்மாவும் அதை நடத்தி வைப்பதற்கு இன்றியமையாதவர்களாகிய புரோகிதர்களுக்குத் தக்ஷிணை கொடாமல் நடைபெறுவதென்பது சாத்தியமேயன்று. அவ்வாறு புரோகிதர்களுக்கும் ஏனையோருக்கும் தக்ஷிணையாகக் கொடுக்கப்படும் அனைத்தும் ஹிரண்ய ரூபமாகவே— அதாவது தங்கமாகவே—கொடுக்கப்பட வேண்டுமென்ற அனுஷ்டானமே நாடு முழுதும் பரவியிருந்தது. வேதகாலத்தில் ஸ்வர்ணத்தினலாகிய தகடுகளையே தக்ஷிணையாகக் கொடுத்து வந்தனர். அப்பால், முத்திரை நாணயங்கள் ஏற்பட்டபின்னர் இத்தல வர்ணத் தகடுகள் அல்லது துண்டுகளுக்குப் பதிலாக நாணயங்களை வழங்கி வருவாராயினர். உலோகங்களில் தங்கத்தைத் தவிர மற்ற உலோகங்கள் தக்ஷிணையாக வழங்குவதற்கு அவ்வளவு சிரேஷ்டமானதல்லவென்ற நம்பகமே அக்காலத்தில் மிகுதியும் பரவியிருந்தது. கிருஷ்ண யஜுர்வேதத்தில் வெள்ளியைத் தக்ஷிணையாகக் கொடுப்பது அசுபமானதென்றும், அமங்களகரமானதென்றும் தெளி

(29-ம் பக்கம் பார்க்க)

சென்னை சங்கீதக் கழகத்தால் நடத்தப்பட்ட சங்கீதப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் பரிசுகளை வழங்கினர்.

உங்களுக்குத் தெரியுமா?

தற்கால நாகரீகத்தில் சிறுவர் முதல் வயது முதிர்ந்தவர்கள் வரையில். பல்வலி இல்லாதவர்கள் சிலரே. சரியான ஆகாரமில்லாததாலும் வாய் அசுத்தத்தினாலும் அநேக ஆயிரக்கணக்காக கிருமிகள் உண்டாகி அதனால் வாய் நாற்றம், சீவருதல் (Pyorrhea) என்னும் கொடிய வியாதி, ரத்த கசிவு. சொத்தைப் பல் முதலிய பல வியாதிகள் உண்டாகி பல்வலி உடனே உண்டாகிறது. பல்லில் வலி வந்தால் அதைவிட பொறுக்க முடியாத வியாதி இல்லை என்று தோன்றி விடுகிறது. **டெண்டிடின்** உபயோகித்தால் மேற்சொல்லிய எக்காரணத்தினால் வலி இருந்தாலும் உடனே நின்றுவிடும். ஒவ்வொரு வீட்டிலும் **டெண்டிடின்** இருப்பது அவசியம்.

விலை ரூ. 1.
தபாற்செலவு வேறு.
எல்லா இடங்களிலும் கிடைக்கும்.
அல்லது நேரில்
லச்சி அண்டு கோ.,
62 ராயப்பேட்டை ஹைரோடு
மயிலாப்பூர், சென்னை.

நாட்டு நடப்பு - சித்திரக் கண்ணாடி

அபிஸீனியாவில் கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்வதற்காக லண்டனில் சாமான்கள் விற்பனை நடைபெற்றது. அபிஸீனிய மன்னரின் குமாரி விற்பனை நடத்துவதைக் காணலாம்.

சென்னை சர்வகலாசாலையில் புத்தகசாலை சம்பந்தமான விடுமுறை உபந்நியாசங்கள் நடைபெற்றபோது சென்னைக்கு வந்திருந்த வெளியூர் உபாத்தியாயர்கள்.

ஜெனரல் கொயரிங் ஜெர்மனியின் விவசாய அபிவிருத்திக்கான நான்கு வருஷத்திட்டத்தைப் பற்றிப் பேசியபோது எடுத்தபடம்.



பம்பாய் மிருக வைத்தியக் கலாசாலையின் பொன் விழாக் கொண்டாட்டம் பம்பாய் கவர்னர் தலைமையில் நடைபெற்றது.

சென்னை லாங்மன்ஸ் க்ரீன் கம்பெனியில் பல வருஷங்களாக மானேஜராகவிருந்த ஸ்ரீமான் பிள்யூ. துரைசாமி அய்யங்கார் உத்தியோகத்தி விருந்து விலகிக் கொண்டபோது அவருக்கு ஒரு உபசரிப்பு நடத்தப்பட்டது.

காணமற்போன வைர அட்டிகை

—— :[o]: ——

(சக்ரவர்த்தி)

"பர்ழாகப் போனவனுக்கு
ன்றைக்குத்தான் எல்லாம்
ரவேண்டுமா! எல்லாம் என்
லைவிதி. காலையில்தான் ஒரு
றஞ் சோறு தின்றேனே! அத
துள் காய்ச்சல்வந்துவிட்ட
ா? அப்படித் தின்றால் எல்
ாந்தான் வரும். நெய்யாக
வறு, பாலாக வேறு, கண்டு
வறு, காணாமல் வேறு கொட்
க்கொண்டால் அது வயிறு
ண்ணுஞ்சாலா! கடவுள் தான்
ப்புவாரா! ஒரு சமயல்காரன்
ல்லாவிட்டால் மாதம் இரு
று ரூபாய்க்குமேல் லாபம்.
ஷ்டமானாலும் பாதகமில்லை
ன்று பார்த்தால் இரண்டு
ளைக்கு ஒருதரம் காய்ச்சல்
ந்துவிடுகிறது. சுகப்படவும்
காடுத்து வைத்திருக்கவேண்
ம். காலையிலேயே சொல்லித்
லைத்திருந்தால் வேறு ஏற்
டு செய்திருக்கலாம். மட்
ன் இப்பொழுதுதான்
சால்லி அனுப்பினான். இப்
ாழுது இரண்டுங் கெட்டா
ய்விட்டிருக்கிறது. இனிமேல்
ன் பொங்கித் துலைக்கவேண்
ம். லேடி சுந்தரேசன் வீட்
் தோட்டக் கச்சேரிக்கு
து மணிக்கெல்லாம் போக
வண்டும். நான் எப்பொழுது
மயல் செய்வது பிறகு எப்
ாழுது போவது. சனியன்
ல்லை என்றிருந்தால் அது
நவிதப். இப்படி கழுத்தை
றுக்கிறேனே" என்று
ாலீஸ் டிப்டி கமிஷனர்
மிநாதனின் மனைவி காமாக்ஷி
மாள் வெகு கோபத்துடன்
சால்லிவிட்டு குக்கரை கரி
டுப்பின் மேல் ஏற்றினாள்.

சமயலறையில் யாருமில்லாத
ல் காமாக்ஷியம்மாள் கடவு
ந்தான் முறையிட்டுக்
கொண்டிருக்க வேண்டும். கடவுளாலும் காமாக்ஷி அம்மாளின் குறையைத் தீர்க்க முடியாமல் போயிற்று என்றால் பாவம் காமாக்ஷி அம்மாள் தான் என்ன செய்வாள்! அவளே பொங்கித் துலைக்க வேண்டும். அவளும் அதையே செய்ய ஆரம்பித்தாள்.

குக்கரில் இருப்பது பதமாக வேக இன்னும் ஒரு மணி நேரமாவதாகும். அதற்குள் சிங்காரித்துக் கொள்ளலாமென்று நினைத்து சமயலறைக்கதவைப் பூட்டினாள். காமாக்ஷி அம்மாள் எப்பொழுதும் வெகு ஜாக்கிரதையாக நடப்பவள். வீட்டிலுள்ள ஒவ்வொரு அறைக்கும் ஒவ்வொரு பூட்டு. அறைகளை எப்பொழுதும் பூட்டியே வைப்பாள். வேலையி க்கும் சமயம் மாத்திரம் திறப்பாள். மறுபடியும் உடனே பூட்டிவிடுவாள். ஆகையால் தன் அறைக்குப் போகும் முன்பு சமயலறையைப் பூட்டிக்கொண்டு தான் போனாள்.

தன் அறைக்குப் போனதும் இளம் பெண்ணைப்போல வெகு அக்கரையுடன் சிங்காரித்துக் கொண்டாள். சிங்காரிக்க சரியாக முக்கால் மணி நேரம் பிடித்தது இன்றைக்கே அவள் வாழ்நாளில் வெகு சீக்கிரமாக அலங்கரித்துக்கொண்ட நாள். இந்நாளை அவள் ஆறு வருஷம் மறக்கவில்லை. அன்று வேறு ஒரு விசேஷம். அதாவது ஆறு ஆயிரம் ரூபாய்க்குமேல் செலவு செய்து புதிதாகக் கட்டின வைர அட்டிகையை முதல் முதல் தரித்துக்கொண்டு தோட்டக்கச்சேரிக்குப் போக வேண்டுமென்பது. அட்டிகையைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு நிலக் கண்ணாடியின் முன் நின்றுகொண்டு தேகத்தை அனேக முறை இப்படியும் அப்படியுமாக திருப்பி திருப்பிப் பார்த்துவிட்டு தனக்குள் மிகவும் சந்தோஷப்பட்டாள்.

தன் அறையின் கதவைப் பூட்டிக்கொண்டு சமயலறைக்குப் போனாள். குக்கரை அடுப்பிலிருந்து இறக்கி பாத்திரங்களை வெவ்வேறாக எடுத்து எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்தாள். எல்லாம் திருப்திகாமாகவே இருந்தது. மணியும் நாலடித்தது. புறப்படவேண்டுமென்று எண்ணினாள். குக்கர் பாத்திரங்களை ஜோடித்து ஒரு பக்கம் வைக்கக் கீழே குனிந்தாள். திருகு சரியாகப் போடாததால் வைர அட்டிகை கழுத்திலிருந்து சாம்பார் பாத்திரத்தில் விழுந்துவிட்டது. கொதிக்கும சாம்பார் நாலாபக்கமும் தெறித்தது காமாக்ஷி அம்மாள் மேலும் தெறித்தது. அவளை அது கொஞ்ச நேரம் குதிக்கச் செய்தது. அதற்காக உலகிலுள்ளவரை எல்லாம் ஒரு தரம் நிந்தித்துவிட்டு கரண்டிக்காம்பால் அட்டிகையை எடுத்து ஒரு வெள்ளித்தாம்பாளத்தில் வைத்தாள். அதை அலம்புவதற்காக தாம்பாளத்துடன் அட்டிகையைக் குழாயின் அடியில் வைத்துக் குழாயைத் திறந்தாள். ஜலம் வரவில்லை. குழாயைச் சபித்தாள்.

சமயலறைக்கதவைப் பூட்டிக்கொண்டு வென்னீர் அறைக்குப்போய் ஒரு பாத்திரத்தில் ஜலம் எடுத்துக்கொண்டு மறுபடியும் சமயலறைக்கு வந்து கதவைத் திறந்துகொண்டு குழாயிடம் போய் அட்டிகையை அலம்பப்போனாள். திடுக்கிட்டாள். நாலாபக்கமும் பார்த்தாள். அட்டிகை தட்டிலிருக்கவில்லை. அந்த அறை முழுவதும் தேடினாள், எங்கும் காணோம். தாம்பாளத்தைக் கூர்ந்து கவனித்தாள். அட்டிகையைத் தட்டிலிருந்து இழுத்த மாதிரி சாம்பாரின் கோடுகள் தென்பட்டன. வேறு ஒருவித அடையாளமும் காணோம். மறுபடியும் சமயலறைக் கதவைப் பூட்டிக்கொண்டு டெலிபோனில் தன் கணவனுக்கு நடந்த சமாசாரத்தைச் சொன்னாள். சாமிநாதன் டிவிஷன் இன்ஸ்பெக்டருக்கு டெலிபோன் மூலமாக சில வார்த்தைகள் பேசிவிட்டு மோட்டாரில் தன் பங்களா வந்து சேர்ந்தார். இன்ஸ்பெக்டர் தங்கவேலுவும் அதே சமயம் வந்தார். அவருடன் இரண்டு சேவகர்களும் ஹெட் கான்ஸ்டேபில் சோமசுந்தரமும் வந்தார்கள். இவர்களை எல்லாம் கண்டதும் தெருவில் போகும் ஜனங்களும் வீட்டு எதிரில் நின்றுவிட்டார்கள். படிப்படியாக வீட்டின் எதிரில் ஒரு பெரியகூட்டமும் கூடிவிட்டது வைர அட்டிகை காணாமல் போனது ஒரு ஆச்சர்யம். அதுவும் டிப்டி கமிஷனர் வீட்டில் அதிக விநோதமாகப் போனது அதிலும் ஆச்சர்யம். ஊரெல்லாம் இதே பேச்சு. காமாக்ஷி அம்மாள் தன் கணவனிடமும் தங்கவேலுவிடமும் நடந்த சங்கதியைச் சொல்லிவிட்டு டெலிபோனிடம் போய் உட்கார்ந்துகொண்டு அழத்

தொடங்கினுள். திருடினவன் என்னமோ அகப்படவில்லை.

தங்கவேலு சமயலறையை இருபது தரம் சோதனைசெய்து பார்த்தான். அவனுக்குக் கள்ள அறை அல்லது கதவு இருக்கும் என்னும் சந்தேகத்தாலன்று. அது சமயலறையைவிட்டுப் போக மார்க்க மில்லாததால் அங்கேயே எங்காவது இருக்குமோ என்னும் ஒரு ஆசையாலும்தான். பூனை வராமலிருக்க ஜன்னலுக்கு எல்லாம் கம்பி வலை அடித்திருந்ததால் ஜன்னலின் வழியாக கொம்பினுலோ கொக்கியாலோ எடுத்திருக்கமுடியாது. சமயலறைக்குமேல் தளம் காரை புகைக்கூண்டு. காமாக்ஷி அம்மாள் கதவைப் பூட்டிக் கொண்டு போனுள். பின் அட்டிகைக்கு கால் முளைத்து விட்டதா? கால் முளைத்திருந்தாலும் அறைக்குள்ளேயே தான் உலாவிக்கொண்டிருந்திருக்க வேண்டும். எப்படியும் வெளியில் போகமுடியாது. ஆனுல் தங்கவேலுக்கு மாத்திரம் ஒரு யோசனை தோன்றிற்று. அது ஒரே ஒரு வழி, சாக்கடை! என்று கூவினுர். சாக்கடை தான். சாக்கடையில் ஒன்றையும் காணேம்.

அது அல்ல அவர் சொன்னது. தற்செயலாக யாரோ காமாக்ஷி அம்மாள் வைர அட்டிகையுடன் தாம்பாளத்தைக் குழாயடியில் வைத்துப் போனதை ஜன்னலின் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்து இருக்க வேண்டும். தாம்பாளம் சாக்கடைக்கு நேராகத்தான் இருந்திருக்கும். ஆகையால் ஒரு கொக்கியால் அட்டிகையை சாக்கடை வழியாக இழுத்துக்கொண்டிருக்க வேண்டும், என்று சொல்லிவிட்டார். வேறு யோசனை யாருக்கும் தோனருததால் அதுதான் சரி என்று எல்லாரும் தீர்மானித்துவிட்டனர்.

அட்படி எடுத்தவர் யார்? வெளித்திருடனுக இருந்தால் அவ்வளவு விலையுயர்ந்த அட்டிகையை சமயலறை சாக்கடையில் எதிர்பார்த்திருக்க மாட்டான். ஆகையால் வீட்டைச் சேர்ந்தவர்களே எடுத்திருக்க வேண்டும். வீட்டைச் சேர்ந்தவர் யார்! வேலைக்காரர்கள்தான். பிடித்தது அவர்களுக்கு எல்லா சனியன். தங்கவேலும் தன்னுடைய முழு சாமர்த்தியத்தையும் உபயோகித்துப் பார்த்தார். சாமிநுதன் வீட்டு வேலைக்காரர்கள் கண்களிலிருந்து நீரும், தொண்டையிலிருந்து அகோரமான சத்தத்தையும் தவிர வேறு ஒன்றையும் தருவிக்க முடியவில்லை. வைர அட்டிகை என்னமோ கிடைக்கவில்லை. காமாக்ஷி அம்மாள் ஆருடம் கேட்டுப்பார்த்தாள். அகப்படுவது வெகு கஷ்டம் என்று சொல்லிவிட்டார்கள். ஆகையால் எல்லாக் கடவுளுக்கும் தைரியமாகவே பிரார்த்தனைகள்செய்துகொண்டாள்.

* * * *

ஆறுமாதம் கழிந்தது. சாமிநாதனின் ஒரே மகன் கிருஷ்ணசாமி சீமையில் பாரிஸ்டர் பரீக்ஷையில் தேறி ஊருக்குத் திரும்பி வந்தான். வந்ததும் வராததுமாக காமாக்ஷி அம்மாள் வைர அட்டிகையின் வரலாற்றை விஸ்தாரமாகச்சொன்னுள். அது வைத்திருந்த பெட்டியையும் காட்டினுள். பதக்கமும் சரியாக உள்ளங்கையளவு இருக்கும் என்று சொன்னுள். அது சொல்லாமலே நகைப் பெட்டியிலுள்ள அடையாளத்தால் கிருஷ்ணசாமி இரண்டு ரூபாய் அகல மிருக்கலாமென்று தீர்மானித்தாள் மகனை சமயலறைக்கு அழைத்துக் கொண்டு போய் குழாயின் அடியில்தான் வைத்த இடத்தையும் அது சாக்கடைக்கு நேராக இருப்பதையும் காட்டினுள். ஒரு முறை சுற்றிப்பார்த்தான். கிருஷ்ணசாமி "கடைசியாக வீட்டுக்காரன் பங்களாவை ரிப்பேர் செய்ய உத்தேசித்து விட்டானே" என்று தாயாரைக் கேட்டான். "முண்டம் அவன் என் செய்கிருன். நம்ம ஹெட்கான்ஸ்டேபில் சோமசுந்தரம வீடு இடிந்து போய் விடும்போலிருக்கு என்று தானுகவே வந்து நேற்று முழுவதும் வீடெல்லாம் ரிப்பேர் செய்தான் இந்த அம்பியின் கீழ் ஒரு பெரிய எலி வளை இருந்தது. அம்பியையும் தோண்டி எடுத்து ஜல்லி, ஸிமெண்டு எல்லாம் போட்டு சரியாக வைத்துக் கொடுத்தான். நம்மிடம் அவனுக்கு இருக்கும் அக்கரை வேறு யாருக்கு வரும்" என்று காமாக்ஷி ஒரு பிரசங்கம் செய்தாள்.

வைர அட்டிகை போனதற்காக சிறிது நேரம் கிருஷ்ணசாமி வருத்தப்பட்டான். பிறகு மனதைக் கொஞ்சம் தைரியப்படுத்திக்கொண்டு தாயாருக்கு ஆறுதல்கூறி தகப்பனுரைப்பார்த்து வருவதாக மாடிக்குப்போனுன். அங்கு தகப்பனுரும் தங்கவேலுவும் போலீஸ் விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"என்ன! வைர அட்டிகையின் உளவு ஒன்றும் அகப்படவில்லையா? என்று கிருஷ்ணசாமி கேட்டான். அது தான் மிகவும் வருத்தமாக இருக்கிறது. இன்னும் ஒன்றும் அகப்படவில்லை" என்ருர் தங்கவேலு. "இனி அகப்பட்ட மாதிரிதான்" என்ருன் கிருஷ்ணசாமி.

* * * *

கிருஷ்ணசாமியும் தங்கவேலுவும் சோமசுந்தரத்தைத் தேடிச் சென்றனர். அவன் போலீஸ் லயனில் இருந்தான். இவர்கள் ஐந்து நிமிஷத்திற்குள் அவன் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார்கள். அவன் அப்பொழுது வண்டியில் சாமான்களை எல்லாம் வைத்துக்கொண்டுஊருக்குப் புறப்பட சித்தமாயிருந்தான்.

இவர்களைக் கண்டதும் இருவருக்கும் நமஸ்காரம் செய்தான்! தான் ரஜா பெற்றுக் கொண்டு ஊருக்குப் புறப்படுவதாகத் தெரிவித்தான்.

கிருஷ்ணசாமி என்னமோ பேசிக்கொண்டே சோமசுந்தரத்தை ஒருபுறமாக அழைத்துச் சென்று மெல்லிய குரலில் "சோமசுந்தரம், நீ போலீஸ் இலாகாவில் வேலை செய்து பென்ஷன் வாங்கும் காலம் சமீபித்துவிட்டது. இதுவரையில் உன் பேரில் ஒரு புகாரும் இல்லாமல் வேலை செய்துவந்தாய். அது எனக்கு ரொம்ப சந்தோஷம். நீயும் மனிதன் தான். எல்லாரும் தப்பு செய்வது சகஜம். தப்பு செய்தால் அதைத் திருத்திக் கொள்ள வேண்டும். ஆகையால் நீ ஒரு

உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்.

மூன்றும் ... நிறைந்து ...
மாதிரிப்பிரதி
இரண்டு
'கலியுகம்'
ஆபீஸ்
சென்னை.

தையும் சொல்லாமல் உடனே அந்த வைர அட்டிகையைக்கொடுத்துவிடு உன் பேரில்கேஸ் செய்வதில்லை. அதற்கு நான் உத்திரவாதம். நீயாகக் கொடுக்காவிட்டால் உன் சாமான்களை எல்லாம் சோதனை போடவேண்டிய அவசியமேற்படும். அது போலீஸாரின் வேலை. கேஸ் ஒருதரம் போலீஸுக்குக் கொடுத்துவிட்டால் உன்னைக் காப்பாற்றும் சக்தி என் கையை விட்டு நழுவிவிடும். உனக்கு ஐந்து நிமிஷம் கொடுக்கிறேன். அதற்குள் யோசனை செய்து பதில் சொல்" என்றான்.

"நீங்கள் என்மேல் சந்தேகப்படுவது எனக்கு மிகவும் மனவருத்தத்தைக் கொடுக்கிறது. அந்த அட்டிகையை நான் இதுவரையில் பார்த்ததே"... என்று சோமசுந்தரம் முடிப்பதற்குள் கிருஷ்ணசாமி குறுக்கிட்டு 'ஆம்! மெய்தான். நேற்று வரையில் நீ பார்த்ததில்லை என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அது இப்பொழுது உன்னிடந்தான் இருக்கிறது. அது உனக்கு எப்படிக் கிடைத்தது என்பதை என்னைச் சொல்லச் சொன்னால் சொல்லுகிறேன்" என்று சொன்னான்.

சோமசுந்தரம் சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு பிறகு "நான் செய்தது தப்புதான். கடவுள்தான் என்னை மன்னிக்க வேண்டும். நீங்கள் எனக்கு என்ன சிக்ஷை கொடுத்தாலும் நான் அனுபவிக்க வேண்டியவன். இதோ சாவி. அட்டிகை என் கைப்பெட்டியிலிருக்கிறது" என்று சொல்லி முடித்தான்.

கிருஷ்ணசாமி பெட்டியைத் திறந்து பார்த்தான். அட்டிகை அதிலிருந்தது. தங்கவேலுவையும் சோமசுந்தரத்தையும் கூட அழைத்துக்கொண்டு தன் தகப்பனாரிடம் வந்து அப்பெட்டியைத் திறந்து அட்டிகையைக் காட்டினான். தகப்பனார் ஆச்சர்யத்துடன் "இது எங்கிருந்தது" என்று கேட்டார். "இதை எடுத்தவன் மேல் ஒன்றும் நடவடிக்கை எடுப்பதில்லை என்று வாக்குக் கொடுத்தால் நான் இதன் வரலாற்றைச் சொல்கிறேன்" என்றான் கிருஷ்ணசாமி. தகப்பனார் சம்மதிக்கவே, சோமசுந்தரத்தைப்பார்த்து முதலில் உன் கதையைச் சொல் என்றான்.

"ஐயா, வீட்டில் நகைபோனது முதல் அதுபோன வழியை நான் எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும் என்று தீர்மானித்து ராத்திரி பகல் யோசனை செய்தேன். என் புத்திக்கு ஒன்றும் புலப்படவில்லை. அது காணாமல் போன தினம் நானும் போயிருந்தேன். தங்கவேலு சமயலறை சாக்கடை வழியாகப் போயிருக்கலாம் என்று ஊகித்ததை நான் ஒப்பவில்லை எலி வராமலிருக்கும்படி சமயலறை சாக்கடைக்குப் பதிலாக இரும்புக் குழாயை வைத்திருந்தார்கள். அது ஒரு அங்குலக் குழாய், அதில் அட்டிகையின் பதக்கம் பிடித்திருக்காது. அதைக் கட்டும் பொழுது நான் பார்த்திருந்தேன். அம்மாள் வேறு எங்காவது வைத்து மறந்துவிட்டார்களோ என்றால் அம்மா எதையும் மறக்கமாட்டார்கள். எல்லாவிஷயத்திலும் முன் ஜாக்கிரதையாக இருப்பவர். ஆகையால் அட்டிகை போனது தெய்வச் செயலேயொழிய மனிதர் செய்கை அல்ல என்று எண்ணும்படியே இருந்தது. இருந்தாலும் அட்டிகையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்னும் எண்ணம் என் மனதை விட்டு நீங்கவில்லை. இப்படியிருக்க என் வீட்டில் போன திங்கட்கிழமை ராத்திரி என்னை மாக் காண்டி காணாமல் போயிற்று. என் சம்சாரம் வேடிக்கையாக அய்யா வீட்டில் வைர அட்டிகை போயிற்று. நம்ம வீட்டில் எண்ணெய்க்காண்டி போயிற்று என்றாள் எண்ணெய்க் காண்டியை எலி இழுத்துக்கொண்டுதான் போயிருக்கவேண்டும் என்று நினைத்தேன். அப்பொழுது அட்டிகை வெங்காய சாம்பாரில் விழுந்தது ஞாபகம் வந்தது. அம்மியின் பின்புறம் ஓர் எலி வளையைப்பார்த்த ஞாபகமும் வந்தது. சாம்பாரின் வாசனைக்காக எலி அட்டிகையை இழுத்துச் சென்றிருக்கலாம் என்று நினைத்தேன். எலி வளையில் சில சமயம் ரூபாய், நகை முதலியவை இதற்கு முன் கிடைத்திருக்கிறது. ஆகையால் அந்த எலி வளையைச் சோதனை செய்ய வேண்டும் என்று எண்ணினேன். இதை யாரிடமாவது சொன்னால் அவர்கள் என்னைக் கேலி செய்வார்கள். ஆகையால் வேறு உபாயத்தால் அந்த எலி வளையைச் சோதனை போட வேண்டும் என்று எண்ணி சிமண்ட் பூசும் பாவனையாக என் எண்ணத்தை முடிக்க எண்ணினேன். வீடெல்லாம் சிமண்ட் பூசியானதும் சமயலறைக்கு சாயந்திரம்வந்தேன். எலி வளை வெகு ஆழமாகவும் அம்மியின் கீழ்ப்புறமாகப் போயும் இருந்தது. அட்டிகை காணப்படவில்லை. ஆகையால் அம்மியைப் பெயர்த்து மற்றும் வளையைத் தோண்டிப் பார்த்தேன். அட்டிகை இருந்தது. அதைக் கண்டதும் என் புத்தி கொஞ்சம் மாறி விட்டது. எப்படியும் அட்டிகையின் ஆசையை விட்டு விட்டார்கள். இதை நான் எடுத்துக்கொண்டு போய் பம்பாயில் விற்று விட்டால் என் கிழக் காலத்தில் ஒரு ஆஸ்தியாயிற்று என்னும் கெட்ட எண்ணம் எனக்கு உதித்தது. யாருக்கும் காட்டாமல் வீட்டிற்குக் கொண்டுவந்தேன். நான் முதவில் ரஜா எடுத்தது எங்கள் கிராமத்திலிருக்கும் வீட்டைச் செப்பனிடவேண்டுமென்று. இப்பொழுது அட்டிகையை விற்க உபயோகப்படுத்த எண்ணினேன். நான் செய்த பிழையை மன்னித்து என் குழந்தை குட்டிகளைக் காப்பாற்றும்படி வேண்டுகிறேன்" என்று சோமசுந்தரம் சொல்லி எல்லாருக்கும் நமஸ்காரம் செய்து நின்றான்.

"உங்களுக்கு எப்படி இது சோமசுந்தரத்தினிடந்தான் இருக்கும் என்று தெரிந்தது" என்று தங்கவேலு கிருஷ்ணசாமியைக் கேட்டார்.

"நான் அந்த நகை கட்டும்பொழுது சீமையில் இருந்தேன். ஆகையால் அது எப்படியிருக்கும் என்று எனக்குத் தெரியாது. என்னுடைய தாயார் நகைப் பெட்டியை எனக்குக் காட்டினாள். பதக்கம் பெரியதாகத்தான் இருந்தது. அது ஒருகாலும் சாக்கடையில் பிடித்திருக்காது என்று நிச்சயித்தேன். சோமசுந்தரத்திற்கு ஆறுமாதத்திற்கப்பால் உதிக்கும் எண்ணம் எனக்கு அப்பொழுதே உதித்துவிட்டது. ஆனால் வீடு முழுவதும் ஒரு துளையும் விடாமல் சிமண்ட் போடப்பட்டிருந்தது. அதுவும் சிமண்ட் யாரோ வேலை அறியாதவர்கள் செய்தமாதிரியாகவே இருந்தது. என் தாயார் சொன்னதிலிருந்து சோமசுந்தரம் தானாகவே வந்து அக்கரையுடன் கஷ்டப்பட்டான் என்று அறிந்தேன். அப்பொழுது மற்றொரு எண்ணம் உதித்தது. எலி இழுத்துச் சென்றிருக்க வேண்டும். ஆகையால் ஸிமண்ட் பூசும் பாவனையாக எலி வளையெல்லாம் சோதனை செய்திருக்கிறான் என்று தீர்மானித்தேன். அதுவும் சரியாகப் போய்விட்டது" என்று சொல்லி முடித்தான் கிருஷ்ணசாமி.

கே. கன்னையா கம்பெனி
இரும்பு பெட்டி வியாபாரம்.

நெ. 137, பிராட் வே, மதறாஸ்.

குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகரற்ற குணமுடையது
☞ வைத்தியர், அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை



விலை குறைவான போலி நகைகளை வாங்கி ஏமாறாதீர்கள்

நெருப்பிற்கும். திராவகத்திற்கும் உத்தரவாதமான நகை எது?

அதுதான் தியாகராஜ

தங்க நகைகள்

எமது கம்பெனி நகைகள் அதிக நாட்கள் உழைக்கக் கூடியவை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. இப்போது அதிக நாட்கள் கஷ்டப்பட்டு நீண்ட நாட்கள் உழைக்கக் கூடிய விதமான மெட்டல் தயார் செய்து கை தேர்ந்த வேலைக் காரர்களைக் கொண்டு நகைகளை தயார் செய்து இருக்கிறோம். ஒரு தரம் வாங்கி பார்த்தால்தான் எங்கள் உண்மை தெரியவரும் எமது நகைகள் கண்களிக்கவரும் அழகும் வேலைப்பாடும் உள்ளவை. பல பொருட் காக்ஷிகளில் தங்க மெடல்கள் பரிசுபெற்றவை. தங்கத்திற்கு [illegible]னத்தில் குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டவை. அதிக சிலவின்றி எல்லோரும் அழகாய் அணிந்து கொள்ளத் தகுந்த உயர்தர நகைகளும் பலரகமான கல்மாலைகளும் நயமாய் கிடைக்கும்.

கேட்டலாக் இனாம்.

கல்மாலை [illegible] 5

ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஜிவல்லரி ஒர்க்ஸ்,
77, சைனாபஜார் ரோட், மதராஸ்.

தென்னிந்தியாவில் வழங்கிய தங்க நாணயங்கள்

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

வாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேத நூல்களில் வெள்ளியைத் தக்ஷிணயாக வழங்குவது நிஷேதிக்கப்பட்டிருப்பதால் சகல வைதீகக்கிரியைகளிலும் தானமாகவோ அல்லது மற்றெவ்விதமாகவோ கொடுக்க வேண்டியவைகள் அனைத்தையும் ஹிரண்யமாகவே கொடுக்கவேண்டியது தவிர்க்க முடியாததாயிற்று. ஆதலின் இத்தேசத்தின் நாணயச் செலாவணித் திட்டத்தை ஒர் உருப்படுத்துவதில் மக்களிடையே வழங்கி வந்த வைதீகக் கோட்பாடுகளும் முக்கியமாகக் கவனம் பெற வேண்டிய அங்கங்களாகவிளங்கின. அன்றியும் பண்டைய அரசர்களுக்கு அமைச்சர்களாக வாய்த்தவர்களனைவரும் வேத வித்யா பாரங்கதரான பிராம்மணோத்தமர்களாகவே இருந்து வந்தனராதலின் இத்தகைய நாணயச் செலாவணி முறையை யமைப்பதில் அவர்களும் ஓரளவு சிரத்தை எடுத்துக்கொண்டிருத்தல் வேண்டும். ஹேமாத்ரி, வித்யாரண்யர் ஆகியவர்களைப் போன்ற வேத வித்துக்கள் பலர் அமைச்சர் பதவியை யலங்கரித்திருக்கிறார்கள். ஹேமாத்ரி தேவகிரி யாதவ அரசர்களிடமும், வித்யாரண்யர் விஜய நகர அரசர்களிடமும் அமைச்சர்களாக உலகம் புகழும் மாப்பெரும் கீர்த்தியுடன் விளங்கியவர்கள். கல்விக் களஞ்சியங்களாகவும், ராஜதந்திர நிபுணர்களாகவும், தன்னலமற்ற தியாகிகளாகவும் திகழ்ந்த அவர்களைத் துணைவர்களாகக் கொண்ட ஹிந்து மன்னர்கள் இத்தகைய நாணயங்களை வெளியிட்டு வந்ததில் யாதொரு ஆச்சரியமும் இருப்பதற்கில்லை.

நாணயங்களை அச்சிடுவதற்குத் தங்கசாலைகள் பல ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. நாணயங்களை முத்திரிக்கும் இலாகா மற்ற இலாகாக்களுடன் சம்பந்தப்படாத தனிப்பட்ட இலாகாவாகும். பரம ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரை ஸகலவிதமான ஜனங்களுக்குமிடையே வழங்க வேண்டுமென்ற கருத்துடன் அரைக்கால் பணம், கால் பணம், அரைப்பணம் போன்ற சிறிய நாணயங்களும் அச்சிடப்பட்டு வந்தமையால் சாமானியர்களும் வைதீகக் கிரியைகளிலும், மற்றும் விசேஷ காலங்களிலும் அவைகளை வெகுவாக உபயோகித்து வருவது எளிதாகயிருந்தது.

சமீப காலம்வரையில் சிராத்த காலங்களில் சக்கரப் பணங்கள் என்ற பெயருடன் கூடிய தங்கத் துண்டுகளைத் தக்ஷிணையாகக் கொடுப்பது வழக்கம். சிராத்தம் பூர்த்தியானவுடன் அதற்கு ஈடான வேறு நாணயங்களைக் கொடுத்துவிட்டு அவற்றைத் திரும்பவும் பெற்றுக்கொள்வார்களாம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்த வழக்கம் இப்பொழுது மறைந்துவிட்டதுமன்றி, இத்தகைய சக்கரப் பணங்கள் ஒன்றாகிலும் நாம் காண்பதற்கரிதாய்விட்டது.

இதுவரையிலும் தென்னிந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட தங்க நாணயங்களில், சிலவற்றின் விவரங்களைக் கீழே காணலாம்.

(1) கங்க பணங்கள்:—இவைகள் கலிங்க நகரத்தரசர்களால் வெளியிடப்பட்டவை. மேற்புறம்-இடதுபுறம் நோக்கி நின்று கொண்டிருக்கும் ரிஷபம்; அதற்குமேல் பிறைச்சந்திரனின வடிவம். பின்புறமும்—இதே உருவங்கள்.

நிறை $5\frac{1}{4}$ கிரேயின்; அளவு 3/10 அங்குலம்.

ஷை அரைக்கால் பணங்கள்: மேற்புறம், பின்புறம் இரண்டிலும் மேற்கண்ட உருவங்கள் எடை $\frac{3}{4}$ கிரேயின் அளவு 1/5 அங்குலம்.

(2) மத்ஸ்ய பணங்கள்:—விசாகப்பட்டணத்தை யடுத்த பிரதேசத்தை யரசாண்டுவந்த சிற்றரசர்களால் வெளியிடப்பட்டவை: மேற்புறம்-இரண்டு மீன்களின் உருவம் —கீழ்ப்புறம். ஷை ஷை.

நிறை $5\frac{1}{2}$ கிரேயின் அளவு 7/20 அங்குலம்.

மத்ஸ்ய கால்பணம்:—மேற்பக்கம்—இரண்டு மீன்கள்

கீழ்ப்புறம்:—ஷை 5

எடை:—$1\frac{1}{4}$ கிரையின் அளவு $\frac{1}{4}$.

(3) புதையற் காசுகள்:—திருச்சியிலும், திருநெல்வேலியிலும் கண்டெடுத்தவை.

மேற்புறம்:—காளி உருவம்; சூரிய, (*) சந்திரர்கள் முதலியன.

பின் புறம்:—சூரியன் ⁝ ⁝ ⁝ 1 சந்திரன்

நிறை. $5\frac{1}{2}$ கிரேயின் அளவு 2/5"

நாணயங்கள் கோயம்புத்தூர், வட்கன்னடம், கிருஷ்ணா, செங்கற்பட்டு கடப்பை தஞ்சாவூர், கோதாவரி, மதுரை, வட ஆற்காடு, தென் ஆற்காடு, மலையாளம், சேலம், நெல்லூர், குடகு ஆகிய 14 ஜில்லாக்களிலும் பெருவாரியாகக் கண்டெடுக்கப் பட்டிருப்பதினின்றும் உள்நாட்டில் ஏராளமான அளவில், மக்களிடையே வழங்கியிருத்தல் வேண்டுமென ஊகிப்பதற்கேதுவுண்டு.

(4) வீரராயன் பணம்:—இவைகளில் 16 தினுசுகள் காணப்படுகின்றன.

மேல்—U (நாமம்) போன்ற அடையாளமும வேறு சில அக்ஷரங்களும.

கீழ்:—12 புள்ளிகள்; அடையாளம் காணுதற்கியலாத ஏதோ உருவம்.

'எனக்கு ஒன்றாவது இல்லையோ?'

காட்வுக்குப் புடவையும், சோமுவுக்கு ரயிலும் உங்களுக்கு தார்ஸ் பிளாஸ்க் முதலிய எல்லாம் சட்டமாய் வாங்கி வந்தீர்களே! எனக்கு ஒன்றுமே இல்லையோ' என்று சென்னைக்கு விஜயஞ்செய்து வீடு திரும்பிய நண்பரை அவர் மனைவி வருத்தமாகக் கேட்டாள்.

இந்தா உனக்கு வேண்டிய பெருங்காய பாக்கெட்டுகளை நாம் வங்கி வந்திருக்கிறேன் என்று பெட்டியின் அடியில் ஒளித்து வைத்திருந்த **எல். ஜி.** பெருங்காய பாக்கெட்டுகளை மெதுவாய் வெளியில் எடுத்துக் காட்டியதும் அம்மையார் அடைந்த ஆனந்தத்திற்கோ எல்லை இல்லை!

இந்தமாதிரி பட்டணத்திலிருந்து வாங்கிவரும் நமது **எல். ஜி** பெருங்காயத்தைக் கண்டவுடன் மட்டற்ற மகிழ்ச்சி கொள்ளும் நாரீமணிகள் தமிழ் நாடெங்குமுளர். 50 வருஷத்திற்கதிகமாய் பிரபலமானதும், தமிழ் அனைவராலும் **"பட்டணங் காயம்"** என்று சலாகிக்கப்படுவதும் கணக்கற்ற தங்க மெடல்கள் பரிசு பெற்றதும் எமது **சிறந்த எல். ஜி.** பெருங்காயமே. மார்க்கெட்டில் உலவும் ஆடம்பரப் போலிகளை **எல். ஜி.** பெருங்காயமென மதித்து ஏமாறாமல் **எல் ஜி.** மார்க்கை கவனமாகக் கவனித்து **எல் ஜி.** பாக்கெட்டுகளையே வாங்கவேண்டுமென்று நண்பர்களைக் கோருகிறோம்.

எல். ஜி 1 பவுண்டு பாக்கெட் விலை	ரூபா	1 14 0
,, $\frac{1}{2}$,, ,,		0 15 0
,, $\frac{1}{4}$ பவுண்டு பாக்கெட் விலை		0 8 0
,, 1 பலம் ,, ,,		0 2 6

லால்ஜி கோது & கம்பெனி,

தலைமை ஆபீஸ்: பிரபல பெருங்காய வியாபாரிகள், பிராஞ்சு:
பம்பாய். செளகார்பேட்டை, சென்னை. தும்பகோணம்

தமிழன்பர்களுக்கு ஓர் நல்விருந்து!

புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூல்களைப் படித்து ஆனந்தமடையுங்கள்.

1.	கவிதைகள் (8-பாகங்கள்)	ரூ. 2—8—0
2.	வசனங்கள் (6-பாகங்கள்)	,, 2—0—0
3.	கதைக்கொத்து	,, 0—8—0
4.	பகவத் கீதை	,, 0—8—0
5.	கட்டுரைகள் பகுதி 1 தத்துவம்	,, 0--10—0
	,, ,, 2 மாதர்	,, 0—8—0
	,, ,, 3 கலைகள்	,, 0—8—0
	,, ,, 4 சமூகம்	,, 0--12—0

6. Bharathi and his works
by Mr. C. Visvanathan, Brother of Bharathi 0 4 0

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

நிறை:—5½ கிரெயின் அளவு 3/10 முதல் 2/5 அங்குலம்.

5. காசு பணங்கள்:—மேல் பக்கம்—சரகு விரித்துப் பறக்கும் கருடபக்ஷி.

கீழ்:—III (மூன்று கோடுகள்) நிறை அளவு முன் கூறியன போலே கண்டறிக.

6. நாமப்பணங்கள்—மேற்புறம்—வைஷ்ணவர்களின் நாமம்.

பின்புறம்:—சில அக்ஷரங்கள். (தெளிவற்றவை)

நிறை:—5¼ அளவு 2/10 முதல் 3/10.

7. சோழப் பணங்கள்:—முதலாவது குலோத்துங்க சோழதேவன் நாட்களில் வெளியிட்டது

மேற்பக்கம்:—"சுங்க" என்ற தமிழ் எழுத்துக்களும், மலையரின் யாண்டும்.

கீழ்:—புலி, வில், முதலிய உருவங்கள்.

எடை:-5¼க்ரெயின் அளவு 2/5

8 ரெட்டி பணம்:—மேல்:—படுத்திருக்கும் ரிஷபம், சூரிய சந்திரர்கள். புள்ளிகள்.

கீழ்:—மாவட்டி, சாட்டை சந்திர சூரியர்.

எடை:—5½ அளவு ¼

ஷை (கால்பணம்)—(இருபக்கங்களிலும்) ஷை—ஷை. எடை 2½

(9) தென்னாட்டுப் பணங்கள்:—மேற்புறம்:—தேவநாகரி லிபியில் पत प्रधान 'பத, ப்ரதான) என்ற அக்ஷரங்கள்.

பின்புறம்:—(காலி)

எடை:—"2½ கிரெயின் அளவு 1/5."

(10) மேல்நாட்டுப் பணங்கள்:—மஹாவிஷ்ணுவின் நின்ற திருக்கோலம்.

பின்:—மனித உருவம்; தீபம்.

எடை:—5½ கிரெயின் அச்சுற்றறைக்குறைய ¼"

ஷை கால்பணம்—மேல்:—புள்ளிகளாலும், கோடுகளாலுமாகிய உருவம்

பின் பக்கம்:—புள்ளிகளாலாகிய ஒரு வட்டமும் ஒரு கோணமும்

எடை:—1½ கிரா அளவு 1/5

(11) அனந்தராமன் பணங்கள்:—(திருவாங்கூர் அரசர்கள் வெளியிட்டவை.)

மேல்:—புஷ்பத்தைப் போன்ற சித்திரம்.

கீழ்:—ராசிச் சக்கரம் (12 புள்ளிகள்) சில கோடுகள்.

எடை:—5½ கிரெயின் அளவு 1/10

ஷை (அரைப்பணம்)

மேல்:—ஷை.

கீழ்:—ஷை.

எடை 2½ கிரெயின்—அ—0 22

(12) எட்டிப்பணம்:—மேல்:—கூடியன் வடிவம்.

கீழ்:—இருதயத்தையொத்த ஒரு வடிவம். 12 புள்ளிகள், சூரிய சந்திரர்கள்.

எடை:—5 முதல் 5¼ கிரெயின—அ—¼ முதல் 2/5.

(13) சிவாஜியின் தங்கப் பணங்கள்:—(சத்ரபதி சிவாஜியின் காலத்தியவை)

மேல்:—"சத்ரபதி"

கீழ்:—"சிவராஜ"

எடை—5-1/5 அளவு—1/5"

(14) ராமராயன் பணம்:—(சிவாஜியின் இளைய குமாரனான ராஜாராமினால் வெளியிடப்பட்டவை)

மேல்:—அரசனின் உருவம்

கீழ்:—"ராம ராய" राम राय

எடை:—5½ அளவு ¼ "அல்லது 3/10"

மேலே கண்ட விவரங்களிலிருந்து பண்டைக்காலம் முதலாக அரசர்கள் மிகவும் குறைந்த மதியுள்ள நாணயங்களையே மிகுதியும் வெளியிட்டு வந்தார்களென்பது தெளிவாகும். 5 கிரெயின் எடையுள்ள ஓர் தங்க நாணயத்தை தற்காலத்திய நாணயமதிப்புப்படி 4 அணாவிற்கும் கால் பணங்களையும் அரைக்கால் பணங்களையும் முறையே 1 அணாவிற்கும், அரையணாவிற்குமாக ஒருவாறு மதிப்பிடலாம்.

ஹிந்து அரசர்களைத் தவிர பிற்காலத்தில் தென்னாட்டில் தமது ஆதிக்கத்தைச் செலுத்திவந்த அவுரங்கஜீப், ஜஹாங்கீர்ஷா, பாக்ஸியார், முகம்மதுஷா, ஆமத்ஷா, இரண்டாவது அபங்கீர், இரண்டாவது ஷா ஆலம் ஆகிய மூஸ்லீம் பேரரசர்களும தத்தம் காலங்களில் குத்தி, இம்தியாஸ்கார், தாடிபத்திரி கடப்பை முதலிய இடங்களில் நாணயச்சாலைகளை நிறுவியிருந்தார்கள். இத்தங்க சாலைகளில் விராகன்களும், அரை விராகன்களும், பணங்களும் ஏராளமாக முத்திரிக்கப்பட்டன இவை தென்னிந்தியாவில் மட்டுமே வழங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் முத்திரிக்கப்பட்டனவாகும் எனினும் வட இந்தியாவில் இவர்களுடைய பெயரால் வெவ்வேறு விதமான நாணயங்கள் வழங்கி வந்தன. இந்த மூஸ்லீய அரசர் பணங்களில் அந்தந்த அரசருடைய உருவமும், பின்புறத்தில் அவை அச்சிடப்பட்ட ஊரின் பெயரும், ஹிஜ்ரி சகாப்தத்தில ஆண்டும் பொறிக்கப்பட்டிருந்தன அவை சாதாரணமாக 2½ கிரெயின் எடையும், 1/5 அங்குல அளவும் உள்ளவைகளாக இருக்கின்றன

மலரிற் சிறந்தது மல்லிகை

குக்கரிற் சிறந்தது ருக்மணி

போலி குக்கர்களைக் கண்டு ஏமாறாதீர்கள்.
எல்லா குக்கர்களும் குக்கர்களாகாது.

ருக்மணி குக்கர்

தான் எந்தக் காலத்திலும் ஆரோக்யமும் சுத்தமான ஆகாரத்தைக் கொடுக்கும். எல்லோரும் வாங்கும் பொருட்டு விலைகளையும் குறைத்திருக்கிறோம். 1 முதல் 16 பேர்கள் வரை சாப்பிடக் கூடிய 7 அளவுகள் 9 ரூபாய் முதல் 38 ரூபா வரை இருக்கின்றன.

விபர புத்தகம் இனாம்.

ருக்மணி குக்கர் கம்பெனி,

ராயபுரம், (12) சென்னை.

எமது ஏஜெண்டுகள்:

திருவண்ணாமலை—ராவ்சாகிப் M. சேஷாசலம் அய்யர்.
சேலம்—சேலம் சுதேசி எம்போரியம் (போலீஸ் ஸ்டேஷன் எதிரில்.)
மதுரை:—மதுரை கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ், நாய்க்கர் புது வீதி.
திருநெல்வேலி டவுன்:—P. . சாமி கோ, தெற்கு ரதவீதி.
தூத்துக்குடி:—V. S. S காளியப்ப நாடார், கிரேட் காட்டன் ரோடு.
கோயமுத்தூர்:—பெனாரீஸ் சில்க் எம்போரியம் 115, ராஜவீதி.
கரூர்—. . ராஜகோபால் செட்டியார் திண்டுக்கல் ரோடு.
நாகப்பட்டினம்—நாகை நாஷனல் எம்போரியம் லிமிட்டெட்.
திருச்சினாப்பள்ளி:—S. முத்துக்குமாரசாமிப் பிள்ளை ஜெனரல் மோட்டார் ஸ்டோர்ஸ்.

DIAMONDS ESTD 1910 JEWELLERY

டாக்டர் பி. கே. கே. நாயுடு, மண்டபம் முகாம்.

நான் ஆர்டர் செய்த நகைகள் அடங்கிய பார்சல் கிடைத்தது. 'பிரிவு உபசாரத்தை' நடத்தியவர்கள் நகைகளைக்கண்டு பரமதிருப்தி அடைந்தனர். என் பணிவியுடன், நானும் தங்கள் அழகிய வேலைப்பாட்டைப் பாராட்டுகிறேன்.

BAPALAL & Co
216. China Bazaar. MADRAS.

ரூ. 100 இனாம்

(மாந்திரீக மோதிரம்)

காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி. வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
S M.) Panchpota. BENGAL

SIMILICURE

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co
Economic Pharmacy, 84, Clive Street. CALCUTTA.

மஹாபாரதம் - அநுசாஸன பர்வம்

ஸ்திரீ புருஷர்களின் தர்மங்கள்

கொல்லாமலே வரும் பிரம்மஹத்தி தோஷங்கள்

யுதிஷ்டிரர் ஸ்திரீகள் சம்பந்தமாகச் சில விஷயங்களைப் பற்றிப் பீஷ்மரிடம் கேட்டார். "விவாஹ காலத்தில் பெண்களை புருஷனுடைய தர்மத்தையே தனக்கும் தர்மமாக உடையவள் என்று பொருள்படும் ஸஹதர்மை என்று சொல்லுகிறார்களே. இது எப்படி? இந்த விவாஹம் வேதோக்தமான யாகாதி காரியங்களுக்குக் காரணமான தர்மமா? ஸந்ததியுண்டாக்கும் தர்மமா? அல்லது காம சுகத்தைமட்டும் தரும் தர்மமா? எதனால் மஹரிஷிகள் இதை ஸஹ தர்மமென்று சொன்னார்கள்? இவ்வுலகத்தில் எது ஸ்திரீ புருஷர்கள் சேர்ந்து செய்யும் தர்மமோ அதற்குப் பலன் எங்கே விதிக்கப்படுகிறது? இறந்து போனவர்களுக்கு ஸஹ தர்மத்தின் முடிவு ஸ்வர்க்கம் தானே. பல மனிதர்கள் வெவ்வேறு கர்ம பலன்களுடன் பிறந்து வெவ்வேறு கர்மங்களைச் செய்துகொண்டிருந்து அவற்றிற்குத் தகுந்தபடி நரகமோ ஸ்வர்க்கமோ மோக்ஷமோ பெறுகின்றனரல்லவா? தர்ம ஸூத்ரம் செய்தவர்கள் பெண்கள் பொய்யென்று நிச்சயித்திருக்கிறார்கள். பெண்கள் பொய்யாயிருந்தால் ஸ்திரீ புருஷர்களுக்கு ஒரு தர்மம் சொல்வதெப்படி?" என்று கேட்டார்.

இதற்குப் பீஷ்மர் பதிலளிக்கையில் அந்த விஷயத்திலும் அஷ்டாவக்ர முனிவருக்கும் வடதிசைத் தேவதைக்கும் நடந்ததொரு சம்பாஷணை இருப்பதாயும் அதைத் தாம் சொல்லுவதாயும் சொன்னார்.

முன்பு அஷ்டாவக்ர முனிவரென்பவர் விவாகம் செய்துகொள்வதற்காக வதான்யரென்னும் ரிஷியிடம் சென்று அவருடைய பெண்ணான ஸுப்ரபை என்பவளைத் தனக்கு விவாகம் செய்து கொடுக்கும்படி கேட்டார்.

இதற்கு வதான்யர் பின்வருமாறு சொன்னார்:—உமக்கு என் பெண்ணைக் கொடுக்க வேண்டுமானால் நான் சொல்வதைக் கேளும். வேறு ஸ்திரீ இல்லாதவனும், தெரிந்தவனும் ஊரைவிட்டுப் போகாதவனும் இனிமையாய்ப் பேசுகிறவனும் அழகுள்ளவனும், வீரனும், விநயமுள்ளவனும், ஸுகத்தை யனுபவிக்கத் திறமையுள்ளவனும் பரிசுத்தனுமான புருஷன்தான் பெண்ணுக்கு விருப்பமானவன். மனைவியுடன் ஒத்துபாகம்செய்கிறவன் நல்ல நக்ஷத்திரத்தில்பிறந்தபெண்ணை விவாகம் செய்து கொள்ள வேண்டும். முதலில் நீர் வடதிசைக்குச் செல்ல வேண்டும். குபேரனிடம், ஹிமாசலம் முதலியவைகளைத் தாண்டிச் சென்றால் ஒரு காட்டைப் பார்ப்பீர். அதில் கிழவியும் விரத தீக்ஷை செய்பவளுமாகிய ஒரு தவப் பெண்ணைக் காண்பீர். அவளைக் காணவும் ஜாக்கிரதையாகப் பூஜிக்க வேண்டும். அவளைப் பார்த்துத் திரும்பிவந்த பிறகு விவாகம் செய்து கொள்ளலாம்.

இம்மாதிரியே அஷ்டாவக்ரர் மேற்படி காட்டை அடைந்தார். அங்கு ஒரு அழகிய ஆஸ்ரமத்தைக்கண்டார். இவர் ஆஸ்ரம வாயிலுக்குச் சென்றவுடன் ஏழு அழகுள்ள கன்னிகைகள் வரவேற்று உபசரித்தனர். பிறகு அஷ்டாவக்ரர் அவர்களுடன் உள்ளே சென்றார். அங்கே கட்டிலில் அழகிய தளர்ந்த கிழவி உட்கார்ந்திருந்தாள். கிழவியும் அஷ்டாவக்ரரை உபசரித்தாள் பிறகு இரவு வந்தவுடன் படுத்துக் கொண்டாள். அஷ்டாவக்ரரும் மற்றொரு சயனத்தில் படுத்துக் கொண்டார். கிழவியானவள் பிறகு குளிரைக் காரணமாகக் காண்பித்து நடுங்கும் தேகத்துடன் தன் சயனத்திலிருந்து இறங்கி அஷ்டாவக்ரரின் சயனத்தில் ஏறினாள். அவள் அன்புடன் இரண்டு கைகளாலும் அந்த ரிஷியைத் தழுவினாள். ஆனால் யாதொரு மனவேறுபாடுமின்றி கட்டை போலவும் சுவர் போலவும் இருந்த ரிஷியைக்கண்டு மனத்தில் துன்பத்துடன் அம்முனிவரிடம் பேசலானாள்.

"பிராம்மணரே! பெண்களுக்கு ஸ்வேச்சையென்பது இல்லை. அவர்களுக்குப் புருஷனாலேதான் சுகம். உம்மிடத்தில் அன்பு வைத்த என்மேல் நீர் அன்பு வைக்கக் கடவீர். உமது தவத்திற்குச் சிறந்த பலன் இது தான். உம்மைப் பார்த்த அளவில் எனக்கு விருப்பமுண்டாயிற்று. வந்தடையும். என்னை ஆதரியும்"

மைசூரில் நடைபெற்ற சர்வதேச ஒய். எம். ஸி. ஏ. மகா நாட்டிற்குச் செல்லும் சீனா, பிலிப்பைன், ஹங்கேரி தேசப் பிரதிநிதிகள் சைதாப்பேட்டை ஒய். எம். ஸி. ஏ. தேகப் பயிற்சி கலாசாலைக்கு விஜயம் செய்தபோது எடுத்த படம்.

இதற்கு அஷ்டாவக்கிரர் "பிறர் பெண்டிரைத் தொடுவது தர்ம சாஸ்திரங்களால் மறுக்கப்பட்டது பதிவிரதையான ஸ்திரீயுடனிருப்பதற்கு பிரம்மஹத்திக்குச் சொன்ன பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கிறது பிராம்மண ஸ்திரீ விஷயத்தில் இன்னும் அதிகமாகப் பாவம் சொல்லப்பட்டிருக்கிறது. நான் விவாகம் செய்துகொள்ள விருப்பமுள்ளவன். அது விஷயத்தில் எனக்குப் பிரம்மசரியம் கெடும். நான் காமஸுகங்களை யறியாதவன். தர்மத்திற்காக ஸந்ததியுண்டாக வேண்டியது மட்டும் தான். என்னுடைய புத்ரஸந்தானத்தினால் நான் நல்ல லோகம் போக வேண்டுமென்பது தான் என்னுடைய நிச்சயம். ஆகையால் தர்மத்தை அறிந்து என்னை நிவிருத்தித்துவிடு" என்று சொன்னார் பிறகு அவ்விருவரும் பிரிந்து விட்டனர்.

மறு நாள் இரவும் அவ்விருவரும் தனித்தனி படுக்கையில் படுத்திருந்தனர். முன் போலவே அந்த ஸ்திரீ பாதிராத்திரியில் அவர் சயனத்திற்கு வந்தாள். அஷ்டாவக்ரர் அவளைப் பார்த்துத் தம் மனம் அயலார் மனைவிகளிடம் பதிவதில்லை என்று கூறிவிட்டு ஒரே உறுதியுடன் இருந்து விட்டார். அந்த ஸ்திரீயும் பின்வருமாறு சொன்னாள்:—நான் ஒருவன் மனைவியல்லேன். என் பக்தியைப்பாரும். என்னை அங்கீகரியாவிடில் பாவத்தை யடைவீர். அயலார் மனைவிகள் விஷயத்தில் குற்றங்களதிகமாக விருப்பதாக நினைத்தால் இப்போதே என்னை உமக்குக் கொடுக்கிறேன் என்னைப்பாணிக்ரஹணம் செய்துகொள்ளும். பாவமுண்டாகாது. எனக்குக் கணவனில்லாமல் நானே ஸ்வதந்திரமாயிருப்பவளென்று அறியும். அப்படிப்பட்டவளுக்கு எது தர்மமோ அது எனக்கிருக்கட்டும். நான் உம்மிடத்தில் மனம் வைத்தவளாகவும் யாருக்கும் உட்படாதவளாகவும் இருக்கிறேன் என்னை நீர் அடையலாம். நான் சிறு பிராயம் முதலாகவே விவாகம் செய்துகொள்ளாமல் பிரம்மசாரி விரதத்திலிருக்கிறேன். நான் கன்னிகைதானென்பதில் சந்தேகமில்லை.

இதைக் கேட்ட அஷ்டாவக்ரர் பின்வருமாறு பதில் சொன்னார்:—பெண்கள் ஸ்வதந்திரமாயிருப்பதில்லை. பெண்கள் பிற

வலுவூட்டும் சிறந்த டானிக்

வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம்

கிருஷ்ராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ்,

மருந்து வியாபாரிகள், சைனபஜார் ரோட், மதராஸ்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

ருக்கு அடங்கியிருக்க வேண்டுமேயன்றித் தம் இச்சையாக இருக்கத் தகாதென்பது பிரம்மதேவருடைய கட்டளை. ஐம்புலன்களுக்கும் அடிமையாகும் மனிதனை அநேக பாவங்கள் இழுக்கும். நான் மன உறுதியினால் புலன்களை வெல்லுகிறவன். மேலும் கிழவியாயிருப்பவளை நான் கன்னிகையென்று நம்புவதெப்படி?

உடனேயே அந்த ஸ்திரீ ஒரு அழகுள்ள கன்னிகையானாள். அஷ்டாவக்ரரும் அவளைப் பார்த்து "உனது ரூபத்தை என் மாற்றுகிறாய்? பிராம்மணன் மேல் ஆணைப்படி சொல்" என்று கேட்டார்.

அதற்கு அந்த ஸ்திரீ சொன்னதாவது:—உண்மையான இந்திரிய ஜயமுள்ளவரே! உம்முடைய மன உறுதியைப் பார்ப்பதற்காகவே நான்: இந்தப் பரீக்ஷை செய்தேன். விரதந்தவறாமையினால் நீர் புண்ணிய லோகங்களை ஜெயித்தவராகிறீர். என்னை வடதிசைத் தேவதை யென்றறியும். பெண்கள் மனம் நிலையற்றிருப்பதை நீர் கண்டிருக்கிறீர். கிழவிகளான ஸ்திரீகளையும் மன்மத தாபம் துன்பஞ் செய்யும். பெண்களை நம்பாதவனும், கள், காமம், சூது, முதலிய குற்றங்கள் இல்லாதவனும், பெண்களிடம் அதிகப் பற்று இல்லாதவனும், ஊரைவிட்டுப் போகாதவனும், நல்லொழுக்கமுள்ளவனுமான புருஷன் தான் மனைவியினால் சுகமடைவான். நீர் எக்காரியம் பற்றி இங்கு அனுப்பப்பட்டீரோ அது முடிந்து விட்டது. பெண்ணானவள் சுகத்தில் மிகவும் பற்றுள்ளவள். இன்சொல்லினாலும், விட்டுப் பிரியாமலிருப்பதினாலும், சிறந்த ஆடை முதலியவற்றினாலும், அதிகமாக நெருங்காமலிருப்பதனாலும், ஒற்றுமையினாலும் காப்பாற்றப்படுகிறாள். நீர் எந்தக் கன்னிகையை ஆசைப்பட்டீரோ அவளை அடையப் போகிறீர். அவள் புத்ரஸந்ததியுள்ளவளாவாள். நீர் செல்லலாம்.

இவ்விதம் விடை கொடுத்தனுப்பப்பட்ட அஷ்டாவக்கிரர் வதான்யரிஷியிடம் சென்று எல்லாவற்றையும் தெரிவித்து, பிறகு கன்னிகையையும் மணந்துகொண்டு சௌக்கியமாக விருந்தார். ஒரு புருஷன ஸ்தரீயை நல்லொழுக்கம் தவறாமலிருக்கும்படி காப்பதற்குச் சொன்ன வழியை அனுசரித்தால் அந்த ஸ்திரீ சரியாக நடப்பாள். அப்படிப்பட்டவன், தான் நல்ல கதி பெறுவதுடன் தனது மனையாட்டியையும் நல்ல கதியிற் சேர்ப்பான். புருஷனோடு ஒத்திருப்பதைத் தவிர தனித்து வேறு தர்மம் பெண்ணுக்கில்லையென்பதினாலேதான் அவளை ஸஹதர்மையென்பது. கற்புள்ள பெண் ஒருவள் ஸுகத்திற்கும் தர்மத்திற்கும் இன்றியமையாத துணை. ஆசாரியன் சிஷ்யனைத் திருத்துவது போலத் தன் துணையான மனைவியைச் சீர்திருத்தி நல்வழியில் நடத்துவது கணவன் கடமை என்பது இக்கதையின் சமாதானம்.

பிறகு பீஷ்மர் சொல்லாமலே வரும் பிரும்மஹத்தி தோஷங்களைப்பற்றிப் பின்வருமாறு சொன்னார்:—ஜீவனத்திற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் பிராம்மணனைப் பிக்ஷைபோடுவதாக வலிய அழைத்துப் பிறகு இல்லையென்று சொன்னவனைப்பிரம்மஹத்தி செய்தவனாக அறிய வேண்டும். வேதாத்யயனம் செய்து விருப்பு வெறுப்புகளை விட்டிருக்கும் பிராம்மணனுடைய ஜீவனத்தை எடுத்து விட்ட மதிகேடனைப் பிரம்மஹத்தி செய்தவனாக அறிய வேண்டும. பசு மாட்டுக் கூட்டம் தாகமெடுத்துத் தண்ணீர் குடிக்க ஓடும்போது அதற்குத் தடை செய்தவன் பிரும்மஹத்தி தோஷத்திற் காளாகிறான். வேதத்தையும் தர்ம சாஸ்திரங்களையும் அவற்றையறியாதவனிடத்தில் தூஷிக்கின்றவனைப் பிரம்மஹத்தி செய்தவனாக அறியவேண்டும். மிக்க அழகுள்ள பெண் வயது வந்தும் அவளைத்தகுந்த வரனுக்குக் கொடாதிருப்பவன் பிரம்மஹத்தி செய்தவன். எவன் பாவச் செய்கையையே செய்துகொண்டு உயிர்போகத்தகுந்த துயரத்தைப் பிராம்மணர்களுக்கு வீணாக உண்டாக்குவனோ அவனும் பிரும்மஹத்தி செய்தவன். கண்ணில்லாதவன், நொண்டி, மூடன், இவர்களுடைய சொத்துக்களையெல்லாம் எடுத்துக்கொள்ளுகிறவனும், அறிவு கெட்டு ஆஸ்ரமத்திலும், வனத்திலும், கிராமத்திலும் நகரத்திலும் தீயிடுகிறவனையும் பிரம்மஹத்தி செய்தவனென்று அறிய வேண்டும்

(தொடரும்)

Drawing Materials

To Students & Engineers

Drawing Papers, Cloth, Pins, Pencils, Erasers, Water & Oil Colours, Canvas, T. Squares, Brushes etc., etc., are always in Stock. Ask for Quotation.

P. R. NATHAM & Co., High Class Stationers.

Phone 2305 China Bazaar Road, MADRAS.

நீலகிரி

காப்பிக்கொட்டை

கீழ்க்கண்ட ரகங்களை சகல சார்ஜும் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்குத் தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானாலும் அனுப்பப்படும்:—

— வி. பி. ரெயில்வே பார்சல் மூலமாய் —

10 lb. எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக்கோட்டை ரூபா 5—2—0

கூட்ஸ் வண்டி மூலமாக (Goods Train)

1×30 lb மூட்டை நீலகிரி "O" சைஸ் ,, 14—4—0

1×30 lb மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு ,, 12-11—0

இன்னும் இதர காப்பிப்பொடி டீ தினுசுகளின் விலை விவரங்களுக்கு :: :: கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :: ::

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடெட்.;

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்

T ஸ்டேன்ஸ் & Co, Ltd., கோயம்புத்தூர்.

BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW

வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளை தான உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டுவரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமிராது. 541 கெக்கின்பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய வீல்சுளும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். செந்தூரத்தில் "மான்மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்

Sole Agents:- M. R. V. AIYER & Co., 49, பந்தர் தெரு, மதராஸ்

அமிர்தா

சிறந்த வகையில்

இரத்தசுத்தி

அளித்து

நரம்புக்கு

வலுவூட்டுகிறது

இரத்தமின்மை
அஜீரணம்
சருமக் கோளாறு
இந்திரிய ஸ்கலிதம்
நரம்பு பலவீனம்
கிரந்தி நோய்கள்
முதலியவற்றை
நிவர்த்திக்கும்

கேஸரி குடீரம்
மதராஸ்

தென்னிந்தியப் பிரமுகர்கள்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு ஜதை தோடாவும், ஒரு ஜதை சால்வையும், ஒரு ஜதை பட்டு துப்பட்டாவும் வழங்கப் பட்டன. அக்காலத்தில் ராமநாதபுரத்தில் இருந்து வந்த பொன்னுசாமித்தேவர் என்பவர் வித்வஜ்ஜன பக்ஷபாதியாவார். அவருக்கு வடமொழி தென்மொழி என்ற பேதம் கிடையாது; சமஸ்கிருத சிரோமணிகளையும் அவர் பஹுமானித்து வந்தார்.

பின்பொரு சமயம் இவர் மன்னார்குடிக்குச் சென்று அங்கு மஹாமஹோபாத்யாய ராஜு சாஸ்திரிகளின் முன்னிலையில் வ்யாக்கியார்த்தம் செய்தார். அப்போது ராஜு சாஸ்திரிகளும் இவரது திறமையையும் தைர்யத்தையும் கண்டு சந்தோஷத்துடன் இவரது சக்தியை மெச்சினர். இவ்வாறு இவர் பல இடங்களுக்குச் சென்று தமது வித்வத்தைக் காட்டி வந்ததனால் இவரது பெருமை எங்கும் பரவியது. சம்ஸ்கிருத பாஷையில் இவருக்குக் கிட்டியிருந்த ப்ராவீண்யம் பல பக்கங்களிலும் பிரசித்தமாகியது.

மலையாளப் பிரதேசத்திலும் இவரது புகழ் பரவியது. பூவல்லி நம்பூதிரி என்பவர் இவரைத் தமக்கு சமஸ்கிருத பாடம் போதிக்க வேண்டுமென்று தம்மிடம் வரவழைத்துக்கொண்டு விட்டார். சுமார் 1904-ல் இவர் பூவல்லிக்குச் சென்று அங்கு நம்பூதிரிகளுக்கு சுமார் 2 வருஷகாலம் பாடம் போதித்தார்.

1906-ல் மயிலாப்பூரில் காலஞ்சென்ற ஸ்ரீமான் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் ஒரு சம்ஸ்கிருதகலாசாலையை நமது ப்ராசீன கலாபிவிருத்தியை யுத்தேசித்து ஸ்தாபித்தார். அப்போது அக்கலாசாலையின் ஆசிரியர்களாக அவர் பலரை நியமித்தனர். அவர் மஹாமஹோபாத்யாய வித்யா வாசஸ்பதி எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரியாரைப் பிரதான அத்யாபகராகவும், மஹாமஹோபாத்யாய ஆர். சந்திரசேகர சாஸ்திரிகள், மஹாமஹோபாத்யாய டி. வெங்கடசுப்பா சாஸ்திரிகள் முதலியோரை அத்யாபகர்களாகவும் நியமித்தார். உடனே சொற்ப காலத்திற்குள்ளாகவே மஹாமஹோபாத்யாய குப்புஸ்வாமி சாஸ்திரிகள், ஸர் சிவஸ்வாமி அய்யர் ஆகியோரின் வற்புறுத்தலுக்கிணங்கி இவர் மயிலாப்பூர் கலாசாலையில் ஒரு ஆசிரியர் ஸ்தானத்தை ஸ்வீகரித்துக் கொண்டார். மயிலாப்பூர் கலாசாலையில் இவர் சுமார் எட்டு வருஷங்கள் இருந்து, வேதாந்தத்தை சிஷ்யர்களுக்குச் சொல்லிக் கொடுத்துவந்தார். இவரிடம் இங்கு படித்து தேர்ச்சி பெற்ற சிஷ்யர்கள் பலர் இருக்கின்றனர்.

கோச்சி சமஸ்தானத்திலிருந்து அழைப்பு

சுமார் 1913-ல் காலஞ்சென்ற கொச்சி மஹாராஜா பட்டத்தைத் துறந்த முதலாவது ஸர் ராமவர்மா, காசி, ராமேஸ்வரம் முதலிய திவ்ய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரையாகச் சென்று சென்னைக்கு வந்தார். அப்போது அவர் இவரை வரவழைக்க, இவர் அவருடன் சிறிதுகாலம் ஸல்லாபம் செய்தார். மஹாராஜா ஸர் ராமவர்மாவும் சம்ஸ்கிருதத்தில் மஹா சூரர் என்பது இங்கு குறிப்பிக்கப்பட வேண்டுவது அவசியம். அப்போது இவர் கீதாதாரீயத்திலுள்ள பக்ஷதாபாகத்தைப் பற்றி பூர்வபக்ஷத்தையும் விவாதத்தையும் நடத்தினர். இதற்காக இவர் தாமே ஸ்வயம் இயற்றியுள்ள "சதகோடி," "நியாயபாஸ்கரகண்டனம்" ஆகிய கிரந்தங்களிலிருந்து சில விஷயங்களையும் எடுத்துச் சொன்னார். இதனால் மஹாராஜா பரமசந்துஷ்டரானார். அப்போது மஹாராஜா, "நான் அநேக பிரதேசங்களுக்குச் சென்று அநேக பண்டிதர்களுடன் சபாஷித்து வருகிறேன். வேதாந்த சாஸ்திரத்தை நன்கு தெரிந்துகொண்ட ஒரு வித்வானைக் காணவேண்டும் என்பதே என் நோக்கமாக விருந்தது. நான் ஊருக்குத் திரும்பிய பின்பு இரண்டு மூன்று மாதகாலத்திற்குள் தங்களுக்கு என்னிடமிருந்து ஆஸ்வானம் வரும்; அதை அவசியம் அங்கீகரிக்க வேண்டும்" என்று இவரிடம் கூறினர். அச்சமயம் இவருடன் மஹாராஜாவிடம் சென்றிருந்த ப்ரும்மஸ்ரீ ராமச்சந்திர தீக்ஷிதர் இச்சம்பவத்தை என்னிடம் சொன்னார். வேதாந்த பாகத்தில் இவருக்கிருந்த திறமையை மஹாராஜாவும் சிலாகித்தார். அவர் வாக்களித்தபடியேஇவருக்கு 1914-ல் கொச்சி சமஸ்தானத்திலிருந்து அழைப்பு வந்தது. கொச்சி மஹாராஜா தாம் திருப்பணித் துறையில் ஸ்தாபித்த "ஸர் ராமவர்மா சம்ஸ்கிருத கலாசாலை"யின் வேதாந்த அத்யாபகராக இவரை நியமித்துக் கொண்டார்.

மஹாமஹோபாத்யாயர் பட்டம்

இந்த நியமனத்திற்கு முன்பே நடுவில் ஒரு சமயம் இவர் சென்னை வாசம் தமது சுகத்தைப் பங்கப்படுத்திய

"என் குழந்தை என் இப்படிப் படுத்துகிறது?"

வலுவற்ற குழந்தைகளுக்கு வலுவூட்டவேண்டும்: டாக்டர்கள் சிபார்சு செய்யும் சிகிச்சை இதுதான்

குழந்தை எப்பொழுது பார்த்தாலும் அழுதுகொண்டேயிருந்தால் அதன் தேக நிலை சரியாயில்லை என்றுதான் அர்த்தம். பிடிவாதத்திற்கும், கோபத்திற்கும் இதுவே காரணமென டாக்டர்கள் சொல்கிறார்கள். குழந்தையின் ஆகாரத்தில் சத்துக்களில்லை. இவற்றை உடனே சட்டை செய்யவேண்டும்.

இந்தத் துறையில் நீண்டகாலமாகப் பிரவித்தி பெற்றது ஸ்காட்ஸ் எமல்ஷன்.

பூராவும் பலவிருத்தி.

ஸ்காட்ஸ் எமல்ஷன் பூராவும் பலவிருத்தி யூட்டுவது. சாதாரண காட்லிவா ஆயிலையும், இதர விட்டமின் 1 க்களையும சாப்பிட்டால் அதிகப்படியான கால்ஷியம முதலியவற்றையும் உட்கொள்ளவேண்டும. பெரியவர்களுக்கும் சரி, குழந்தைகளுக்கும் சரி, ஸ்காட்ஸ் எமல்ஷன் சிறந்த பலவிருத்தி ஔஷதம்; நோய்க்குப் பிறகு ஏற்படும் எல்லாவிதமான பலவீனத்திற்கும், இருமல் ஜலதோஷம், இன்புளுவென்சா முதலியவாற்றிற்கும் இது சிறந்த பாதுகாப்பாகும; 60 வருஷ புகழ்பெற்றது.

பெற்றோர்களுக்கு சில குறிப்புகள்:—

எலும்புக்கு வலுவூட்டும் ஸ்காட்ஸ் எமல்ஷன்

வெண்ணெய் அல்லது சுத்தப் பாலை விட 80 மடங்கு அதிகப் பலனளிப்பது.

முட்டையைவிட இருமடங்கு அதிகப் பலன் தருவது.

தேக வளர்ச்சிக்கு,

வெண்ணெயைவிட 8 பங்கு அதிகப் பலன் தருவது.

அன்னாசிப் பழத்தைவிட 100 பங்கு பலன்.

SCOTT'S Emulsion

சுத்த காட்லிவர் ஆயில் சேர்ந்தது.

மொத்த டிஸ்டிரிபியூட்டர்கள்:—இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்டிரீஸ் (இந்தியா) லிமிடெட். கல்கத்தா பம்பாய் - மதராஸ் - லாகூர் - ரங்கூன் - கொழும்பு - கான்பூர் - பாடலீபுரம் ஆமதாபாத் - கொச்சி - கள்ளிக்கோட்டை - விசாகப்பட்டணம் - காராச்சி - அமிருதசரஸ்.

S 50

தன் காரணத்தினல் சொற்ப காலம் பூவல்லிக்குத் திரும்பிக் காலத்தைக் கழித்தார். அங்கும் தமது தேக ஸ்ரகம் கெடவே இவர் மயிலாப்பூருக்குத் திரும்பினர் கொச்சியில் இவர் சுமார் ஆறு வருஷ காலம் ஆசிரியராக விருந்தார். அங்கு இவரிடம் அநேகர் படித்தனர். அங்கும் சிஷ்யர்களும் இதர ஆசிரியர்களும் இவரை மிகுந்த விசுவாசத்துடன் பாராட்டி வந்தனர். 1916-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இவரை "மஹா மஹோபாத்யாயர்" என்னும உயர்ந்த பட்டத்தால் கௌரவித்தனர். மலையாளத்தில இவர் 1920-ம் வருஷம் வரையில் இருந்தார்.

மைசூர் சமஸ்தான அழைப்பு

1920-ல் நம் மஹா மஹோபாத்யாயருக்கு மைசூர் சமஸ்தானத்திலிருந்து அழைப்பு வந்தது இவர் மைசூர் மஹாராஜா சம்ஸ்கிருத கலாசாலையில் வேதாந்த சாஸ்திர ஆசிரியராக அதிகச் சம்பளத்தில் நியமிக்கப்பட்டார். இவரும் அந்த நியமனத்தை ஸ்வீகரித்துக்கொண்டு மைசூருக்குச் சென்றார். இங்கு இவர் "மஹாவித்வான்" என்ற பிருதத்துடன் பிரதி வருஷம் 144 ரூபாய்கள் சம்மானம் மைசூர் அரசரால் கொடுக்கப் பெற்று வநதார். இத்தகைய சன்மானம் மிக உயர்ந்த பண்டித மணிகளுக்குத் தான் கொடுக்கப்பட்டு வருவதாகும். மைசூர் மஹாராஜாவும் இவர்களிடம் தத்துவ விஷயங்களை அடிக்கடி விசாரம் செய்து வருவதுடன் இவர்களிடத்தில் அதிகக் கௌரவத்தைக் கொண்டாடிவந்தார் மஹாராஜா இவருக்கு மிகச் சிறந்த "பண்டிதரத்னம்" என்ற பிருதுவையும் அதன் அறிகுறியாக நவரத்னங்கள் அமைக்கப்பெற்ற விலையுயர்ந்த ஒரு தோடாவையும் வழங்கினர். அச்சமயம் இவருக்கு இப்பேர்பட்ட பிருதுவை தாம் நேரில் கொடுக்கும் பாக்கியத்தைப் பெற்றதற்கு சந்தோஷிப்பதுடன், இதுவரை இம்மாதிரி தாம் ஒருவருக்கும் இதை நேரில் வழங்கியதில்லை எனவும் மஹாராஜா சபையில் பேசினர்; தவிர அவர் இப்பண்டிதரத்தினத்தின் மஹனீய குணங்களையும் பலவாறு சிலாகித்தார். இம்மஹா மஹோபாத்யாயர் மைசூரில் இருக்கும்போது தனியாக ஓய்வு நேரங்களில் அநேக வித்யார்த்திகளுக்கு வித்யா தானம் செய்துவந்தார். வேதாந்தத்தில் இவர் கல்பதரு, பரிமளம், பஞ்சபாதிகா விவரணம் முதலிய கிரந்தங்களையும், அபூர்வமானவையுமான கிரந்தங்களை சிஷ்யர்களுக்குப் போதித்து வந்தார். இவரிடம் அப்போது படித்த நாராயண சாஸ்திரிகள் என்பார் அந்த மஹாராஜா கலாசாலையில் ஆசிரியராக இருந்து வருகிறார். 1924-ல் மஹாமஹோபாத்யாயர் தமக்கு வயது அதிகரித்துக்கொண்டு வந்ததை யுத்தேசித்து, மைசூர் கலாசாலை பதவியிலிருந்து விலகிக்கொள்ள நிச்சயித்துவிட்டார்; தமக்கு 69 வயது முடிந்துவிட்டபடியால் அவர் தமது நிச்சயத்தையும் நிறைவேற்றி வைத்தார்.

எழுதியும் பிரசுரிக்கப்படாத கிரந்தங்கள்

இவர் மைசூரிலிருந்து விலகிய காலத்தில இவரை மீண்டும் மயிலாப்பூர் சம்ஸ்கிருத கலாசாலையில் கௌரவ அத்யாபகர் என்றுவது கொண்டு வந்து இவரது ஆச்சர்யமான பாண்டித்யத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பிரஸிடென்ஸி காலேஜ் சம்ஸ்கிருத பண்டிதர் ப்ரும்மஸ்ரீ எஸ். கே. பத்மநாப சாஸ்திரிகளும், சம்ஸ்கிருத காலேஜ் அத்யாபகர் ப்ரும்மஸ்ரீ ராமச்சந்திர தீக்ஷிதாவர்களும் மிக முயற்சித்ததுண்டு இவர்களது முயற்சிக்கு சிருங்கேரி மடாதிபதிகளால் முற்றுப்புள்ளியிடப்பட்டது. ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குருக்கள் இவர் விச்ராந்தியை அடைய வேண்டுமென்பதை நிப்பந்தமாகத்தடுத்து, பெங்களூரில் இருக்கும் ஸ்ரீசங்கர மடத்திற்கு இவர் வர வேண்டும் என்று நியமனம் செய்தார்கள். இவர் இதை மறுக்கமுடியாமல் பெங்களூரில் இருக்கலானர். சுமார் ஒரு வருஷகாலம் தான் இவர் பெங்களூரில் இருந்தார்.

இவர் சில கிரந்தங்களையும் எழுதி வைத்தார். அவை ஒன்றும் இப்போது அச்சிடப்படவில்லை. இவர் எழுதிவைத்திருக்கும் ந்யாயபாஸ்கரக்கண்டனமானது, ப்ரஹ்மாநந்தியத்திலமேல் மைசூர் அனந்தாழ்வான் இயற்றியநியாயபாஸ்கரம் என்ற கிரந்தத்தைக் கண்டிப்பதாகும் ஜகத் சத்யமா அல்லது மித்யையா என்பதுதான் இப்புத்தகத்தில் விவாதிக்கப்பட்டிருக்கும பிரச்னையாகும். இவ் விஷயத்தில் தர்க்க ரீதியை அனுசரித்திருப்பதுதான் இப்புத்தகத்தின் முக்கியாம்சமாகும். "சதகோடி" என்கிற சிறந்த கிரந்தத்தில் இவர் "ய ஆத்மா அபஹதபாப்மா" எனும் ப்ருஹ ஸூத்திரத்திற்கு நூறு அர்த்தங்கள், நூறு பூர்வ பக்ஷங்கள், நூறு சமாதானங்கள் ஆகியவற்றை தர்க்க ரீதியாகவே எடுத்துக் காட்டியிருக்கிறார். இவர் சிவபாராம்யத்தைப் பற்றியும் ஒரு புத்தகம் எழுதிவைத்திருந்தார். மற்றும் சில ஸ்தோத்ரங்களையும் இவர் இயற்றினர். தற்போது இவரது ந்யாய பாஸ்கரக் கண்டனம் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடத்தில் ஸ்ரீகார்யமாக விருக்கும் இவரது சிஷ்யரான ப்ரும்மஸ்ரீ லக்ஷ்மீ நாராயண சாஸ்திரிகளிடம் இருக்கிறது. "சிவபாரம்யம்" மைலாப்பூர் சம்ஸ்கிருத கலாசாலை புத்தகாலயத்தில் இருக்கின்றது. பல வருஷங்களுக்கு முன்பு மயிலாப்பூரில் கும்பகோணம் அத்வைத சபையின் வார்ஷிக நடவடிக்கைகள் நடைபெற்றபோது இவர் இங்குவந்தார். இவருக்கு அப்போது பரீக்ஷகர்களுக்குரிய விசேஷ சன்மானங்கள் செய்யப்பட்டன. ஆனல் இத்தகைய மரியாதைகளுக்குத் தாம் உரியவர் அல்லர் எனச் சொல்லி சபையோர் முன்பு தாம் எழுதிவைத்திருந்த "சதகோடி" யை வாசித்து அவர்களைச் சந்தோஷிக்கச்செய்தார்.

கும்பகோணம் அத்வைத சபைக்கூட்டத்தில் ஒரு முறையும் 1918-ல் சிதம்பரம் அத்வைதசபை சம்மேளனத்திலும் கலந்துகொண்டு "சிவோத்கர்ஷ" த்தைப்பற்றிப் பிரசங்கித்தார். இவ்விரண்டு சந்தர்ப்பங்களைத் தவிர இதர சமயங்களில் இவர் கலந்துகொண்டதாகத் தெரியவில்லை. இவர் தாம் எழுதி அச்சிடப்படாத கிரந்தங்களையும் தமது சிஷ்யர்களுக்குப படிப்பதற்காகக் கொடுத்துவிடும ஸ்வபாவத்தையுடையவர். இவருக்கு எல்லா மரியாதை பலன்களும் கிடைத்தனவாயினும், "சிஷ்யாத் இச்சேத் பராபவம்" என்பது மட்டும கிடைக்கவில்லை என்பது இவருடைய சிஷ்யர்களின் துணிபு

அநேக சிஷ்யர்கள்

இவரிடம் அநேகர் படித்தனர். இவரது இதர சிஷ்யர்களுள், பிரஸிடென்ஸி காலேஜ் சமஸ்கிருத பண்டிதர் வேதாந்த விபூஷணம் பண்டித ராஜ. பத்மநாப சாஸ்திரிகளையும், கல்கத்தா சர்வ கலாசாலை சமஸ்கிருத அத்யாபகர் மஹாமஹோபாத்யாய நூரணி அனந்தகிருஷ்ண சாஸ்திரியாரையும், மயிலாப்பூர் சமஸ்கிருத காலேஜ் வேதாந்த ஆசிரியர் கல்பாதி லக்ஷ்மண சாஸ்திரிகளையும், மைசூர் சமஸ்கிருத காலேஜ் தர்ம சாஸ்திர போதகரான பாலக்காடு சிவசுப்ரமண்ய சாஸ்திரிகளையும். திருப்பதி மஹந்து கலாசாலையில் வேதாந்த மீமாம்ஸங்களின் அத்யாபகரான திருக்கழுக்குன்றம் வேங்கடேச தீக்ஷிதரையும், திருப்பணித் துறை லர் ராமவர்மா சம்ஸ்கிருத காலேஜ் வேதாந்த ஆசிரியர் வடக்கஞ்சேரி கிருஷ்ண சாஸ்திரியாரையும் குமாரபுரம் வெங்கடகிருஷ்ண சாஸ்திரியாரையும், மயிலாப்பூரில் படித்தவர்களுள் குறிப்பிடவேண்டும். திருப்பணித் துறையில் சுமார் 20 வருஷங்களுக்கு மேல் அங்கிருக்கும் காலேஜில் தர்க்கம் சொல்லிக்கொடுத்து 'தார்க்கிக திலகர்" என்ற பிருதுவுடன் கூடிய மான் திட்ட குஞ்சு நம்பூதிரி இவரிடம் சித்தாந்த ப்ருஹ்மாநந்தீயம் ஆகியவற்றைப படித்தார். அங்கு கொச்சி ஆஸ்தான பண்டிதர் ஆர். சுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள் மஹாமஹோபாத்யாய சடகோபாச்சார்யரிடம் தர்க்கமும் திருவையாறு பாலகிருஷ்ண சாஸ்திரிகளிடம் வேதாந்தமும் படித்து இவரிடம் சில பாஷ்ய கிரந்தங்களையும், ஸித்தி, பிரும்மாநந்தீயமும் படித்தவர். பெரிய தர்க்க பண்டிதரான பல வாக்களை வித்வான் நம்பூதிரியும் இவரிடம் வேதாந்த பாடம் கேட்டார். மற்றும் தனிமையாகப் பல சிஷ்யர்களும் இவரை அண்டியதுண்டு.

இவ்வாறு மஹாமஹோபாத்யாய பண்டித ரத்ன பஞ்சாபகேசசாஸ்திரிகளிடம் அநேகர் படித்து விருத்தி யடைந்துள்ளனர். பெங்களூர் ஸ்ரீ சங்கர மடத்திற்கு வந்த சொற்ப காலத்திற்கெல்லாம் இவரது தேகஸ்திதி குறைந்துவிட்டது. ப்ரும்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய சாஸ்திரிகள் 1925-ம் வருஷம் அக்டோபர் மாதம் பெங்களூரில் தமது 70-வது பிராயத்தில் சிவபதமடைந்துவிட்டார். இம்மஹானின் தேகவியோகத்தினல் நமது பாரத கண்டம் ஒரு அரிய ஜோதியையும், எப்போதும் காணக்கிடைக்காத சிறந்த வித்யா நிதியையும் பறிகொடுத்தது எனச் சொல்ல வேண்டும். இப்பெரியார் போன்ற மேன்னதமான புருஷர்கள் நம்மிடையே தோன்றியதால் கலாபிவிருத்தியும், சாஸ்திரீய ஞானமும் அதிகமாக வளர்ந்தன!

CASTOROL
வாசனைமிகுந்த விளக்கெண்ணெய் விசேஷ சேர்க்கையானது. இதையே கேட்டு வாங்குங்கள்.
தயாரிப்பவர்கள்:—
கல்கத்தா கெமிக்கல் கம்பெனி, லிமி.
H O 2

ரேகை சாஸ்திரம்

1 2 3 4 5 6

கைகளின் அமைப்பும் மனோ நிலையும்

"சக்திதாஸன்"

ஒருவருக்கு ரேகை பார்ப்பதாயினும், அல்லது நம்மிஷ்டத்துக்கு நண்பர் அல்லது உறவினர் ஐக்கப்பார்க்க வேண்டுமென்றிருந்தாலும், முதலாவது கவனிக்க வேண்டிய விஷயங்கள் சில உள். நடக்கும்போது கைகளை உபயோகிக்கும் தன்மையையும் பிறகு இரு கரங்களையும் கோர்த்து, நிறம், சாமான்யமாய் விரல்கள் வளையக்கூடியதா என்றும் அறிய வேண்டும். மனோபாவம் கண்களிலும் கைகளிலும் பிரதிபலிக்கிறது. மனோதர்மம் இத்தகையதென்பதை நடக்கும்போது கை வைத்திருப்பதைக் கொண்டு திட்டமாய் அறிந்து விடலாம். மாசற்ற மனமுடையவர் இருகைகளையும் திறந்தபாவனையில் சிறிது வீசிக்கொண்டு நடப்பார். மனத்திலுள்ளதை மறைத்துக்கொள்ள விரும்புவோர் கைகளை மூடிக்கொண்டு நடப்பர். மனம் தனதெண்ணத்தைக் காட்டக் கூடாதென்ற உணர்ச்சியுடைவதால் விரல்கள் மடக்கிக் கொள்கின்றன. இதனால் மனிதர்களின் அந்தரங்கம் புலப்படும்.

முதல் படத்திலுள்ளபடி இரண்டு கரங்களையும் மூடிக்கொள்ளும் தன்மையுடையவர் ஜோஸியம், ரேகை பார்த்துக் கொள்வது அபூர்வம். ஏனெனில் அன்னார் வாழ்க்கையில் பாவ புண்ணியம் கலந்திருக்கும். ஒருக்கால் ரேகை பார்த்தாலும் நல்ல பலன்களை மாத்திரமே கேட்க இச்சையுள்ளவராயிருப்பார். நடந்தவைகளை சொல்லாதிருந்தால் திருப்தி கொடுக்கும். ஆனால் ரேகை பார்த்து பலனைச் சொல்ல ஆரம்பித்துவிட்டால் இரண்டுமே விளங்கும். அருள்வாக்குடையோர் யாவற்றையும் கண்டதுபோல் சொல்லிவிடுவர். இரண்டு கரங்களையும் மறைத்திருப்பதால் தங்கள் ரகஸ்யமான துர்க்கிருத்தியம் வெளியிட இஷ்டப்படாதவர் என்பதைக் குறிக்கும்.

இரண்டாவதுபடத்திலுள்ள கரங்களைக் கவனியுங்கள் விரல்கள் பாதிமூடியும் மூடாமலுமாயிருக்கின்றன. கரங்கள் உடலொட்டியபாவனையிலிருக்கும். இவரது எண்ணம் ஒளிவு மறைவற்றதாயிருப்பினும், முடிவானதாயிராது. ஆயினும் அதிக ஜாக்கிரதையுள்ளவர். இத்தகையோரை நம்பலாம். தெரிந்ததைத் தவிர தெரியாததைப்பற்றிப் பேச மாட்டார்.

பொதுவாய் ஒருவர் கைகளைச் சிறிது நேரமாவது கவனிக்க வேண்டும். பலமுள்ளதா பலகீனமானதா, அவைகள் உத்வேகம் கொண்டதா, அடிக்கடி இடம் மாறுகிறதா என்ற அம்சங்களைக் கவனிக்கும்போது கைகளுக்குக் கண்கள் இருப்பதுபோல்புலனாகும். கைகள் அசைவதைக் கவனிக்கில், பேசுவது போலுமாகும். ரேகைகளைப் பார்ப்பதற்கு இவை உதவியாயிருக்கும்.

இப்பொழுது மூன்றாவது படத்தைப் பாருங்கள். விரல்கள் திறந்த பாவனையிலிருக்கின்றன. இது மனோ உறுதியற்ற தன்மையையும், ஒரு வகையிலும் பிடிப்பில்லா நடவடிக்கையையும் குறிக்கும். இத்தகையோரிடம் அந்தரங்க விஷயங்களைத் தெரிவிப்பது ஆபத்துக்கிடமாகும். திடசித்தமில்லாததால் சோம்பலுள்ளவருமாவர். எதைப் பற்றியும் யோசித்துப் பார்க்கக்



7 8 9 10 11 12

கூட சிரமம் எடுத்துக் கொள்ளார். தன்னடக்கமற்றவராதலால் மற்றோர் நல்வார்த்தைகளும் சல்லடை நீர்போலாகும். படம் இரண்டும் மூன்றும் கைதிறந்த பாவனையாதலால் இவர்களிடம் செல்வம் நில்லாது. விரயமாகும். இரண்டிலுள்ள கை செலவிடுவதில் யோசனையுண்டு. மூன்றுவதோ கைப்பணம் நீர்போலாகும்,

இனி நாலாவது படத்தின் கைகளைப்பார்ப்போம். விரல்கள் நன்றாய் மடக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட தீர்மானத்தில் மனம் அழுந்தி ஆலோசனையிலிருப்பதைக் குறிக்கிறது. கை கெட்டியான மணிக்கட்டோடு முஸ்தீப்பாயிருப்பதால் ஒரே விஷயத்தைப்பற்றிய யோசனை யென்பதும் இதர சங்கல்பம் சிந்தைக்குட் செல்ல இடமில்லை யென்பதும் விளங்கும். விரல்களை சாமான்யமாக் மூடிக்கொண்டிருந்தாலும்கூட ஒரே குறிப்பு-தீர்மானம்—உள்ளவர் என்பதைப் புலப்படுத்தும். கை விரல்களை உள்ளங்கையில் அழுத்திக் கொண்டிருந்தால் உத்வேகம்—ஆவேசம்—உள்ளவர் என்பதைக் குறிக்கும் ஆனால் இது காலத்துக்குட்பட்டு சமயோசிதமாயிருக்குமன்றி வழக்கத்திற்குட்படாது

ஐந்தாவது படத்திலுள்ள கைகள் அந்தரமாயிருக்கின்றன. படபடப்பான யோசனையும், எதையும் அதிசீக்கிரம் செய்யவேண்டுமென்ற எண்ணமுள்ளவர். கூர்மையான புத்தியுள்ளவர். எவ்வளவு மெதுவாய்ப் பேசினாலும் நுட்பமாய்க் கேட்டிடுவர். மிக்க உணர்வுடையவர்.

ஆறாவது சித்திரத்தைப் பாருங்கள். இரண்டு கரங்களும் குறிப்பிட்ட விடமில்லாமல் மேலும் கீழுமாக் அசைந்த வண்ணமாயிருக்கின்றன. ஒரு முறை சட்டை பாக்கட்டுக்குள் அல்லது அங்கவஸ்திரத்துக்குள் கைகளை சற்று நேரம் மறைத்துக் கொள்வர். துண்டு முனையைப்பிடித்துக்கொள்வது அல்லதுகடியாரச் சங்கிலியைத் தொட்டுக் கொள்கிறது—இவ்வகளெல்லாம் நிலையிலா நெஞ்சத்தைக் குறிப்பிடுகின்றன: திடீரென வேகமான எண்ணமுதக்கும். அடக்கியாளும் மன்மாவது புத்தியாவது இராது. இத்தகையோருக்கு கடின சித்தமுடைய மற்றவர்கள் வழிகாட்டவேண்டும். என்றும் நன்னடத்தையும் யோக்யமுமுள்ளவராவர்.

இரண்டு கைகளை முன்னால் நீட்டியிருக்கும் ஏழாவது படத்தைப் பாருங்கள். இத்தகையோர் முன் எதையேனும் கைக்கு நெருக்கமாயக் கொண்டு போனால் தொடாமலே உடனே கைகளை உள்ளடக்கிக் கொள்வார். உயிர்ப்புள்ள விரல்களாயினும் இடம் மாறிக் கொண்டேயிருக்கும். தன்னைப் பற்றி மற்றவர் என்ன நினைக்கிறாரோவென்ற சந்தேகமுள்ளவர். சுற்றும் முற்றும் பார்க்கும்போதும் சந்தேகத்தோடே கவனிப்பார். இத்தகையோர் அதி ஜாக்கிரதையும், கூர்ந்து கவனிக்கும் தன்மையுமுடையவர். ஆராய்வதிலேயே புத்தி நாட்டமுள்ளதாயிருக்கும்.

இரண்டு கைவிரல்களை நன்றாய் மடக்கி வேகங் காட்டி நடக்கும் பாவனையிலிருக்கும் எட்டாவது சித்திரத்தைப் பாருங்கள். இம்மாதிரி மனிதரை சாதாரணமாய்ப் பார்க்கலாம். எதைச் சொன்னாலும் தர்க்கம் செய்து மறுத்துப் பேசுவார். இத்தகையோரிடம் உறுதியாய்ப் பேசி சொன்னதையே நிலைநிறுத்தவேண்டும்.

இரண்டு கைகளையும் ஒன்றுக்குள் ஒன்றாய் கைகழுவும் பாவனையில் மாற்றிக்கொண்டிருக்கும் ஒன்பதாம் சித்திரம் கவனிக்கத்தக்கது இவர் பேசும்போதே முழுப் பூசனிக்காயைச் சோற்றில்மறைப்பது போல் விவகரிப்பார். இவரிடம் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாது. பேசுவதெல்லாம் நம்பத்தகாததும், பொய்யாகவே இருக்கும். மிக்க ஆடம்பாத்துடனிருப்பர். மற்றவர்களிடம் குணதோஷங்களைக் கண்டு பேசுவதே வழக்கமாயிருக்கும்.

இடது காத்தை மறைத்து வலது காத்தை இடுப்புக்கு நேரே மேல் நோக்கி வைத்துக்கொண்டு, துடுக்கும் கர்வமுமுள்ளவர், மிக்க கம்பீரமாய் நடக்கும் பாவனை காட்டுவது பத்தாவது படம் இத்தகையோர் தன் காரியத்திலேயே கண்ணுள்ளவர் தன் கௌரவத்தைத் தளரவிடாமல் காத்துக் கொண்டு, தக்கோரிடம்சுலபமாய்பழகுந் தன்மையுடையவராயிருப்பர்

பெருத்து கனத்த கைகளையுடையது பதினோராம் படம் கைகள் நீண்டனவாகத் தோற்றுவது இத்தகையோருக்கு ஸ்தூல புத்தி அதிகம்: ஆழ்ந்த சிந்தனை இராது. இவருக்கு நல்லயோசனை சொல்லி உயர்த்தமுடியாது. தன் சுற்றத்தாரின் க்ஷேமாபிவிர்த்தியைக் கோரியவராயிருப்பர்.

பின் பக்கத்தில் இரண்டு கைகளையும் கோர்த்து வைத்துக் கொண்டு நடக்கும் பாவனையுடையது பன்னிரண்டாவது படம். இது ஆராயும் நோக்கம். எதெது நடக்க வெண்டும் எதெது கூடாது. என்பதில் மிக ஜாக்கிரதையோடுங்கூடிய கவனம் எதையும் குறிப்பிட்டுப் பார்க்குமுன் பூமியை நோக்குவர். சாந்தமும் களங்கமுமற்ற மனதுமுடையவர். தான் எதிலும அகப்பட்டுக் கொள்ளாது தற்காப்புக்குள்ள நுண்ணறிவுள்ளவர். இடுப்பில் இரு கைகளையும் வைத்துக்கொண்டு நடப்பது மிக்க அதித ஞானத்தையும் கம்பீரத்தையும் குறிக்கும் முக்கியமாய் முற்றுந துறந்த ஞானிகளும், இவ்வுலகை துச்சமாய் மதித்து தன்னலமற்று; பொதுஜனங்களின் க்ஷேமாபிவிர்த்தியைச் கோரும் இராஜீயவாதிகளும் இருகரங்களையும் தக்க சமயத்தில் இடுப்பில் வைத்துக் கொள்வர்.

இடுப்பில் இடது காத்தை மாத்திரம் வைத்து நடப்பது அதிகார தோரணையைக் காட்டும்.

மியூச்சுவல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி,
லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :
187, மவுண்ட் ரோட், மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்.

டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி.

10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்

(செயின் 1-க்கு)

ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்

(கேட்லாக் இலவசம்)

R. S. பிரகாசம் & Co,
அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்.
187, சைனா பஜார் ரோட். ஜி டி
மதறாஸ்.

டாக்டர் ஜம்மி வெங்கடாமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது
ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மஸி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்

சிறுவர் பகுதி

ஒட்டுக்கேட்டவன் பட்டபாடு

(ஸ்ரீமான் பி. ஏ. லக்ஷ்மண முதலியார்)

துரையப்பன் என்ற சிறுவனுக்கு ஓர் பெரும் துர்க்குணம் இருந்தது. பிறர் பேசுவதை ஒட்டுக்கேட்பதென்ருல் அவனுக்கு வெகு பிரியம். அதற்காக இரவு முழுவதும் கண் விழித்திருக்க வேண்டுமானாலும் அவன் தயார். அவன் பெற்ருேர், எவ்வளவு கண்டித்தும் துரையப்பன் திருந்தாதது கண்டு மிகவும் துக்கித்தனர்.

ஓர் நாள் துரையப்பன் வீட்டிற்குப் பக்கத்துக்கிராமத்திலிருந்து ஓர் தனவந்தர் வந்தார். அவர் துரையப்பன் பிதாவுடன் சிறிது நேரம் தாழ்ந்த குரலில் பேசினுர். பிறகு இருவரும் ஓர் அறையில் புகுந்து தாளிட்டுக்கொண்டு தாழ்ந்த குரலில் சம்பாஷிக்கலாயினா.

துரையப்பன் வயிறு வெடித்தது. சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு அந்த அறையின் கதவிலிருந்த பூட்டு துவாரத்தில் காதை வைத்து உள்ளே பேசுவதைக் கவனிக்கலானுன். உள்ளிருந்தவர்கள் தாழ்ந்த குரலில் வார்த்தையாடியதால், துரையப்பன் காதில் ஒன்றும் சரியாக விழவில்லை. தன் காதை மேலும் மேலும் துவாரத்தில் அழுந்த வைத்துக் கவனிக்கலானுன். அப்போது திடீரென்று ஓர் பெரும் கூச்சலிட்டான். காதைப் பிடித்துக்கொண்டு ஓவென்று அலறினுன். உள்ளிருந்த இருவரும் ஒன்றும் தோன்ருது வெளியே ஓடி வந்தனர். சிறுவன் வலி பொறுக்கமாட்டாமல் கீழே விழுந்து புரண்டு புரண்டு அழுதுகொண்டிருந்தான். சிறுவனை என்ன நடந்ததென வந்தவர் வினவினுர்.

துரையப்பன் அவமானம், ஒரு பக்கம் வலி ஒரு பக்கம் உபாதிக்க, "நான் செய்தது பெரும் பிசகு. நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்று ஒட்டுக் கேட்கக்கதவில் காதைவைத்தேன். அவ்வளவுதான். சுரீர் என்று தாங்கமுடியாத வலி என் காதில் உண்டாயிற்று. நான என்ன செய்வேன்? ஐயோ அப்பா, அம்மா, தாங்க முடியவில்லையே" என்று கதறினுன்.

பிதா பூட்டின் துவாரத்தைக் கவனித்தார். அங்கு ஓர்பெரும் கருந்தேள் கொடுக்கைத் தூக்கிக்கொண்டிருக்கக் கண்டார். விஷயம் இன்னதெனத் தெளிந்தார்.

அப்பொழுது அவர் துரையப்பனை நோக்கிச் சொன்னுர்:—

"அடே துஷ்டா, ஒட்டுக்கேட்கும் துர்க்குணத்தை விட்டொழிக்க நான் எவ்வளவு சொல்லியும் நீ கருந்தவில்லை. ஆகையால், இன்று கடவுளே உன்னை இவ்விதமாகத் தண்டித்தார். இனியாவது ஒட்டுக்கேட்கும் துர்க்குணத்தை விட்டொழித்தால்தான் நீ பிற்காலத்தில் கண்ணியமுள்ள நல்ல மனிதனுக விளங்கலாம்."

அது முதல் துரையப்பன் இக் கெட்ட பழக்கத்தை விட்டொழித்தான்.



நீங்கள் நீராடும் அறைகளுக்கு
பளபளப்பான
வெண்மை ஸானிடெரி
அமைப்புக் கருவிகள்.

பர்ன்ஸ் பளபளப்பான வெண்மைக் கருவிகளில் சதுரக்கல்கள், வாஷ் பேஸின்கள், டப்ள்யு-ஸி-போன்றவைகள் எல்லா பிரதான ஸானிடெரி என்ஜினீயர்களிடமும் கிடைக்கும். இவையெல்லாம் இந்தியாவில செய்யப்படுவதுடன், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கருவிகளைவிட மலிவானவை.

படங்களுடன் கூடிய பிரசுரங்கள் வேண்டுவோருக்கு அனுப்பப்படும்.



தி பாட்ரீஸ், ராணிகஞ்சு
M/A. பர்ன் & கம்பெனி லிமிடெட், 12, மிஷின் ரோ, கல்கத்தா.
தென்னிந்தியாவிற்கு ஏஜண்டுகள் :
பம்பாய் கம்பெனி லிமிடெட், தபாற் பெட்டி 109, மதராஸ்.
B.N.K. 06

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு
[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]
குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.
குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானல்
இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.
Manager, Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD.

வெற்றி கிட்டியது

என மிஸ்டர்..........22-9 36உ ம்பாயிலிருந்து எழுதுகிறார்.

"தங்கள் "திபெத் மூலிகை"யால் தான் நான் மெட்ரிக் பரீக்ஷையில் தேறினேன்."

"திபெத் மூலிகை"யால் கீழ்க்கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.

வசீகரன் ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்ப மயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவா அதனாச்சரிய சக்தியை விரைவில் அறிவா. விலை ரூபா 3-8-0

2. வியாபாரமும், தொழிலும்:—நிச்சயமான தொழிலபிவிருத்தியும, இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0

3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0

4. வியாதிகள்:—முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவர்வா ஸ்திதிக்குத தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0 6 பரீக்ஷைகள்:- எவ்வித பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0

7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவா முன், முழந்தாளிட்டுப் பணிவர். விலை ரூபா 3-8-0

8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கை உள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்டமூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0, தபால் சார்ஜு வேறு. ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

BIJOYA LODGE, (S.M.W.)
P. O SALKIA HOWRAH.

ரூ. 500 இனாம்!

திமிர்குஷ்டமும், வெண்குஷ்டமும்.

உலகப் பிரசித்தி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதானாலுங்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனாம். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி.

SRI SWAMI & Co,
(34) Panchpota, Bengal.

உங்கள் குழந்தைக்கு

டோங்கரேயின்

பாலாம்ருதமும்

கோடுங்கள்

டோங்கரேயின் பாலாம்ருதம் என்பதென்ன?

1. டோங்கரேயின் பாலம்ருதம் குழந்தைகளுக்கான ஓர் சிறந்த டானிக்.

2. நீடித்த தொந்தரவான இருமலையும், சாதாரண ஜுரத்தையும் போக்குகிறது.

3 மெலிந்து கிடக்கும் குழந்தைகளுக்கு வலுவூட்டுகிறது.

4. பல முறைக்கையில குழந்தைகளுக்கு உதவி செய்கிறது.

மதராஸ் ஏஜண்டுகள்:

ஏ. பி. பரேக், 268 சைனா பஜார் ரோட்.

வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்து பணத்தை மீதி செய்யலாம்!

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு ரக மோஹினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்கு சிறந்த வாசனை எண்ணெயாகும். விலையோ மிகவும் குறைவு.

சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்.

சாம்பாக்	ரூ. 2-0	போகுல்	ரூ. 1-8
காஷ்	,, 2-0	ஹீனு	,, 1-8
கேவ்டா	,, 2-0	லில்லி	,, 1-0
மஸ்க்	,, 2-0	தாமரை	,, 1-0
கதம்பம்	,, 1-8	கோலோன்	,, 1-0
மல்லிகை	,, 1-8	மோத்தியா	,, 1-0
ரோஸ்	,, 1-8	ஸ்வீட்	,, 1-0

அரை அவுன்ஸ் பாட்டில்களாகக்கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ், வி. பி. செலவு வேறு.

S. PAUL & Co., Perfumers,
(Dept. S. W.) 4, Hospital Street,
Dharamtola, Calcutta.

கொசு வலைகள்.

பிரத்யேக வலுவான வெள்ளை வலைகளானவை. நல்ல தையல், நீடித்துழைப்பவை. வெளுத்த பச்சை, நீலம், சிகப்பு, மஞ்சள் முதலிய பல கலர்களிலும் கிடைக்கும். வெள்ளையா கலரா என்பதைக் குறித்தெழுக.

நீளம் அடி	அகலம் அடி	உயரம் அடி	சாதா ரூ.	உயர்ந்தது ரூ.	மோனது ரூ.
6	3½	3½	1-4	1-8	2-4
6	4	4	1-8	1-12	2-6
6½	4½	4½	1-12	2-4	2-12
7	5	5	2-4	2-12	3-4
7½	6	6	2-12	3-4	4-4

தபால் செலவு தனி. பாக்கிங் இலவசம். இலவசம் ஏககாலத்தில் மூன்று வலைகள் வாங்குவோருக்கு 6X4X4 வலை ஒன்று இலவசம்.

Bally Mosquito Net Factory,
P. O. Bally Dist. HOWRAH.

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதகம் விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, இந்தியா

சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டுப்பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலிஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பில் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட்விலை ரூ 1-4 கேட்லாக் இனாம்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.

ராதா

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கைக்குள்ளே போட்டிருக்கிறேன். சும்மா வீண் முறுக்கு செய்யவேண்டாம்.

நான்:—அடீ, இந்த ஒட்டியாணம் உனக்கேது?

அவள்:—ஏது வார்த்தை மிஞ்சுகிறது! தங்களிடம் சொல்லவேண்டிய அவசியமில்லை. போலீஸ் முறுக்கைப் பொட்டணம் கட்டி வையுங்கள்.

நான்:—அடீ, இது களவு சொத்து. இதை நீ எங்கே திருடினாய்? உன்னை அரஸ்டு செய்வேன். என்ன சொல்லுகிறாய்?

அவள்:—ஓய் இன்னொரு தரம் சொல்லும். நான் திருடியா? ஆயிரம் பிரபுக்களும் ராஜாக்களும் என்னிடம் வருவார்கள். யாரேனும் ஒருவர் கொடுத்திருப்பார் நீர் என்னைத் திருடியென்று எப்படிக் கேட்கலாம்? ஜாக்ரதையாய்ப் பேசும். என்னைத் தெரியுமா!

நான்:—உன்னை இப்போதே அரஸ்டு செய்திருக்கிறேன்.

அவள்:—என்னை அரஸ்டு செய்ய உம்முடைய தாத்தா வாலுமுடியாது. என்னைத் தொடும்; ஒரு கைபார்க்கிறேன். தொட்டால் உம்முடைய கையை வாங்கிவிடுவேன். ஆளைச் சுற்றிப் பார்க்கவில்லையோ! என்று என் முறுக்குக்கு மேலே பெரிய முறுக்குச் செய்து கொண்டு வந்தாள். எனக்குக் கோபம் மூக்கு முட்டிவிட்டது.

அப்பாஜிராவ்:—மிஸ்டர் பயங்கரஸாமி, போலீஸ் முறுக்குக்கு தாஸி முறுக்குத்தாழ்வென்று எண்ணினீர்கள்? பிறகு?

பயங்க:—இதற்குள் ரெயில் ஈரோடு ஜங்ஷன் வந்துவிட்டது. உடனே தாசியை அரஸ்டு செய்து, ஸ்டேஷன் மாஸ்டரிடம் அத்தாட்சி வாங்கிக்கொண்டு பாற்கடலுக்கு வந் [illegible] பின்பு தாசி முறுக்கெல் [illegible] தங்கக்கம்பி போ [illegible] ள்! நயமும் பயமு [illegible] நெருங்கிக் கேட் [illegible] தனக்கு அந்த [illegible] தைப் பாற்கடல் [illegible] தண்டபாணி [illegible] டுத்ததாய்ச் [illegible] சொல்லவே [illegible] சாஸ்திரி [illegible] தாபார்த்து, தண்டபாணி வீட்டைப்பூட்டி முத்திரை வைத்துவிட்டேன். மறுநாள் சாஸ்திரிகள் வந்து ஒட்டியாணம் தன்னுடையதென்று ஒப்புக்கொள்ளவே, தண்டபாணி வீட்டைச்சோதனை போட்டோம்.

நந்த:— அங்கே யேதாவது கிடைத்ததா?

பயங்:—அங்கே ஒரு வெள்ளிப் பஞ்சபாத்திரமட்டும் கிடைத்தது. உடனே தண்டபாணியைப் பிடித்து அடைத்துக்கொண்டு எங்கள் கை மருந்து ஒன்றுண்டே! அதாவது—கொஞ்சம் தண்டப்பிரயோகம் செய்யவே, பயல் உள்ளதைச் சொல்லிவிட்டான்.

நந்த:—என்ன சொன்னான்?

பயங்:—சென்ற வருஷம் கொள்ளைக் குறிச்சிச் சிங்கக்குட்டித் தேவன் என்னும் ஒரு பிரபல துஷ்டன் நச்சு முதலியிடம் அந்த ஒட்டியாணத்தையும் பஞ்சபாத்திரத்தையும் பூஜைச் சாமான்களையும் கொண்டு வந்து ரகஸ்யமாய்க் கொடுத்ததாயும், அவற்றை நச்சு முதலி அடக்கமாய் அலமாரியில் வைத்துப் பூட்டியதாயும், தான் பஞ்சாமிர்தத்திற்கு ஒன்றும் கொடுக்க வில்லையென்றும் பாதி உண்மையைக் கக்கிப் பாதியை விழுங்கி விட்டான். உடனே அவனையும், தாசியையும் சொத்துக்களுடன் மாஜிஸ்திரேட்டினிடம் ஒப்புவித்துவிட்டு, நேற்றிரவே இவ்விடம் வந்து, தங்கள் வீட்டையும் முத்திரை போட நினைத்தேன். ஆனல்—

அப்பாஜி:—பெரிய மனுஷாள் வீட்டை இவனுக்காக முத்திரை போடுவது முறையல்லவென்று நான்தான் நிறுத்திவிட்டேன்.

பயங்:—ஸார் முதலியார்வாள், இதோ இருக்கிற சாமான்களைப் பார்த்தீர்களா? இந்த மனுஷன் தங்கள் வீட்டில் தினசரி பூஜைசெய்த சாமான்கள்தானே இவை?

நந்த:—ஆக்ஷேபனை யென்ன? நீங்கள் கட்டுப்பாடு செய்தீர்களென்று நான் நினைக்கவும் கூட வில்லையே?

பயங்:—தங்கள் மனச் சாக்ஷிக்கு உண்மையென்று தோன்றினல் தாங்களும் இந்த அத்தாட்சியில் ஒரு கையெழுத்துப் போடுங்கள்.

என்று சொல்லவும் நந்தகோபர் அத்தாட்சியை வாங்கி வாசிக்கும்பொழுதே, மூலையிலிருந்த நச்சுமுதலி, "கையெழுத்துப் போடவேண்டாம்" என்ற கருத்துடன் நந்தகோபரைப் பார்த்துக் கண்ஜாடை செய்தான். இதை நந்தகோபர் சூதாய்க் கவனியாமல் கேஸ் உண்மை யென்று நம்பிக் கையொப்பமிட்டார்.

பயங்:—ஸார், அத்தாட்சி சரிதானே!

நந்த:—எல்லாம் உண்மை யென்றுதான் நினைக்கிறேன். எனக்குப் பேசவாயில்லை! ஆயினும் எனக்காக இந்த ஒரு தபாக் காப்பாற்றவேணும். இவர் எனக்குப் பெண் கொடுத்த மாமனர். அவன் மகன் என் பெண்ணைக் கட்டிய மருமகன். நான் வேறே என்ன சொல்வேன்!

பயங்:—ரொம்ப விசேஷம்! இந்தப் பூலோகத்தில் தங்களுக்கு வேருெரு பெண்ணும், தங்கள் குமாரத்திக்கு வேருெரு மாப்பிள்ளையும் பஞ்சமாய்ப் போய்விட்டதா?

நந்த:—(இப்பொழுதுதான், தன் மனைவி அநந்தகல்யாணி சொன்ன புத்திமதியை நினைந்து, கண்களில் ஜலம் ததும்ப) ஏதோ, என் புத்தியைக்கடன் கொடுத்துவிட்டேன்! இனி என்ன செய்யலாம்! (என்று முணுமுணுத்து வெட்கத்தால் தலைகவிழ்ந்து) நண்பர்களே, நான் இதுவரை மரியாதையாய்ப் பிழைத்தவன். வம்பு தும்புக்குப் போகாமல் ஒதுங்கிப் பிழைத்தவன். என் மரியாதையை இந்த ஒரு தபா எனக்குக் காப்பாற்றித் தந்தால் கோடி கோடி புண்ணியமுண்டு! என் குழந்தை ராதா சகியாள்! மிகவும் மானி! கேட்டால் உயிர்வைத்திராள்! (என்று நச்சுமுதலியாரை நோக்கி) பாவி! பாவி! மோசம் போனேனே!

பயங்:—ஸார், வருந்தவேண்டாம். எனக்கும் தங்களைப் போல் பெண்ணும் பிள்ளைகளுமுண்டு. தங்கள் குமாரத்திக்காகத் தங்கள் மருமகனை வேண்டுமானல் காப்பாற்றித் தருகிறேன். அவனும் எனக்கு சாக்ஷிசொன்னல் அப்படிச் செய்கிறேன். ஆனல் இந்த மனிதன் விஷயத்தில் நீங்கள் தலையிடப்படாது. நீங்கள் கையொப்பம் வைக்கும் போது இவன் கண்ஜாடை செய்ததைக் கண்டீர்களா?

நந்த:—அதை நான் கவனிக்கவில்லையே?

பயங்:—நீங்கள் கவனிக்காததைக் கண்டே நான் தங்களை ஒரு ஸாது என்று தீர்மானித்தேன்.

நந்த:—என் மருமகனையாவது காப்பாற்றுங்கள். என் மாமனர் இவரை இம்சை செய்யாமல் கூட்டிக் கொண்டு போகும்படி ஒரு விண்ணப்பம்மட்டும் செய்து தங்களைக்கும்பிடுகிறேன்!

அசல் புளூ ஜாகர்
வைரங்கள்
இயற்கை முறையில்
உற்பத்தி செய்யப்பட்ட
(CULTURE)
நல்முத்துக்கள்
கிடைக்குமிடம்:
சிமன்லால் பிரதாப் சந்த்
175, சைனபஜார், மதராஸ்.

பயங்:—அந்தக் கவலை வேண்டாம். போய்வாருங்கள் என்று விடைகொடுக்கவும் நந்தகோபர், நச்சு முதலி முகத்தையும் எறிட்டுப் பாராமல் "இந்தப்பாவி யொருவனால் என் குடி முழுதும் கெட்டதே! இத்தனையும் கேட்டுக்கொண்டு இந்தக் கிழவன் மண்போலிருப்பதைப் பார்த்தால் கேஸ் உண்மை யென்பதில் சந்தேகமில்லை. இவன்—என்னை மட்டுமோ?—என் அருமைக் குழந்தை ராதாவையும் கெடுத்துவிட்டானே! இந்தப்பாவியை நம்பினேனே? அந்தப் புண்ணியவதி அநந்த கல்யாணி சொன்னதைக் கேட்டேனில்லையே! அந்தப் பதிவிரதா சிரோமணி இதுவரை ஜீவித்திருந்தால் இவ்வளவு கேவலத்தையும் சகிப்பாளா! உயிரை விட்டுவிடுவாளே! "இவன் பகையால், என் தமக்கை கெட்டழிந்ததுபோல், என் குழந்தைக்கும் கேடுவரப்படாதே!" என்று இவன் பகைக்கஞ்சியல்லவா நான் பெண் கொடுத்தேன்! இவ்வொரு காரணத்தை உள்ளில் வைத்துக் கொண்டல்லவா என் அருமை மனைவியையும் உதறி உதறிப் பேசிவிட்டேன்! என் வழைப்புத்தியால் மோசம் போனேனே! என் மதிப்பும் கௌரவமும் போய் விட்டதே! போய்விட்டதே! இனி என்ன செய்வேன்!" என்று தனக்குட் புலம்பிக் கொண்டே வீட்டிற்குத் திரும்பிவிட்டார்.

கணவனைக் கண்ட காளத்தி "அப்பா எங்கே! அப்பா எங்கே?" என்று ஆவலுடன் கேட்டும் நந்தகோபர் அன்பாய்மறுமொழி சொல்லாமல், சினந்த முகத்துடன் "உங்கள் வீட்டில் நான் சம்பந்தம் செய்து அடைந்த பெருமை போதும்! போதும்! வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே!" என்று வெடுக்காய்ச் சொல்லிவிட்டு மேல் வீட்டிற் போய் படுத்துக் கொண்டார். காளத்தி எத்தனையோ சமாதானம் செய்தும் அன்று முழுதும் அவர் போஜனம் செய்யவில்லை.

நபரைப் பிடித்த மறுதினம் பயங்கரசாமி நாயுடு பாற்கடலையடைந்து நச்சு முதலி பேரில் பிரியாது தாக்கல் செய்து, உண்மையாகவே கேஸில் சம்பந்தமற்ற தண்டபாணியையும் பஞ்சாமிர்தத்தையும் வெளியே விட்டுவிட்டார். நச்சு முதலியின் ஒழிவு காலத்தை ஆவலா யெதிர்பார்த்திருந்த பாற்கடல் பொது ஜனங்கள் குறித்த வாய்தாவில் கோர்ட்டு முற்றத்தில் கும்பல் கும்பலாகக் கூடினார்கள். விசாரணையில் வாதி கருணாநிதி சாஸ்திரிகள், வித்யாஸாகர சர்மா முதலியவர்களோடு தாசி பஞ்சாமிர்தமும் தண்டபாணியும் வாதி பக்கம் சாக்ஷிகளாக விசாரிக்கப்பட்டார்கள். பஞ்சாமிர்தம் தனக்குத் தண்டபாணி ஒட்டியாணம் கொடுத்த உண்மையை மறைத்து நச்சு முதலியே நேரிற் கொடுத்ததாய்க் கிழவன் தலையிலேயே கல்லைத் தூக்கி வைத்துவிட்டாள்! தண்டபாணியும் அவ்வாறே தனக்கொன்றும் தெரியாதென்றும் நச்சு முதலிதான் சிங்கக்குட்டியிடம் கொள்ளைச் சொத்து வாங்கினான் என்றும் சொல்லித் தன் தலையைக்கழற்றிக் கொண்டு வந்துவிட்டான். தன் பிராண சகியும், தன் தமயன் மகனும் தன்னை இவ்வாறு காட்டிக் கொடுப்பார்களென்று சனவிலுமெண்ணியிராத நச்சு முதலி அவ்விருவர் மீதுமடைந்த கோபத்திற் களவில்லை. நோபம் என்ன செய்யும்! பாற்கடற் பட்டணமுழுவதிலும், பிச்சுவையனைத்தவிர நச்சு முதலிபக்கம் ஏதாவது சாக்ஷிசொல்ல ஒரு காகமுங்கூட வரவில்லை. ஆகவே நச்சு முதலிகொள்ளைத் தினத்தன்று தானும் பிச்சுவையனும் மகேந்திரத்தில் நந்தகோபர் வீட்டிலிருந்ததாய் ஸ்டேட்மெண்டு கொடுத்தார். கோர்ட்டார் மறு வாய்தாவில் நந்தகோபரை வருத்தி விசாரித்ததில் அவர் நச்சு முதலியின் ஸ்டேட்மெண்டு பொய்யென்று உண்மையைச் சொன்னதுமன்றி கொள்ளைச் சொத்துக்களைத் தானும் பார்த்திருப்பதாய் அவர் கையொப்பமிட்ட அத்தாட்சியையும் ருஜுச் செய்தார். இந்தக் கேட்ட பிச்சுவையன் தனக்கு மொன்றும் தெரியாதென்று சொல்லி ஓட்டம் பிடித்தான். முடிவில் கோர்ட்டார் நச்சு முதலிக்கு மூன்றுவருஷம் சிறைத்தண்டனை விதித்து, அவர் குடும்பத்தைச் சேர்ந்த தண்டபாணி யவர்களுக்கு முனிசீபு மணியம்வேலை கூடாதென்று தீர்ப்புச் செய்தார். நச்சு முதலியார் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார். தண்டபாணிக்கு மணியம் வேலைதொலைந்தது. தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையோடே போயிற்று" என்று நந்தகோபர் சமாதான மடைந்து, மருமகன் தண்டபாணியை யழைத்து இனிமேலாயினும் ஒழுங்காய்ப் பிழைக்கும்படி புத்திமதி சொல்லிவிட்டு, தன் மக்களைப் பார்ப்பதற்காகப் பூந்துறைக்குப்போய் விட்டார்.

நச்சு முதலி ஒழிந்த நிமிஷமுதல் பாற்கடற் பட்டணமும் பக்கக்கிராமங்களும் அடுத்த மூன்று வருஷகாலமும் இராக்காலங்களில் கல்லெறி, தீப்பிடி முதலிய கவலையற்று ஆநந்தமாயிருந்தன. பையன் தண்டபாணியும் தாசி பஞ்சாமிர்தமும் இது முதல் பகிரங்கமாய் வாழத் தொடங்கி விட்டார்கள்.

(தொடரும்.)

அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார்ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய் தான்

(தபால் செலவு தனி)

டில்பஹார்ஸோப்பு சிறந்த சுத்தி சரிப்பைத் தரும் கிருமி நாசினி. சருமஎரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும்.

உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள்!

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணா. தபால் செலவு தனி; தபால் செலவுக்காக 1 அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட்:—

The Anglo Indian Drug & Chemical Co

285, Jumma Musjid, BOMBAY 2.

ஸ்டாக்கிஸ்டுகள்: ஜே. எஸ். சேட் & கம்பெனி,

68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

நஞ்சன்கூடு சதவைத்யசாலை

ச்யாவன்ப்ராச

சுவாச டானிக்

யுனைடெட் கன்ஸர்ன், பந்தர்தெரு, மதராஸ்

(குழந்தைகளுக்கு நம்பிக்கையான மருந்துகள் இடம்.)

கெற்ப சஞ்சீவி எண்ணெ

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்றுவலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம். சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து [illegible]மம், சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்[illegible] அவளை [illegible]தியா மலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிரு[illegible] டேன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூ[illegible] முள்ள குழந்தை தரிக்கும்.

[illegible]பிக்கப்

1 நபருக்கு 3 புட்டி வேண்டும். [illegible]டம்

1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. சே[illegible]

குணம் இல்லாவிடில் ரூபா 5 வ[illegible]

பழனி வைத்திய ஆசிரியர்

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்திய சாலை,

146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை.

தலைமை ஆபீஸ், பழனி